உ

கடவுள் துணை.

வித்வசிரோமணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

பவளக்கொடிமாலை.

இஃது,

மணிமங்கலம்,

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

பி. நா. சி. கடைகாரியம்

மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பொரித்தாங்கல்.

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.


1914.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது-நெம்பர் வீடு.

இப்புவியோரெல்லோரும் ஒப்பிமனமகிழ
அப்பால்நடந்தகதை அடியேனுரைத்திடுவேன்

அல்லி அரசிருக்கை.

அல்லிப்பெருமாள் அரசாளும்நாயகியாள்
ஆருயிரம்பாண்டியற்கு அரியதுரைமகளாம்
மதுரைநகராளும் வாழ்பாண்டிநாடுடையாள்
நாலுமலையாளம் நடுவானதென்மதுரை
தென்மதுரையாளுகிற தேன்மொழியாளல்லியம்மாள்
ஆணரசாண்டாலே அழிந்துபோம்சீமையென்று
பெண்ணரசாளவென்று பிறந்தாளே அல்லியிலே
ஒருவர்-வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் உள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனில் அலைகாற்றுருநம்புமுண்டு
காலகாலநாதருக்கு கண்டங்கறுப்புமுண்டு
சந்திரற்குமச்சமுண்டு சற்றேகறுப்புமுண்டு
குன்றுமணிக்காணுலும் கொஞ்சங்கறுப்புமுண்டு
அவள்-மயிரேகருப்பொழிய மற்றகைகருப்புமில்லை
புருவங்கருப்பொழிய பின்னேகறுப்புமில்லை
மன்னன்விசையன் மடலூர்ந்தமாதேவி
காளைவிசையன் கட்டழகிமாதேவி
எழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டிக்கொலித்து வீரபட்டங்கட்டிக்கொண்டாள்
பொம்மைவிருதுகட்டி பூமியெல்லாமாளுகிறாள்
அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளைவாய்மூடும்
கொம்பனையாள்பேர்சொன்னால் குருவிதண்ணீர்குடியாது
கட்டழகிபேர்சொன்னால் கல்லுதெய்வங்கூத்தாடும்
அல்லியென்றுபேர்சொன்னால் அறுத்ததலைகொக்கரிக்கும்
கட்டழகியல்லியருங் காலையில்தானெழுந்து
முத்துச்சிவிகையதுவேறிமுருகுகுழலாள்
தாதியருந் தாழியருந் தையல்மார்சூழ்ந்துவர
பூங்காவனச்சோலை போயிரங்கியல்லியரும்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
பொய்கையில்போயிரங்கி பொன்முகஞ்சுத்திபண்ணி
முத்துநிகர்த்தபல்லும் முருக்கம்பூசெவ்வாயும்
காலோடுகைகளுங் கனிவாயுஞ்சுத்திபண்ணி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்பணிந்து
மதுரைமீனாட்சியனை மனதிலேதானினைந்து
சொக்கரடிபணிந்து செவிமீதிற்பூச்சொருகி
சந்தனமும்பன்னீருஞ் சவ்வாதுந்தானணிந்து



அல்லி அரசிருக்கை.

பார்ப்பார்பரதேசி பண்டாரஞ்சங்கமற்கும்
அந்தணர்வேதியற்கும் அதிதிபரதேசியற்கும்
தானம்வழங்கிவர தாமரைசூழ்வாழ்மாரி
தருமத்தைசெய்தவளும் தண்டிகையின்மீதேறி
பூங்காவனத்தைவிட்டு பொற்கொடியும்வாருளே
ஆனையின்மேல்பேரிகை அடிபடுதுகுமுகுமென்று
ஒட்டையின்மேல்பேரிகை ஓசைகிளம்புகுது
பேய்த்தாரையூதிவர பெரியடமாடோலடிக்க
சங்கீதமேளம் சபையில்முழங்கிவர
ஐங்காதவழிதூரம் பேய்த்தாரையூதிவர
நாற்காதவழிதூரம் நாகசுரமூதிவர
முக்காதவழிதூரம் முரசுமுழங்கிவர
தித்திமித்தோமென்று சிறுபெண்களாடிவர
தத்திமித்தோமென்று தாளங்கள்போட்டுவர
கவியர்கவிபாட கட்டியங்களார்பரிக்க
புலவர்புகழ்ந்துவர புட்பங்கள்தூவிவர
நட்டுவர்பாடிவர பாவையர்களாடிவர
ஆடதகூத்துகளும் அரிச்சந்திரநாடகமும்
கேளிக்கைபார்த்துமல்லோ கிளிமொழியாள்வாருளே
தெத்துக்கடந்து தெருவீதிதான்கடந்து
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
அங்காடிவீதிகளும் அரண்மனையுந்தான்கடந்து
மாடத்தெருகடநது மண்டபமருகில்வந்து
பல்லங்கைவிட்டிறங்கி பார்மனையிலுட்புகுந்து
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்து
மாணிக்கக்கிரீடங்கள் மகுடமுடிதுலங்க
தாதியர்கள்சூழ்ந்து தனிக்கவரிவீசிவர
மாதர்புடைசூழ மண்டபஞ்சென்றேறினாள்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
இரண்டாம்படித்தளமாம் இரத்தினகிரிமேடைகளாம்
மூன்றாம்படித்தளமாம் மூத்துச்செம்பொன்படிவாசல்
நான்காம்படித்தளமாம் நாகரத்னமண்டபமாம்
ஐந்தாம்படித்தளமாம் அரக்குமணிமேடைகளாம்
ஆறாம்படித்தளமாம் அழகானமேடைகளாம்
ஏழாம்படித்தளமாம் எழிலானமண்டபமாம்
எட்டாம்படித்தளமாம் எண்ணெய்க்கால்மண்டபமாம்
ஒன்பதாம்படித்தளமாம் ஓலைப்பூச்சாவடியாம்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
ஆயிரக்கால்மண்டபத்தில் அல்லியரும்வந்தமர்ந்தாள்
பொன்னுமலைநாடாளும் போகவதிவந்தமர்ந்தாள்
பன்னிரண்டுமந்திரியும் படைத்தலைவர்வந்தமர்ந்தார்

மந்திரிபிரதானிகளும் மற்றுமுள்ளராசாக்கள்
முன்னூறுகோடி முடிமன்னர்வந்தமர்ந்தார்
நானூறுகோடி நகரத்தார்வந்தமர்ந்தார்
முடியோடுமுடிநெருங்கும் முருகுழலாளம்பலத்தில்
சட்டையோடுசட்டை நெருங்குஞ்சபைதனிலே
அமரதரும்சமரதரும் ஆஸ்தானமகாதரும்
கலிங்கர்தெலுங்கர்களும கன்னடியர்மராட்டியரும்
நிறைந்தகொலுவாயிருக்கும் நேரிழையாளம்பலத்தில்
அப்பெரியசபைதனிலே அல்லியவள்கொலுவிருக்க
காணவருவாரும் கைகட்டிநிற்பாரும்
பார்க்கவருவாரும் பாண்டிப்பெருமாளை
தூரத்துராசாக்கள் சுருளோலைகொண்டுவந்தார்
காதத்துராசாக்கள் கைவோலைகொண்டுவந்தார்
செம்பொன்னும்பூட்டிவருந் தீவுகிளிப்பிள்ளைவரும்
இந்தவிதமாக யிருக்கின்றவேளையிலே

புலந்திரன் விளையாடல்.

அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனும்
செண்டுமறவானுஞ் சினேகிதரைப்பிரியானும்
கோட்டைமறவானும் கூட்டாளிபிரியானும்
தாயாரைச்சுற்றிவந்து தயிருக்கழுவானும்
பாதத்தைச்சுற்றிவந்து பாலுக்கழுவானும்
விளையாடிவீட்டில்வந்து வெண்ணெக்கழுவானும்
வாயைமுகந்தாக்கால் முலைப்பால்கவுச்சடிக்கும்
வீதிவிலாசமதாய் விளையாடும்வேந்தனவன்
தங்கத்தேரோட்டி தனஞ்செயனூர்வீதியெல்லாம்
செம்பொன்தேரூட்டி திகழ்வேந்தர்வீதியெல்லாம்
மாணிக்கத்தேரூட்டி மன்னர்தெருவீதியெல்லாம்
முத்துத்தேரூட்டியே முடிமன்னர்வீதியெல்லாம்
வசந்தமணிமண்டபத்தில் வழியேவரும்போது
பஞ்சவர்ணக்கிளிகளைக் கண்டந்தபாண்டியனும்
இப்படிக்கொத்ததோர் இயற்றவென்றுபுலந்திரனும்
தாயார்கொலுவிற்கு வந்தான்புலந்திரனும்
தண்டையசைய சதங்கைகலகலென
அரைவடமுங்கிண்கிணியு மரையில்கிழல்காட்ட
கண்டசரமும் கனவயிரத்தாழ்வடமும்
மார்பில்பதக்கமின்ன வச்சிரக்கபாய்கள்மின்ன
வட்டமிட்டநெற்றியிலே வயிரமுடிதுலங்க
பட்டுதட்டிஒட்டியாணம் பசும்பொன்னால்சமுதாடு
கட்டுபுரண்டாடக்கட்ட ழகன்வாறுனும்
சிறுகால்மிதியடியாம் சிங்காணிவில்லழகாம்

பக்கமிருபுரமும் பரிசுபிடித்துவர
கட்டழகன்பின்னாக கத்திசுழட்டிவர
ஈட்டிபிடித்தவர்கள் இருபுறமும்சூழ்ந்துவர
தாயார்கொலுச்சபையில் தார்வேந்தன்வந்துநின்றான்
வந்துநின்றதன்மகனைக் கண்டந்தவாழ்மாரி
அப்பாவருக அழகானகண்மணியே
பிள்ளைகலிதீர்த்தவனே பெருமாளேவாருமென்றாள்
கண்மூன்றுடைய கைலாசநாதனே
அண்டத்துசந்திரனே அருகிருக்கும்பாற்குடமே
சொக்கர்திருமாளிகைக்கு தூண்டாமணிவிளக்கே
வைகைக்கரைதனக்கு மண்சுமந்தசொக்கரே
கப்பலுஞ்சோங்கும் கரைதுறையுமுள்ளவனே
சங்கீன்றமுத்தே சலாபமுடையவனே
ஆயிரம்பாண்டியற்கு அழகானபேரனேயோ
வாராய்மகனேயென்று வாரிமடியில்வைத்து
ஏந்திமடியில்வைத்தாள் இருகொங்கைபாலொழுக
சட்டையைநீக்கியே சரீரமெல்லாமுத்தமிட்டாள்
உச்சிமுகந்தாளே உள்ளங்கால்முத்தமிட்டு
மைந்தனைபுலந்திரனை மடிமேலேவைத்திருந்தாள்
என்னவேணுமென்மகனே எனக்கரியக்கூறுமென்றாள்

புலந்திரன் தாயாரைப் பவளத்தேர்கேட்டது.

எண்ணிப்புலந்திரனும் ஏங்கியுரைக்கலுற்றான்
தாயார்முகம்பார்த்து தார்வேந்தனேதுரைப்பான்
உலகாதியாகையினால் உன்மைந்தனுனபடி
மதுராபுரிதுரையாள் உன்மைந்தனுனபடி
நானேறிவிளையாட யியலானதங்கரதம்
தங்கத்தேர்தந்தாரே தனஞ்செயனென்பாட்டன்
மாணிக்கத்தேர்தந்தாரே மன்னர்துரைராசாக்கள்
சித்திரவீதிகளும் சிறப்பானதோப்புகளும்
மட்டில்லாவீதியது மதுரைப்பெருந்தெருவில்
செம்பொன்தேர்தந்தாரே திகழ்வேந்தனென்பாட்டன்
வாழ்பாண்டிநாடும மதுரையுஞ்சுற்றிவர
பாண்டிப்பெருமாளே பவளத்தேர்வேண்டுமம்மா
போசனங்கள்வேண்டாமென்று பிணங்கினானிந்திரனும்
மைந்தனதுவார்த்தையை கேட்டந்தவாழ்மாரி
கேளாக்கருமத்தை கேட்டாயேகண்மணியே
தங்கத்தேர்வேண்டிக் கேளாமல்கண்மணியே
முத்துத்தேர்வேண்டி முடிமன்னுங்கேளாமல்
மாணிக்கத்தேர்வேண்டி மைந்தனேகேளாமல்
என்னுடைபாக்கியத்தில் இல்லையேபவளமது

இல்லாக்கருமத்தை கேட்டீர்புலவோனே
என்று-உற்றுநின்றாளே ஒருகோடிபுத்திகளை
மைந்தனவன்கேட்ட [illegible]
அப்பெரியசபைதனிலே ஆனந்தமா[illegible]முன்னே
ஆயிரம்பாண்டியர்கள் ஐயன்மார்சபைதனிலே
வேந்தர்சபைதனிலே மெல்லியருமேதுரைப்பாள்
என்னுடையகொலுவிலே யிருக்கின்றராசர்களே
மந்திரிபிரதானிகளே வாய்மொழியைக்கேளுமென்றாள்
பாலன்புலந்திரற்குப் பவளத்தேர்வேண்டுமம்மா
அறிந்தாலுரையுங்கள் அழகானராசர்களே
இவ்வார்த்தைகேட்டு யேதுரைப்பார்மந்திரிகள்
இங்கேகிடையாது இயலானநற்பவளம்
வடக்கேவெகுதூரம் வண்மைதிவாந்தரத்தில்
திவாந்தரக்காட்டில் செம்பவளம்விளைகிறது
பன்னிருகாதவழி பவளம்விளைகிறது
அங்கேயிருக்குதம்மா அழகானநற்பவளம்
கொண்டுவருவாருண்டானால் கொப்பெனவேசீரனுப்பும்
என்றதுகேட்டு யேதுரைப்பாள்வாழ்மாரி
என்னுடையசபைதனிலே யிருக்கிறராசர்களே
திவாந்தரத்துக்குப் போறதுரைகளுண்டோ
போறதுரைகளுண்டோ புறப்படுங்களிச்சபையில்
தாம்பூலம்வாங்குங்கள் சமர்த்துள்ளராசர்களே
பூநூல்தரித்தொரு புண்ணியராசர்களே
கத்திகட்டும்ராசாக்கள் கனத்ததுரைகளுண்டோ
மீசையுள்ளராசாக்கள் வெளிப்பட்டுவாங்களென்றாள்
நாடுதருவேன் ராச்சியம்நான்தருவேன்
பூமிதருவேன் புதுப்பட்டங்கட்டிவைப்பேன்
என்னைப்போல்ராசாவாய் இனிப்பட்டங்கட்டிவைப்பேன்
வல்லமையுண்டானால் வாங்குங்கள்தாம்பூலம்
என்றதுகேட்டவுடன் இயலானமந்திரிகள்
பட்டத்துமந்திரிகள் பார்வேந்தரோதுரைப்பார்
மதுரைப்படைத்தலைவர் மந்திரிகளேதுரைப்பார்
அல்லிப்பெருமாளே ஆச்சியமேநீர்கேளும்
பிறந்தோம்மதுரையிலே வளர்ந்தோம்மதுரையிலே
மதுரைக்கு அப்பாலே வனமொன்றுநாமறியோம்
அறிந்துபோய்சொன்னாலே ஆக்கினைகள்செய்திடுவாய்
உன்-ஆக்கினைக்குத்தான்பயந்து ஆச்சியமேபோனாலும்
பவளம்விளைகின்ற பலமான அக்காட்டில்
ஆனைத்தலையை அறியுங்கதண்டுகளும்
சிங்கத்தலைபோ லிருக்குமாஞ்செங்குளவி

குதிரைத்தலைபோ லிருக்குமாங்கருங்குளவி
காதிலேகேட்டதுண்டு கண்ணினால்கண்டதில்லை
தீவுக்குப்போனவர்கள் திரும்பிவந்துசேர்ந்ததில்லை
என்றதுகேட்டிருப்போம் இனியொன்றுகாமறியோம்
எங்களால்முடியாது என்றார்கள்மந்திரிகள்
இன்னமொருவார்த்தை ஆச்சியமேகேள்சேலும்
அருச்சுனரைத்தானழைத்தால் ஆகுமிந்தக்காரியங்கள்
அவரைப்போல்சேவகர் ஆருமொருவரில்லை
சீமைசீமைதேசமெல்லாந் திரிந்துவந்ததோர்விசயன்
எங்கெந்தராசாக்கள் எதிர்ப்பாரொருவரில்லை
அவருக்குமிஞ்சினவ ராண்மையுள்ளாராருமில்லை
ராசாக்களானாலும் ராட்சதர்களானாலும்
எதிர்த்துவந்தபேர்களை இருதுண்டாய்ப்போட்டிடுவார்
அவரையழைத்துநீ அனுகூலம்பண்ணாலே
மைந்தனுக்குப்பவளத்தேர் வந்துவிடுமப்போது
மற்றொருவர்தன்னாலே யகாதுமாதாவே
என்றதுகேட்டாளாம் எரிபறந்துகண்சிவந்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கோபமானாள்
ஆறாதகோபமது ஆனது அல்லியற்கு
கொல்லுங்குருவியைப்போல் கோபித்துக்கண்சிவந்து
மந்திரிகளாகையினால் மனம்பொருத்தேனிப்போது
மற்றொருவனானக்கால் வயிரமுடிகொய்திடுவேன்
தனிப்பட்டங்கட்டியே தனிஅரசுஆண்டேனே
பெண்பட்டங்கட்டியே பூமியரசாண்டேனே
மாலூர்ந்தஎன்னை மாலையிட்டார்வாள்விசையன்
மன்னன்புலந்திரனார் பிறந்தபிறகாக
அப்போதுவாள்விசைய னர்ச்சுனனிங்கேவந்தார்
எங்குவந்தியென்றுநான் கேட்டேனேயப்போது
அதுவேயொருகுற்றமதாய் ஆயாசப்பட்டவரும்
என்னைக்-கும்பிட்டுப்போனாரே குலவிசயனருச்சுனரும்
மைந்தன்பிறந்து வயதுமேஐந்தாச்சு
இத்தனைநாள்வரைக்கும் இங்கேவந்தாராருமில்லை
வாராதஅருச்சுனரை வணங்குவேனோமந்திரியே
நாடாளும்ராசாத்தி நானோவணங்குவது
என்றதுதான்கேட்டு எதுரைப்பார்மந்திரிகள்
புருஷனுக்கும்தேவியற்கும் பெரும்பகைகளுண்டாமோ
அரிசிகுறைவுமில்லை ஆளன்பகையுமில்லை
வரிசையுடன்வணங்கி வரவழைத்தீராமானால்
கணவனுக்குவணங்கினால் கனமோசமொன்றுமில்லை
இதனாற்பழுதுமில்லை என்றார்கள்மந்திரிகள்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமேதுரைப்பாள்

ஐந்துவருஷமாய் அவரைமறந்திருந்தேன்
மறந்திருந்த அருச்சுனரை வரவழைத்தேனானாலே
மோகத்தினாலே வரவழைத்தேனென்பார்கள்
ஊரிலேயுள்ளவர்கள் உலகாண்டராசாக்கள்
காட்டிலேயுள்ளவர்கள் நகைப்பார்களிப்போது
கண்டார்சிரிப்பார்கள் கலியுகத்தாரேசுவார்கள்
பார்த்தார்நகைப்பார்கள் பார்லோகமேசுவார்கள்
எப்படியழைப்பிப்பேன் இயலான அர்ச்சுனரை
என்றதுகேட்டவுடன் மந்திரிகளேதுசொல்வார்
தந்தார்பெருமை யுண்டானால்தார்குழலே
பெற்றார்பெருமை யுண்டானால்மாதாவே
வளர்த்தார்பெருமை உண்டானால்தாயாரே
கொண்டார்பெருமை வேண்டாமோகொம்பனையே
கணவன்பெருமை வேண்டாமோகாரிகையே
ஆளன்பெருமையது வேண்டாமோஆரணங்கே
ஆனைகுதிரைகளை அரண்மனையில்கட்டிவைத்து
குதிரைகளைக்கட்டியே கோடித்துவாழ்ந்தாலும்
ஆளனிருந்து ஆளாதரசுமுண்டோ
புருஷனுமில்லாப் பெருமைகள்செய்வாரோ
காவலர்கள்கோவிலிலே கைம்பெண்டிரென்பார்கள்
மன்னவர்கோவிலிலே வாழாப்பெண்டென்பார்கள்
கொண்டார்பெருமை வேண்டாமோபொற்கொடியே
புருஷன்பெருமை வேண்டாமோபொற்கொடியே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
வம்பரவரர்ச்சுனர்க்கு விண்ணப்பஞ்செய்வதில்லை
மகாராசர்தருமருக்கு விண்ணப்பஞ்செய்வேனான்
ஆடாதூதுவரே அழையுங்கள்கணக்கர்களை
நாட்டுக்கணக்கெழுதும் நலமானமந்திரிகள்
சீமைக்கணக்குகள தெரிந்தெழுதும்மந்திரிகள்
கோட்டைக்கணக்குகள் குறித்தெழுதும்மந்திரிகள்
ஊர்கணக்கப்பிள்ளைகளை ஓடியழையுமென்றாள்
அவ்வார்த்தைகேட்டுமந்த ஆங்காரதூதுவர்கள்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தூதுவர்கள்
கருணீகரானவரைக கணக்கெழுதும்மந்திரிகள்
அல்லிப்பெருமாளும் அழைத்துவரச்சொன்னாளே
அவ்வார்த்தைகேட்டவுடனன்பாகக்கணக்கரெல்லாம்
கடுகப்பயந்தார்கள் கணக்குச்சுமையெடுத்தார்
எக்கிலெழுத்தாணி இடதுகையில்சுருளோலை
விண்ணக்குறுத்தோலை வரிசையுடனகைப்பிடித்து
உச்சிகொண்டைபோட்டார்கள் உதறிநடந்தார்கள்
இங்கிதனத்துக்கு முன்னாகவந்தாரின்று

அல்லிப்பெருமாட்டு அடிபணிந்துதெண்டனிட்டார்
வந்தக்கணக்கருக்கு வட்டமணைபோட்டார்கள்
மணிதடுக்குப்போட்டார்கள் வந்திருங்களப்பாவென்றாள்
தர்மாபுரமாளும் தர்மலிங்கராயருக்கும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அக்கைமார்குந்தியற்கும்
வண்ணமிட்டஓலையிலே வக்கணையாயெழுதவேணும்
என்னவென்றுஓலையிலே எழுதுகிறீராணுலே
சோலைமலருடைய சொக்கர்திருவருளால்
ஸ்ரீரங்கநாதர் திருமால்கிருபையினுல்
மதுரைமீனுட்சியம்மை மாதாகிருபையினுல்
அல்லியின்மேலே ஆணக்குபெண்பிறந்தேன்
பெண்ணுய்ப்பிறந்து பெருமாளமுடிசூட்டி
அன்னமபோல்மண்ணுண்டேன ஐம்பத்தாறுகாதவழி
தர்மர்திருவுளத்தால் தரணிபதியாண்டிருந்தேன்
இன்னுள்வரைக்கும் ஏதுகுறையில்லாமல்
வையகத்தையாண்டிருந்தேன் மனக்குறைகளில்லாமல
உங்கள்-செல்வக்குழந்தையது தேவேந்திரன்பேரன்
ஐந்துபிராயமையா அழகாய்வளர்ந்தபிள்ளை
செண்டடித்துப்பந்தடித்து தெருவில்விளையாடி
பொன்னின்தேரோட்டியே போதவிளையாடி
தங்கத்தேரோட்டியே தனிந்துவிளையாடி
வெம்பலாய்க்காய்ந்து விழுந்துபடுக்கையிட்டான்
பல்லைக்கடிக்கிறதும பதறிவாய்ப்பினத்துறதும்
தலையைப்புரட்டுறதுந் தாகமெடுக்கிறதும்
நாக்கைவரட்டுறதும் நயனங்கள்சோர்கிறதும்
பார்த்தபரிகாரி பண்டிதர்பணிக்கர்களும்
தோஷித்துபோச்சுதென்று சொன்னர்களெந்தனுக்கு
கைதப்பிக்காணுதென்று கற்பித்தாரென்னேட
என்னமோவேதாவென திருக்குதுஎன்மனதில்
பொய்சொன்னேனென்று எண்ணுதீர்புண்ணியரே
ஓலைகண்டநாழிகைக்கு வரவேணுமுத்தமனே
கண்ணுலேபார்க்குமைக்கு கடுகெனவேவர்திடுங்கள்
என்றதுசொல்லியே எழுதுங்களோலையென்றாள்
சீர்கணக்கப்பிள்ளைகளும சொல்வசனந்தான்கேட்டு
சேமக்நறுத்தோலை சுருக்கெனவேதான்வாரி
அல்லிமாமாள்சொற்படிக்கு அவ்வோலைதானெழுதி
ஓலைச்சுருளமடிதது செகதிர்கையைதான்போட்டார்
சக்காய்நல்லமுத்திரை திருகுபபின்கீழ்போட்டார்
அவ்வோலைதானெடுத்து ஆனந்தவாழ்மாரி
காற்றிலதிகமுள்ள கடுந்தூதரையழைத்து
நாழிகைக்குகாதவழி நடந்தோடுந்தூதுவரே

தருமருக்குக்கொண்டுபோய் கொடுமென்றுரைக்கையிலும்
மலைபோலேதலைகொடுக்க மன்னனெழுந்திருந்து
ஓலைச்சுருள்வாங்கி வோங்கநடக்கலுற்றான்
மதுரைதனைக்கடந்து வைகைக்கரைகடந்து
காடுகடந்து கரியமலைதான்கடந்து
சில்லென்றுபூத்த செடியும்வனங்கடந்து
புல்லென்றுபூத்த புலியின்வனங்கடந்து
ஓங்கிவளர்ந்தநெடுமூங்கில்வனங்கடந்து
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்து
தருமாபுரமருகில் தான்வாறான்தூதுவனும்
பத்தாம்படியில் பவழக்கால்மண்டபத்தில்
தருமரிடகொலுவுக்குத் தான்வந்தான்தூதவனும்
ஓலைச்சுருள்வைத்து உத்தமனுந்தெண்டனிட்டான்
ஆர்பணிதூதா நீ அறியவுரையுமென்றார்
மதுராபுரியாளும் வாழ்வரசிபல்லியம்மாள்
அவள்பணியென்றுசொல்லி அடிவணங்கித்தெண்டனிட்டான்
ஓலைச்சுருள்விரித்தார் உத்தமனார்தருமலிங்கம்
அதிலிருக்குமர்மமெல்லாந் தருமலிங்கந்தானறிந்தார்
நமைமதித்தாளே நாடாளும்ராசாத்தி
ஐயோமகனேயென்று அழுதுபுலம்புகிறார்
சிவசிவாவென்றுசொல்லி சோர்ந்துமேதான்விழுந்தார்
தம்பிவயற்றிலே பிறந்ததனஞ்செயனே
மதுரைநகராளுகைக்கு மைந்தனென்றுநானிருந்தேன்
தீர்ந்துதேஉன்றனுக்கு சிவலோகம்போனாயோ
சொக்கரிடபாதஞ் சேருகைக்குநாளாச்சோ
ஐக்கியமாய்ப்போகவே ஆச்சுதோஉன்சிவன்
பொன்னுமணியே புலந்திரராசாவே
அல்லிமகனே அழகுபுலந்திரனே
கட்டிமகனே கயிலாயம்போனாயோ
பொன்னுங்குடமேநீ புஷ்பகமேபோனாயோ
கோவென்றசத்தமுடன் குமுறிப்புலம்பலுற்றார்
வெற்றிமதயானை வீமனவனுங்கேட்டு
தானுமழுதானே தருமருடனாக
நகுலசகாதேவராசர்புலம்பலுற்றார்
மநதாபக்குந்தியரும் மாதாவும்புலம்பலுற்றார்
சங்கோதியாள்கூடத் தானும்புலம்பலுற்றார்
அந்தநகருடையநாடும் அரசுநகரும்பினது
தக்கபுகழுடைய தருமாவமேதுசொல்வார்
வில்லாளிபார்த்தன் விசையனெங்கேசென்றானோ
அர்ச்சுனனைக்கண்டுநான் ஐந்தாறுநாளாச்சே
எங்கேதிருப்பிடமோ ஒன்றுமறியேனே

ஆரடா நாலவரே அழையுங்கள் கோட்டி தன்னை
தமுக்கடிக்குங் கோட்டியைத் தானழைத்து வாருமென்றார்
என்றுசொல்லத்தான்கேட்டு எழுந்தோடி நாலவர்கள்
பறைபறையுஞ்சாம்புவனை பார்த்தழைத்துவாருமென்றார்.
தருமனண்டைவந்தவனும் சாஷ்டாங்கந்தண்டனிட்டான்
என்னையழைத்தது எதுகருமமென்றான்
அப்போது தருமலிங்கம் ஆணையாகத்தான்சொல்வார்
பாரோருந்தருமருக்கு பாக்கதுசொக்கிற்றென்று
மெத்தவேபல்லிக்கை காணுதேவந்தனுக்கு
விசயப்பெருமானை முகத்தில்விழிக்கவென்று
கண்தாங்கிப்போச்சுது கட்டழகர்தருமருக்கு
விஜயப்பெருமானை வைத்திருந்தால்விட்டிடுங்கள்
என்று-தருமபுரமெல்லாம் தமுக்கடித்துவாருமென்றார்
வீதிபதினாயிரம் வீரமுரசடியுமென்றார்
இவ்வார்த்தைதான்கேட்டவனும் எழுந்தானே சாம்புவனும்
ஆனையேறிமாலைசூடி அடித்தான்பறையோசை
தருமபுரிவீதியெல்லாந் தமுக்கடித்தானவனும்
என்னசொல்லித்தமுக்கடித்தான் இவனானசாம்புவனும்
பாரோருந்தருமருக்குப் பாக்கதுசொக்கிற்றென்று
கண்தாங்கிப்போச்சுது கட்டழகர்தருமருக்கு
பேச்சுமூச்சில்லாமல் பிணம்போல்விழுந்துவிட்டார்
அனைவோருமங்கே அழுதுபுலம்புகிறார்
அர்ச்சுனராசாவை யார்வைத்திருந்தாலும்
கண்டவர்கள்விட்டிடுங்கள் கூறியனுப்பிடுங்கள்
என்றுஅடித்தானே இவனானதமுக்கோசை
சொல்லியடித்தானே தேர்வீதியனைவர்கேட்க
தேவதாசிகளிருக்குந் தெருவுபதினாயிரமும்
அந்தெருவுபெண்களெல்லாம அனைவோருமேதுசொல்வார்
நானருச்சுனரைக் கண்ணாலேகண்டதில்லை
எங்களிடவீதியிலே எழில்விசயன்வரவில்லை
மாதுசுபத்திரையாள் மச்சினியாள்வீதியிலே
அங்கேயிருப்பாரான் அருச்சுனவீரியனும்
அவர்சுத்தருவேயென்று சாமத்தில்கண்டதுண்டு
உத்தமனைவென்றுசொல்லி முகத்தில்கண்டதுண்டு
ஓமப்புகையிலேதான் உடனிருந்தபோதுகண்டு
சாகசத்தனைவிரிக்கு மைக்கநின்றதுண்டு
அப்பெரித்ததுண்டு அருந்தப்பார்த்ததுண்டு
ஆரானிவனென்று அனைவோருஞ்சொல்லுவார்கள்
இவ்விடம்வாரார் எழில்விசயனருச்சுனரும்
இடைச்சியுடமாளிகையில் இருப்பாரென்றுதக்காமல்
அவர்-அந்தத்தெருவிடத்தை அப்போதேதேடுகிறார்

சுபத்திரையாள்வீதியிலே செப்போலைமுழுக்கிவைத்தான்
தருமருக்குலஞ்சகோதரர் நம்செல்லாஞ்சொல்லதுற்றார்
அடிக்கதவுக்கோசை அருச்சனருங்கேட்டுவிட்டார்
தேர்விசையன்கோபமாய் செப்பேட்டெடுத்தணெழுந்தார்
பஞ்சணைவிட்டுமவன் பகரவெழுந்திருந்தார்
சுபத்திரையாள்கண்ணை விழித்தவளுமேதுசொல்வாள்
ஆர்வாசல்செல்ல எழுந்தீர்காணழகா
எவள்வாசல்செல்ல எழுந்தீர்காணெழில்விசையா
தீயிற்பிறந்தவளை சிந்தையில்நினைத்தீரோ
மின்னொளியாள்வாசலுக்கு மேவநினைத்தீரோ
நாககன்னிவாசலுக்குப் போகநினைத்தீரோ
மதுரைதுரையல்லியரை மனதில்நினைத்தீரோ
மற்றொருவரைசிந்தையில் நினைத்தீரோமன்னவரே
ஆர்மேலேயாசைகொண்டு ஆணழகாநீயெழுந்தாய்
என்றவள்கேட்டவுடன் எழில்விசையனேதுசொல்வான்
அல்லகாண்பெண்ணரசே ஆரணங்கேநீகேளாய்
பாராளுந்தருமருக்கு பாக்கதுசொக்கினதாம்
மெக்கவும்பல்லிக்கை தோணுதாய்வேந்தருக்கு
அதிவிளைப்பாயிருக்குது சாமமுடிமன்னனுக்கு
முகத்தில்விழிக்கவென்னை மொய்குழலேநீதடுத்தார்
அது-என்னகருமமென்று அறிந்தோடிநான்வாறேன்
சித்தாயன்தங்கையவள் சுபத்திரையாளேதுசொல்வாள்
தருமராதுவாசலல்லால் தையல்மார்வீட்டுசென்றால்
மற்றொருத்திவீட்டுநீ சென்றாலோவிசையா
நீ-உண்ணும்போதேயல்லாமல் உண்ணேன்காண்பாலமிர்தம்
நீ-திருந்தியபோதேயல்லால் தின்னேன்நானடைக்காயும்
என்றதுதான்கேட்டு எழில்விஜயனேதுசொல்வான்
உன்னைத்தனியாய்விட்டு உலகளந்தான்தங்கையரே
இன்னொருத்திவாசலுக்குப் போறேனென்றெண்ணாதே
அண்ணனைத்தான்பார்த்து அரைச்சணத்தில்வாரேன்டி
பாலடிசிலுண்டுநீ பாக்காயுமுதிசெய்து
பாயசங்களுண்டு மகிழ்ந்திருங்காண்மங்கையரே
வாடாதேநீயிருங்காண் மாதரிளங்கொடியே
போகச்சிலவருளும் போய்வாரேன்பெண்ணேயென்றார்
தளராதசேவைதர வேண்டியதையலரே
தாழாமேநீயிருந்து சற்றேசெலவருளும்
மாதுசுபத்திரையாள் வாய்திறந்தேதுரைப்பாள்
ஆகிலும்உம்மைநான் அடையாளஞ்செய்திடுவேன்
அடையாளங்குறையாமல் அர்ச்சுனரேவாருமென்றாள்
வைத்தஅடையாளம் மாறுபடவாருமென்றாள்
சந்தனமுங்குங்குமமுஞ் சவ்வாதுதானுங்குழைத்து

அர்ச்சுனன்மார்மேலே அன்னியமாகுந்தானே
சர்ப்பனக்காலிலே சறாய்ப்படமெழுதி
அங்கமெத்தாலே ஆதிமாய்ப்படமெழுதி
மூக்கினைமோதிரத்தால் மன்மார்பில்குரும்பைவைத்தான்
மொத்தித்தகாசுகளுக்கு மயிலிணைபோலேபொருக்கால்
டன்னுரியத்தக்கப்பிடிமோ கொம்பேரிடையாளே
டன்னுதினைவத்தக்கப்பிடிமோ அனங்கவாழ்மாரி
இருபிருமென்றுசொல்லி எழில்விசையன்போய்நடந்தார்
தீண்டிமுன்காலனுக்கு கெரிஞ்சிப்பூசல்லடமாம்
மண்டிப்பின்காலனுக்கு மாதளம்பூசல்லடமாம்
குத்திப்பின்காலனுக்கு குரிஞ்சிப்பூசல்லடமாம்
தாக்கிப்பின்காலனுக்கு தக்கிப்பூசல்லடமாம்
சக்கிராக்கிநட்டிகட்டித் தாமரைப்பூசுந்துவிட்டு
சிங்காளிவில்லெடுத்து தேர்விசையன்போய்நடந்தார்
பொன்னிறந்தபட்டாடை பூமியிற்புரண்டமுவார்
பூஞ்சாவனம்புகுந்து புட்பமலெடுத்து
தாமரைப்பூசைப்பண்ணச் சம்பங்கிபூபறித்து
வாய்மேவகமாகவே வந்துவிட்டான் அர்ச்சுனனும்
வீதியர்சிவ திருவடமர்தாண்டி
திருவாசக்கின்ற காசிலிங்கமேடையிலே
சாத்தளிக்கமேடையிலே தருமனைத்தான்பார்த்து
தருமன்பாதத்திலே சாஷ்டாங்கந்தெண்டனிட்டு
சொல்லுவர்சபுமலைக் குருவேயென்றுதான்போட்டு
அன்றாசனமென் றடிபணிந்துதெண்டனிட்டான்
கண்டுநின்றானே கட்டமுகன் அர்ச்சுனரும்
வந்துமனமிச்சவனே வாழ்த்திப்பிடித்தணைத்து
வைக்கிறேவாய் வையகத்தையாண்டிருவாய்
தெரிப்பாய் விசயாசாண்டிருவாய்
கற்பித்தகாலம்போலே கலந்துமலைசாள்வாய்
பதினறுபேருடைய பார்த்திபர்க்கேளாய்
மணாபுரித்துரையான் வாழ்வாசியல்விமகன்
பார்த்திபனுடன்பகன்தான் பாலன்புலந்திரனும்
செண்டடித்தப்பந்தடித்துத் தெருவில்விளையாடி
கோட்டிவிளையாடி வீட்டில்வந்தபாலகன்தான்
களைக்கத்தேபோல்மேழுந்தானும் காளைபுலந்திரனும்
சாய்ச்சலாய்சாய்கிறதும் கண்ணைச்சொரிகிறதும்
வெம்பலாய்க்காய்கிறதும் மெத்தவாய்பினத்துறதும்
நயனக்கள்பற்றாடைந்து நாக்கைவரட்டுறதும்
தோழித்தபோலத்தாய் தோனுத்தாமைந்தனுக்கு
பண்டிதர்பணிக்கர்களும் பார்த்தவைத்தியரும்
வைவிட்டுப்போனதொரு கட்டமுகாஉன்மகனை

முகத்தில்விழித்திலென்று முடிபுனைக்குசாத்தி
துகிலெடுத்தே வாசிட்டாருந்தமரி
சேதிசமாச்சாரம் கூறுவோரில்லைக்கேட்க
போகாதிருந்தாக்கால் பிழைவராதிக்கருக்கும்
ஆகையினால்தம்பியரே அர்ச்சுனன்தம்போய்வாருதும்
அச்சுதானந்தனை ஐயனைக்கூட்டிப்போம்
அவள்-ஆங்காரக்கள்ளியென்று அறிவோமவள்குணத்தை
மன்னுணும்ராசாத்தி வலக்காரமுள்ளவள்காண்
அவள்-வார்த்தைக்குவார்த்தை மறுவார்த்தைபேசாதே
மைந்தன்புலந்திரற்கு பல்லிக்கைதீராவும்
உடம்புதெளிந்து உலாவித்திரியாளவும்
வாழ்மதனைராச்சியத்தில் மன்னுதனித்திருந்து
மைந்தன்புலந்திரனை மன்னவனெழுந்து
குமாரனைக்கூட்டிவந்து குருநாடிசேருமென்றார்
என்வார்த்தைதள்ளாமல் இட்சணமேநடவுமென்றார்
போய்வாருமென்றுசொல்லி புத்திமதியுரைத்தார்
அப்போதருச்சுனனும் அப்படியேதானென்று
குந்தியம்மாள்தன்பாதம் பொற்பெருமேவணங்கிவிட்டார்
தாயாருடபாதம் சாஷ்டாங்கந்தெண்டனிட்டான்
மதனைக்குப்போய்வாரேன் மாதாவேசெலவருளும்
போய்வாருமருச்சுனரே என்றாளேபொற்கொடியும்
வெற்றிமகாராஜா வீமாசெலவருளும்
அத்தண்டபேரும் அனைவோருஞ்செலவருள
முகத்திலேவிழியிட்டு முடிமன்னர்தானெழுந்தார்
வருத்தமாகிறாய் ஈஸ்வரன்துணையிருப்பான்
மைந்தன்புலந்திரற்கு வாட்டமொருக்காலுமில்லை
மாயன்துணையிருப்பார் வாழ்மிசையாய்போய்வாரும்
சொக்கர்துணையிருப்பார் சுந்தரரேபோய்வாரும்
என்றதும்விட்டு எழுந்தானருச்சுனனும்
அச்சுதானந்தையனுந்தானுமாய்
தோழனுந்தானுமாய் துரிதமாய்நடந்தார்கள்
கோட்டைகடந்து கொத்தளமுந்தான்கடந்து
தர்மாபுரங்கடந்து தானடந்தானருச்சுனனும்
காடுகடந்து அரியமலைதான்கடந்து
ஆறுகடந்து அரியகானகடந்து
கல்லென்றகாடுஞ்செடியுமடர்ந்ததுங்கடந்து
வைகைக்கரைகடந்து மதுராபுரிதேடி
தோழனுந்தானுமாய் துரிதமாய்நடந்தார்கள்
சந்நிதியிலுள்ளவரைக் கண்டானேவாழ்மிசையன்
அச்சுதானந்தையர் முகமேநோக்கி

மைந்தன்புலந்திரற்கு வாட்டங்களுண்டானால்
தப்பாதே நாகமதி தலையைத்தான் சீவுவாள்
என்னைக்கண்டு ... எல்லாப்பலம்பாதே
மைந்தன்புலந்திரற்கு வாட்டம் ஒன்றுமில்லை
எத்தைநினைத்தாளோ நாடாளும்ராசாத்தி
முன்னதுபூசல் மதனைநினைத்தாளோ
அகங்காரக்கன்னியென்று அறியேனேயவள்குணத்தை
அச்சுதானந்த ஐயரும்கூறிவார்
அவள்-வார்த்தைக்குவார்த்தை மறுவார்த்தைபேசாதே
சொல்லுக்குச்சொல்லு சொல்தள்ளிப்பேசாதே
நீர்-முன்னேநடவுமென்று முகப்பணியிலுட்கார்ந்தார்
வாள்விசையன்கோபாலும் வந்தானரண்மனைக்கு
அங்கிருக்குந்தூதுவர்கள் அருச்சுனனைக்கைதொழவும்
உங்கள்துரையெங்கேயென்றார் உலகாளும்ராசாவும்
ஆயிரக்கால்மண்டபத்தில் அங்கேயிருக்கிறார்கள்
என்றதுகேட்டு எழில்விசையன்தான்நடந்தார்
மாணிக்கமண்டபத்தில் வாள்விசையன்போய்நடந்தான்
கொம்பனைக்குமுன்வந்து கும்பிட்டான்வாள்விசையன்
கைபிடித்துக்கும்பிட்டான் காணாதஅர்ச்சுனனும்
வணங்கின அர்ச்சுனனை வாவென்றழைக்காமல்
ஏனென்றுகேளாமல் ஏறமுகம்பார்க்காமல்
நின்றேயருச்சுனனும் நெடுங்கால்கடுத்துவிட
இருகால்கடுத்துவிட இருநாழிநின்றானும்
ஆணழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
ஒரு-ஆளடிமையென்றாலும் அரசாளுநாயகமே
வந்தவாரென்று வினவியேகேளாமல்
எங்குவந்திரண்டாமோ ராசகுலப்பெண்பெருமாள்
என்றதுதான்கேட்டு இளங்கொடியாளல்லியரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
மன்னவருச்சுனன்மேல் மர்மந்தொடுப்பாளென்றால்
மைந்தனுக்குப்பவளத்தேர் வாராதென்றுசொல்லி
அன்றைக்குப்பார்த்தாளே அர்ச்சுனராசனை
கண்டாளருச்சுனனை கைதூக்கிமன்னவனை
முகத்திலேவிழிக்கவென்று விதிப்பாரோயெந்தனுக்கு
உன்னைக்-கண்ணாலேகாணக் கிடைத்ததேயெந்தனுக்கு
தப்பிபுலந்திரனும் தங்கத்தேர்கேளாமல்
மாணிக்கத்தேர்வேண்டி கேளாமல்மன்னவரே
பாண்டியனாடாளுனும் பவளத்தேர்கேட்டாலும்
உன்னைக்-கண்ணாலேகாணக் கிடைத்ததேயெந்தனுக்கு
கண்ணானமைந்தனுக்கு திருஷ்டிகழித்துவிட்டேன்

என்றதுகேட்டானே எழில்விசையனருச்சனனும்
வில்லாளிபார்த்தனவன் விசையனுமேதுசொல்வான்
பாண்டியனாட்டுக்கு பவளத்தேர்வேண்டுமென்றால்
ஒரு-ஆளையேசொல்லி அனுப்பிவைத்தீரானால்
பவளத்தேர்செப்பனிட்டு அனுப்பிவைப்பான்இனியே
மைத்துனன்புலந்திரற்கு வாட்டங்கள்வந்ததென்று
தோஷித்துப்போச்சுதென்று சொல்லியனுப்புவாயோ
தருமருந்தான்கேட்டு தயங்கியழுதாரே
வீமரதைக்கேட்டு மெத்தவழுதாரே
நல்புருந்தரொரு இரட்டையர்கள்தானழுதார்
மந்தாரக்குந்தியரு மாதுபுலம்பிவிட்டாள்
தீயிற்பிறந்தவளுந் திகைத்துப்புலம்பிவிட்டாள்
அன்னகருநாடுமே அரசுந்தளும்பிற்றே
தர்மாபுரத்திலுள்ளோர் தவித்துப்புலம்பலுற்றார்
இப்படிக்குஓலை யெழுதுவதுஞாயமோ
பூமியரசாண்டோர்கள் பொய்யோலையெழுதலாமோ
அவ்வார்த்தைகேட்டுமவள் அல்லியருமேதுரைப்பாள்
பாராளும்வேந்தனவன் பவளத்தேர்வேணுமென்று
உண்ணேன்குளியேனென்றான் உறங்கேனென்றான்பஞ்சணையில்
சாவேன்மடிவேனென்றான் சமர்த்துள்ளபுத்திரனும்
பாலமுதமுண்ணேனென்றான் பள்ளிக்குப்போகேனென்றான்
மெய்யாகச்சொல்லி யெழுதினேன் ஓலையிலே
மாலைமுடியானே வருவதொருக்காலுமில்லை
சித்தசன்தங்கையவள் சிற்றிடைச்சுபத்திரையாள்
சோரவளநங்கை சுபத்திரைநாயகியாள்
அவள்மயக்கமெத்தவேவா ஆணழகாவுந்தனுக்கு
அவளுடையமோகமதாய் அல்லும்பகலுமாயிருப்பாய்
தேவடியாள்வீதியெல்லாந் திட்டின்றித்திரிகிறவன்
நீர்-வருவீரோவாரீரோ யென்றெண்ணிமன்னவனே
இந்த-கூத்திமேலாசையுண்டோ குழந்தைமேலாசையுண்டோ
உந்தன்மனதறிய யெழுதினேனோலையென்றாள்
மெய்யென்றுசொல்லியே வந்தீரோவாள்விசையா
பவளத்தேர்கொண்டுவந்து தாரீரோவாள்விசையா
ஆமென்றால்சொல்லுமிப்போ அல்லவென்றால்போமென்றாள்
மதுராபுரியாளே மகுடத்துரைச்சியரே
தீவாந்தரத்திற்போய் தேடியேகொண்டுவாரேன்
எங்கேயிருந்தாலும் இட்சணமேகொண்டுவாரேன்
பாங்கானபுத்திரற்கு பவளத்தேர்கொண்டுவாரேன்
எத்தனைநாளையிலே எனக்குத்தேர்கொண்டுவருவீர்
பொய்வசனஞ்சொல்லாமல் போர்விசையாநீயுரையும்

மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்றான்
ஒன்பதுநாளாயிலை வைத்துத்தேர்கொண்டுவாரான்
பவளமெட்டப்போனிடத்தில் பாரதப்போர்க்களமோ
தேர்வேண்டிப்போனிடத்தில் தேர்வையாயருச்சுனன்பி
கானகத்தில்கன்னியரை கண்டுமயங்காதே
பல்லைத்திறந்திவாய் பரிகாசஞ்செய்திவாய்
மருமகளாகவே யிருப்பேனோமணமகனே
அப்படியாகவே யிருந்தேயுண்டானால்
எமலோகஞ்சென்றாலும் இட்டுவந்தாக்கிப்பேன்
பாதாளம்போனாலும் கொண்டுவந்தளிப்பேன்
வாலிபனருச்சுனனும் மறுக்காலேவருவாப்பார்
ஐந்துபிராயம் அழகுள்ளபுலந்திரனார்
மைந்தர்மேலாளை மறக்கவுங்கொண்டுவாரேன்
மைந்தன்மேலாசைவிட மனதுவரவில்லைதான்
பிள்ளையின்மேலாசைவிட்டுப்போகமனம்வந்துதோ
வந்தாய்த்துணிந்தது என்மகன்மேலாசைவிட
இருவருமாகவே யிருந்தங்கேபேசையிலே
அச்சுதானந்தரையரும்வந்துவிட்டார்
குருக்கள்மகனுரைக் கொப்பெனவேதான்பார்த்து
வாருமென்றுதானழைத்தான் மருமகத்துரை பல்லியரும்
வையகவளநாடறிந்து வந்தீரோ மன்னவனே
வாழ்மதுரைதேடி வழியுந்தெரிந்ததோ
மதுரைக்குப்பயணம் வந்திருந்தேன்னை
எல்லைச்சிறைவைத்தாரோ எழில்வைசியன்கோமானும்
எல்லையறந்து இருக்கானோ நீலவைசியன்
அவர்தான்வருகாமல் போறதுமச்சினனே
நீர்தானேறுபயணம் இங்குவந்தோ காந்தா
வாணவைசியனில்லாத வாழ்வுஞ்செல்வமுமில்லை
கல்விகேசியனில்லைய நான்தான்வருகின்றேன்
ஆறுதலையாகவே அச்சுதானந்தரே
பிள்ளைபுலந்திரனார் பவளத்தேர்கேட்டதினால்
ஆசையினாலேயழைப்பித்தேனருச்சுனனை
மாலையிட்டநாள்முதலாய் வணங்காதகன்னிகைநான்
மைந்தனுக்காகவே வணங்கினேனருச்சுனனை
பாண்டவர்நாட்டுக்குப் பவளத்தேர்கொப்பளிட்டு
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
மைந்தனைப்பலாதணியென்று மங்கைவருமயாறுதான்
அன்றுபோனவரும் அங்கிருந்துவரவில்லையென்றாள்
அம்மானைத்தேடித்துணிந்து மறந்தாலும் வாணவைசியன்
மைந்தர்மேலாசை மறப்பாரோவாணவைசியனே

எப்படியுங்கொண்டு வருவானென்றிருக்கிறான்
இப்படியாகவே யிருக்கின்றவேளையிலே

பாண்டியர்கள் அருச்சுனனைக் காணவருதல்.

அருச்சுனர்வந்தசேதி அறிந்தபாண்டியரும்
மருமகனைக்காணுதற்கு வாறார்கள்பாண்டியர்கள்
மகமேருபர்வதம்போல் மகிழ்ச்சியுடன்வாறார்கள்
பொன்னுமலைநாடாளும் போர்எழுதியார்கூட
அல்லியம்மாள்தன்னருகே அனைவோருமவந்தமர்ந்தார்
மருடத்துறைச்சியாளும் மனங்கிளர்ந்தபோது
வாருமிருங்களென்று மரியாதைபண்ணினாள்
அர்ச்சுனரைத்தான்பார்த்து ஆயிரம்பாண்டியரும்
மதுரைவழியாக்கு வழியுந்தெரிந்ததோ
வைகைவளநாடு வழியுந்தெரிந்ததோ
மதுரைக்கொருபயணம் வாறதிருந்தென்ன
வாறாமலிருக்க வைராக்கியங்களுண்டோ
அகமகம்பூத்ததுபோல் அதிசயமாய்த்தானுரைத்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
பாண்டிவளநாட்டாளும் பவளத்தேர்கட்டதிறல்
ஆனையிருந்தால் அழைப்பித்தேனுனவரை
சீக்கிரமாய்தீவுக்குப் போங்காணுமேதர்மசபை
ஆறாயிரவர் அண்ணிரளாம்பாண்டியர்கள்
வந்தக்காலாகில்லை மாதுகுலப்பெண்ணாரே
இன்றொருநாள்போக்கிநீ இனியொருநாளாகாதா
பசியோடிருக்கிறார் பாலமிர்தஞ்செய்யுமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
பாண்டிவளநாட்டார்க்குப் பவளத்தேர்வந்திடப்
விருந்துசமைக்கிறதும் வெகுமானம்பண்ணுறதும்
சீக்கிரமாய்தீவுக்குச் சென்றுநடவுமென்றாள்
சாண்டாவனமெரிக்க காளையவன்தான்கேட்டு
மைந்தன்புலந்திரற்கு வாட்டமுண்டாச்சுதென்று
மைந்தராதுவுத்தாரம் வந்தவுடனேநான்
சிவபூசைபண்ணவில்லை சலபானஞ்செய்யவில்லை
நான்-காலால்நடவாமல் காற்றுப்பறந்துவந்தேன்
இன்றபகலுக்கு இருந்துநானம்போறேனென்றான்

அருச்சுனனுக்கு விருந்திடல்.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
தனக்குத்தொழில்செய்யுந் தாதிமுகம்நோக்கி
அடிசில்சமையுமென்றாள் ஆனந்தவாழ்மாரி
அப்போதுநாரியர்கள் ஆனந்தமாயெழுந்து

பத்துவிதக்கறியும் பதினெட்டுப் பச்சடியும்
நல்லபொரிக்கறியும் ராசாக்கள் போசனமும்
பச்சென்றகாயும் பவளம்போல்நற்கறியும்
போதச்சமைத்தார்கள் பொற்கொடிமாதரெல்லாம்
அடிசிலமைத்ததென்று அல்லியர்க்குத் தெண்டனிட்டு
அமுதுண்ணுஞ்சாலையிலே அல்லியருமருச்சுனனும்
போசனங்களுண்டு புண்ணியருமப்போதேறி
சிங்காதனத்திலே சேரவேவந்தார்கள்
அப்போது அல்லியரும் ஆரணங்குதானெழுந்து
காச்சாக்கட்டிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிப்பாக்குகளும் மோரங்கிவெற்றிலையும்
வாகாயிலைச்சுருளும் வர்ணத்துவர்பாக்கும்
கோவையிலைச்சுருளும் கொத்துதுவர்பாக்கும்
அள்ளிக்கொடுத்தாளே ஆணழகனுக்கு
அந்தச்சமயத்திலே அருச்சுனராசாவும்
வம்புபரியாசஞ் செய்தாரே அருச்சுனரும்
அப்போது அல்லியம்மாள் ஆரணங்கேதுசொல்வாள்
இந்தவருஷமாக ஆர்ந்திருந்தகருமத்தை
இன்றெழுந்தராத்திரையில் நினைத்திருக்கதர்மமுண்டோ
எக்குலேபாகாது என்றாளே அல்லியம்மாள்
அப்போதருச்சுனனும் ஆணழகனேதுசொல்வான்
பன்னிருகாதவழி பவளவனம்போறேநான்
மனஸ்தாபப்பண்ணாதே மாலைமுடியாளே
மனஸ்தாபமென்னவுமே மாதுதலைகுனிந்தாள்
தலைகுனிந்தசாடைதனைக் கண்டந்தப்பெரியோர்கள்
தென்புறம்பள்ளியறை தேன்மொழிக்குத்தான்திறந்து
வடப்புறம்பள்ளியறை மயிலாளுக்குத்தான்திறந்து
கட்டிலின்மெத்தைதனை கணக்காகவிரித்து
காம்பறுத்தமல்லிகைப்பூ கட்டிலின்மேல்பரப்பி
கச்சாயம்பதநீரும் வைத்தார்கிளிமொழிக்கு
மஞ்சத்தின்மேலாக மன்னன்குதித்தேறி
தக்கோலந்தின்று தனித்துவிளையாடி
வெற்றிலைதின்று விரும்பிவிளையாடி
கச்சாயந்தின்று களித்துவிளையாடி
காமக்கடலிலவர் கலந்துதெளிந்தார்கள்
மோகக்கடலிலவர் முழுகித்தெளிந்தார்கள்
தீராதஆசையெல்லாந் தீர்த்தாரேதேர்விசையன்
ஆறாதஆசையெல்லாம் ஆற்றினானழகன்
மஞ்சத்தைவிட்டிறங்கி வந்தாரிருவருமாய்
மஞ்சனநீர்ச்சாலையிலே வந்திருந்தார்கள்

காலோடுகையுஞ் சனிவாயுங்கத்திசெய்து
மார்போடுதோளும் மதிமுகமுஞ்சுத்திசெய்து
அலங்காரமண்டபத்தில் அரசிருவருமாய்
தாமமுடியார்கள் சதுரங்கப்பார்க்கநின்றார்
அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனார்

புலந்திரன் தகப்பனிடம்வருதல்.

வீதிவிலாசமது விளையாடிசெல்வேந்தன்
பந்தடித்துசெண்டடித்து பவென்விளையாடி
தாயாரருகே தார்வேந்தனோடிவந்தான்
மகனைத்தாணவே வாரியெடுத்தணைத்து
உச்சிமுகந்தாளே உள்ளங்கால்முத்தமிட்டாள்
உங்கள்-ஐவர்பாடிமேலே செல்லுமென்றாரணங்கு
அப்போபுலந்திரனும் அர்ச்சுனன்றன்னைவந்தான்
வாரியெடுத்தாரே மன்னர்புலந்திரனும்
அப்பாவருகவென் அழகுள்ள இந்திரனே
பொன்னுக்குடமே புலந்திரனேவாருமென்றாள்
தேர்விசையனருச்சுனனும் அருச்சனருக்கேதுசொல்வான்
அப்போபுலந்திரனும் அருச்சுனருக்கேதுசொல்வான்
ஐயாவேநீர்கேளும் ஆண்மையுள்ள அருச்சுனரே
தங்கத்தேர்தந்தாரே தனஞ்செயனென்பாட்டன்
செம்பொன்தேர்தந்தாரே சீருடையவென்மாமன்
மாணிக்கத்தேர்தந்தாரே மண்டலத்துராசாக்கள்
முத்துத்தேர்தந்தாரே முடிமன்னராசாக்கள்
சித்திரவீதிகளும் தெருவுமிருபுறமும்
மட்டில்லாவீதி மதுரைக்கிறையடிவைக்க
பாண்டியபெருமாளை பவளத்தேர்தான்கேட்டேன்
அப்படியேன்நான்தருவேன் அஞ்சாதேபெண்மகனே
தீவுக்குப்போறேன் தீவிரமாய்க்கொண்டுவாறேன்
எங்கேயிருந்தாலும் யிட்சணமேகொண்டுவாரேன்
எத்தனைநாளையிலே எனக்குத்தேர்கொண்டுவாரீர்
மைந்தனவர்கேட்டு மனதுசலியாமல்
மூன்றுநாளாறுபொழுதிலே கொண்டுவாரேனென்றார்
ஒன்பதுநாளையிலே உனக்குத்தேர்கொண்டுவாரேன்
இருமிருமென்றுசொல்லி எழுந்திருந்தார்மன்னவனும்
அச்சுதானந்தனையனுந்தானுமாய்
எழுந்துநடந்தாரே யிந்திரமலைமேலே
கூடநடந்தாளே கொம்பனையாளரணங்கு
ஆனைசேனைபரிவாரங்கள் அனுப்பவேண்டாராசாவே
சேனைபரிவாரந் திரளணியுங்கூடவேண்டு
உத்தமவீரியர்கள் இருவரும்போனாரே

ஆனையுஞ்சேனையும் அனுப்பவும்வேண்டாமென்றான்
இருவரும்போய்வருவோம் என்றுவிடைகொண்டார்
மன்னரிருவருமாய் மந்திரிவாள்கைபிடித்து
வைகைகரைகடந்து மதுராபுரிகடந்து
எல்லைகடந்து இலங்கைதோப்புதான்கடந்து
காவல்கடந்து அரியமலைதான்கடந்து
வெள்ளையாக்குவனம் வெள்ளைப்பூத்தவனம்
எட்டடிவெள்ளை பிருக்கும்வனங்கடந்து
பத்தடிவெள்ளை பாக்கும்வனங்கடந்து
வேந்தறியாத வெளிக்காடுதான்கடந்து
சிங்கமுறங்குவனம் சிறுபுலிகள்தாங்குவனம்
ஆளியுறங்குவனம் அன்னபட்சிதாங்குவனம்
அருகாகொம்பிலே கதலிவனங்கடந்தார்
பவளக்கொடிநின்ற பவளமலைகண்டார்
சொர்ணக்கிளிபாட்டிக்கும்போல் சோலையைக்கண்டார்கள்
அச்சுதானந்த ஐயமேயென்தோழா
நான்போகாதகாடுமில்லை ஆடாததீர்த்தமில்லை
மன்னரிருவருமாய் பவழக்காடுநுழைந்தார்
சொப்பனக்கூறாளும் சங்கதிமொழுந்தாளும்
ஊடுபாய்கின்றதும் உயர்ந்தகொம்பாய்நிற்கிறதும்
தாவிப்படர்கிறதும் சன்னல்பின்னலாகிறதும்
வேரிழந்தபோதும் பின்முளைக்கிறதும்
பக்கமுடியாது பவளம்விளைகிறதை
பவளப்புதையைப் பார்த்துதிகைத்துநின்றார்
அங்கொடிநின்றிருக்கும் அங்காரக்கண்டுகளும்
ஆனைத்தலையை அரியுங்கண்டுகளும்
குன்றையகல்போல விருக்குமாங்கருங்குளவி
திருக்கல்போல விருக்குமாங்கருங்குளவி
முழுமன்னவர்போலாய் வெளிப்பட்டுவந்து
வியப்பில்லொவ்வொருவருக்கும் வந்ததகண்டுகளும்
மன்னருச்சனரின் மட்சமீனைப்பார்க்க
தேவாதிபன்மகன் தேர்விசயனருச்சுனன்காண்
பேறுபேர்பெற்ற பொருதமாவீரர்காணும்
இவரைதடிகொண்டே நிறுமேயானால் குடிகெடுவந்துவிடும்
நடனகூட்டமழிந்துவிடும் குலக்கேடுவந்துவிடும்
என்றுபயந்து எழும்பிக்கதண்டுகளும்
அந்தப்பயத்து ஆடவிலிச்சென்றதுகாண்
ஆறுதலுடையவன் அருச்சுனனுமேதுசொல்வான்
அச்சுதானந்த ஐயமேயென்தோழா
நான்தேவாதிபன்னென்று தெரிந்ததுகதண்டுகளும்

நம்மைக்கண்டபோதே நடுநடுங்கிச்சென்றதாண்
என்றவர்கள்சொல்லி யிருக்குமந்தவேளையிலே
கானகவேடுவர்கள் அவ்வழியேவாறார்கள்
அர்ச்சுனமாடவனை அறிந்தாரேவேடுவர்கள்
கண்டுபயந்தார்கள் கடுகிவந்துதெண்டனிட்டார்
வேடுவரோநீங்களென்று விஜயனார்கேட்கலுற்றார்
ஆமையாநாங்கள் ஆரணியவேடரென்றார்
இக்காட்டுக்குள்ளே இருக்குங்கதண்டுகளும்
உங்களைக்கொல்லாதோ உத்தமரேசொல்லுமென்றார்
கதண்டுகள்கொட்டாதோ காவலரேஉங்களையும்
தென்னாட்டுபேர்களைத் தீண்டாதுகதண்டுகளும்
முகமறியாதவனை மூடித்தாக்கிடத்திவிடும்
பவளம்வெட்டவந்தவரை எமலோகஞ்சேர்த்துவிடும்
கதண்டுகொட்டிசெத்தவர்கள் கணக்குமிதங்களில்லை
எங்கள்துரைபவளக்கொடி எழுப்பினதனந்தமுண்டு
செத்துமடிந்தவரை சிவனுடனெழுப்பிடுவாள்
என்றுமவர்சொல்ல எதிர்சொல்வானருச்சுனனும்
எங்கள்துரையென்றீரே உங்கள்துரைபேரென்ன
ஆருடையபாக்கியங்கள் அறியவுரையுமென்றார்
பெண்ணாசுதாரே புண்ணியரேசொல்லுமென்றார்
அந்தவரலாற்றை அன்பாகச்சொல்லுமென்றார்
ஆனால்கேளையா அடியேனுரைத்திடவே
சேருமபுரராசாக்கள் துரைகளைம்பதுபேர்
ஐம்பதுராசருக்கும் ஆணுமில்லைபெண்ணுமில்லை
பவளக்கொடியாச்சியதனைக் ஆருநகைக்குபாலனில்லை
காணாதகோயிலுக்கு காணிக்கையனுப்பிவைத்தார்
இலையிலேசாதமுண்டால் என்னதவமென்றுசொல்லி
தரையையவர்மெழுகி சாதங்களுண்டார்கள்
பாலடைக்குப்பால்சொரிப்பார் பசித்தார்முகம்பார்ப்பார்
தவித்துவந்தபேர்களுக்குத் தண்ணீர்ப்பந்தல்வைத்தார்கள்
சாலைகள்போட்டுவைத்தார் சத்திரங்கள்கட்டிவைத்தார்
நல்லதண்ணீர்கிணறுகளும் நடபாயுங்கட்டிவைத்தார்
சோகிபரதேசிகட்கு திருமடங்கட்டிவைத்தார்
குளங்களெடுத்துவைத்தார் கோபுரங்கள்கட்டிவைத்தார்
என்னதவம்பண்ணினாலும் எதினாலும்பிள்ளையில்லை
பத்தாண்டுசென்று பெய்ந்தபெருமழைக்கு
தெப்பலாய்நின்று மிதந்தவைப்பண்ணினார்கள்
மைந்தனைவேண்டியல்லோ மாளிகைமறந்தார்கள்
புத்திரனைவேண்டியல்லோ பூமிமறந்தார்கள்
அவர்மேல்-ஆலம்விழுதேதாடி அறுகுமுளைத்திடவும்

அரகராவென்றுசொல்லி அகோரதவம்பண்ணுர்கள்
சிவசிவாவென்றசத்தம் தெய்வலோகந்தான்கேட்கும்
அவர்-பண்ணுந்தவப்பயனை அறிந்தல்லோஈஸ்வரனும்
ஈஸ்வரனும்பார்வதியும் இடபத்திலேறிவந்து
சேரும்புராசனிடம் சிவன்வந்துயேதுசொல்வார்
நீங்கள்-கூலிகுறைத்தவர்கள் குறைமரக்கால்போட்டவர்கள்
அங்காடிக்கூடையை அதிரவிலையிட்டவர்கள்
பத்தட்டிநெல்லிலே பதரைக்கலந்தவர்கள்
ஏரிகுளமடைத்தோர் எந்தன்பசைகுலைந்தவர்கள்
நந்தவனமழித்தவர்கள் நற்பெண்டைக்கெடுப்பவர்கள்
பாலடைக்குப்பால்வாரார் பசித்தார்முகம்பாரார்
நீங்கள்-ஏதுதவம்பண்ணிஞலும் எதினுலும்பிள்ளையில்லை
இந்தப்பிறப்பிலேயும் எழுபிறப்புபிள்ளையில்லை
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வாராசாக்கள்
என்னபாவம்பண்ணுலும் ஏதுதோஷஞ்செய்தாலும்
பாவத்தைதீர்த்துவிட்டு பாலகனைத்தாருமையா
என்றவர்கள் துதிக்கையிலே ஈசர்மனமிரங்கி
பவளக்கொடிமேலே பாலகியையுண்டாக்க
குவ்வாகுவ்வாவென்று குழந்தையழுகுதோடா
ஆணுமதுபெண்ணுமது அழகாய்வளர்த்திடுங்காண்
செம்மையிருங்களென்று சொல்லிநடந்தார்காண்
பெண்ணையெடுத்துவந்து போதவளர்த்தார்கள்
கவிழ்ந்தாள்தவழ்ந்தாளே கன்னியிளமயிலும்
ஒருவயதிருவயது வொன்றிரண்டுமூன்றுச்சு
ஐந்தாம்பிராயத்திலே அறிந்தாள்பலகலைகள்
பவளக்கொடியாளென்று பார்லோகமாளுகிருள்
பட்டந்தரித்தல்லவோ பார்முழுதுமாளுகிருள்
ஆணரசாண்டாலே அழிந்துபோம்சீமையென்று
பெண்ணரசாளுகிருள் பேடைமயிலணங்கு
என்றதுகேட்டானே இளவிஜயனருச்சுனனும்
வாலைப்பிராயமோ வயதுமெத்தசென்றவளா
பதினுறுவயதாச்சு பக்கமெல்லாம்பிஞ்சல்லோ
கொஞ்சம்பிராயம் கொழுந்தெல்லாம்பிஞ்சலவோ
பாதிப்பிராயம் பக்கமெல்லாம்பிஞ்சல்லோ
காய்க்கும்பிராயமையா கனியுதிருந்தற்காலம்
பூர்க்கும்பிராயமையா பிஞ்சுவிடுங்காலமது
தன்வயதுதானறியாள் தையலிளங்கொடியாள்
ஆனாலும்வேடுவனே அவளழகைச்சொல்லுமென்றார்

வேடன் பவளக்கொடியாளழகைச் சொல்வது.

ஏதென்றுசொல்வேனையா யிளங்கொடியாள்தன்னழகை
பார்க்கமுடியாது பத்மினியாள்தன்னழகு






வேடன் பவளக்கொடியாளழகைச்சொல்வது.

நீர்முட்டைபோலிருக்கும் நேரிழையாள் கண்ணழகு
சேல்கெண்டைபோலிருக்குந் தேன்மொழியாள் கண்ணழகு
மேற்புருவமிரண்டழகும் வேப்பிலைச்சாயலைப்போல்
மயிரழகும்பாவனையும் வண்டுமுதுகதுபோல்
ஈச்சம்பழத்திலே யிருண்டகருப்புமுண்டு
அவள்-மயிரேகருப்பொழிய மற்றக்கருப்புமில்லை
அவள்-புருவங்கருப்பொழிய பின்னேகருப்பமில்லை
தேய்பிறைச்சாயலைப்போல் சிறுநெற்றிதன்னழகும்
சீரியமூக்கழகும் சிவந்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசை முருக்கிதழ்போற்செவ்வுதடும்
வாழைத்தண்டுபோலே வளர்ந்த துடையழகும்
கழுத்தழகும்பாவனையும் கமுகு குலைசாய்ந்தாற்போல்
அகண்டபுஜமழகும் ஆலிலைபோல் [illegible] வயிறும்
முளைத்தெழுந்தழுங்கில்போல் மொய்குழலாள் தன்பசமும்
பத்துவிரலழகும் பயித்தங்காய் [illegible]போல்
சிங்கத்திடையழகும் சீருநாபியழகும்
இருதுடைரண்டழகும் இளவாழைத்தண்டுபோல
முத்துசிப்பிகைத்தகம்போல் முழங்காலிரண்டழகும்
பாம்பின்படம்போலே பாதத்திரண்டழகும்
புத்தகஞ்சேர்ந்தாற்போல் புறங்காலின்னழகும்
அவளுக்கொப்பானோர் ஆருமில்லை வையகத்தில்
சுவரிலெழுதலாம் சித்திரம்போல்பார்க்கலாம்
படத்திலெழுதலாம் பதுமைபோல்பார்க்கலாம்
சந்திரன்போலே தளும்புகிறாள் தையனல்லாள்
சூரியனைப்போலே துள்ளுகிறாள் தோகையரும்
ஈயத்தைக்காய்ச்சி யிலையிலேவிட்டாற்போல்
பொன்னையுருக்கியே பூமியிலேவிட்டாற்போல்
தங்கத்தைக்காய்ச்சி தரையிற்கவிழ்த்தாற்போல்
நீறுபூத்தநெருப்பை ஊதிப்பார்த்திறம்போலே
ஆயிரமின்னலிலே சோதிமின்னல்பிறந்தாற்போல்
பார்க்கமுடியாது பத்தினியாள் தன்னழகை
அவ்வார்த்தைகேட்டுமே அர்ச்சுனனுமேதுசொல்வான்
அவளை-மண்டலத்துராசாக்கள் மாலைதரித்தாரோ
கன்னியிளங்கொடிக்கு கலியாணஞ்செய்தாரோ
என்று-விசயனவன் கேட்கையிலே வேடனுமேதுசொல்வான்
நாலுலட்சங்கோடியுண்டு நாயகியைநாடிவந்தோர்
பத்துலட்சங்கோடியுண்டு பத்தினியைக்கேட்டவர்கள்
வண்ணலட்சங்கோடியுண்டு மாதவளைக்கேட்டவர்கள்
கைநீட்டிமாலையிட்டோர் காசினியிலாருமில்லை
நித்தியகன்னியாகவே யிருக்கிறாள்நேரிழையாள்

நல்லதுவேடுவனே நாயகிமாதரவள்
கன்னியிளங்கொடியும கனவேட்டையாடுவாளோ
வேட்டைக்குவாரதுண்டோ வேடுவரேசொல்லுமென்றார்
மாதங்கக்கன்னியரும் வாராளேவேட்டைமுகம்
ஆனால்கேளையாவே அடியேனொருவார்த்தை
மாதமொருபயணம் வனவேட்டைவாரதுண்டு
திங்களொருபயணம் வாராளேதேன்மொழியாள்
மற்றொருநாளையிலே வருகிறதில்லையென்றாள்
ஆனால்கேள்வேடுவனே அறியவொருவார்த்தை
காட்டிற்குவந்தாலே கன்னியிளங்கொடியும்
பவளக்கொடியாளும் பாரிவேட்டைவந்தாலே
இந்தவனத்திலே யிருக்குமிருகங்களில்
எந்தமிருகத்தின்மேலே இச்சையுண்டுமாதருக்கு
அவளாசைகொண்டமிருகம் ஆணழகாசொல்லுமென்றார்
ஆனால்கேளையாவே அடியேனவாய்விண்ணப்பம்
எந்தமிருகமது எதிர்பட்டுவந்தாலும்
கண்டமிருகத்தை கண்டிப்பாள்தப்பாமல்
அன்னத்தைக்கண்டாளோ ஆசையாய்விட்டிடுவாள்
மற்றொருமிருகத்தை மாதுநல்லாள்கண்டாலே
வெட்டிவெறிந்திடுவாள் வீரமணிவாளாலே
பண்ணிருகாதம்வழி பவளம்விளைகிறது
நடுவேயிருக்கிறது நாயகியாள்கோட்டையது
புகழாயிருக்கிறது பொற்கொடியாள்கோட்டையது
ஆனால்நீர்போய்வாரும் அன்புள்ளவேடுவனே

அருச்சுனன் பவளக்கொடிமேல் மோகித்தல்.

வேடுவனும்போனபின்பு விஜயனுமேமதுரைப்பான்
அச்சுதானந்த ஐயனேயென்தோழா
ஆரணங்குவார்த்தைதனை யன்பாகக்கேட்கையிலே
மன்மதனபாணமது மார்புருகிப்போகுதே
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதே
மாரனவனெய்தகணை மாரைப்பிளக்குதே
ஆறுருகுபாணமது மார்புருகிப்போகுதே
அவளைக்-கண்ணாலேகண்டாலே காமன்களைதீரும்
பார்த்தாலேயாமானால் பசிதாகந்தீருமென்றான்
என்றைக்குக்காண்பேனோ ஏலம்பசுங்கிளியை
மாலைதரியாமல் வருவதில்லையென்தோழா
கல்யாணம்பண்ணாமல் வருவதில்லையென்தோழா
அவளழகைப்பார்ப்பதெப்போ என்னாசைதெளிவதெப்போ
கொம்பனையாளுடைய குரலோசைகேட்பதெப்போ

அச்சுதானந்த னையாநேதுசொல்வார்
ஏங்காணும்வாள்விசையா இந்தமதியுந்தனுக்கு
மகுடத்துரைச்சியவள் வாழ்வாசியல்லியற்கு
மூன்றுநாளாறு பொழுதில்லவாரேனென்று
மைந்தன்மேலாணையிட்டு வந்தோமன்னவனே
மற்றொருகன்னியரை மணமாலைசூட்டினால்
மகுடத்துரையல்லியரும் மங்கையவள்பொல்லாதாள்
வாழ்பாண்டிநாடுடையாள் வருவாளேபடைகூட்டி
சொல்லுக்குமஞ்சாளே தொடர்ந்தபடையெடுப்பாள்
வெட்டத்துணிந்திடுவாள் வீரமணிவாளாலே
வேண்டாதகாரியங்காணுங்கோழா வெறுத்துவிடுமிவளாசை
ஆனாலுமதுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வான்
நீ-எல்லைதான்சொன்னாலும் என்செவியிலேறாது
மாதரார்க்கன்னிகையை மணமாலைசூட்டினக்கால்
அன்றுவிசாரந் தெளியுங்காணுங்கோழா
நான்-செத்துமடிந்து செல்லழிந்துபோனாலும்
மாண்டுமடிந்து வைகுந்தம்போனாலும்
செத்தவிடங்கனிலே செங்கழனிப்பூப்பூப்பேன்
சுட்டவிடத்திலே தென்னைமயிலேயாயிருப்பேன்
தென்னைக்குப்பூவாய்வர செவ்வணத்திற்கையாவேன்
கண்ணுக்குமையாவேன் அவள்காலுக்குமெட்டாவேன்
நாயகியவள்நெற்றியிலே கற்சாந்துப்பொட்டாவேன்
அவள்-முன்கைவளைதனிலே தொத்திவந்துமுள்ளாவேன்
என்மனக்கன்னியுமோ எக்காலஞ்செல்லுமோ
என்று-மைசேர்ந்தமெய்சோர்ந்து கனத்தமுகஞ்சோர்ந்து
சகலகலைதுகிலுடுத்தி தான்வந்துமேலாடி
நேமம்பெற்றமதிகுலைந்து நினைவுதடுமாறி
மயங்கிவிழுந்தானே மாதர்மேல்நினைவாகி

பவளக்கொடியாள் வேட்டைக்குவருதல்.

அன்றையபோதிலே ஆனந்தவாழ்மாரி
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
செங்கோலுடையாளும் சிகாரிபுறப்பட்டாள்
வல்லபொருதுங்கன்னனும் வெளியேபுறப்பட்டாள்
சட்டிபிடிமன்னவர்கள் ஏழுலட்சம்பத்துலட்சம்
கத்திபிடிமன்னவர்கள் கணக்குமிதங்களில்லை
பட்டாபம்நரிசமும் பாரியவில்சமுதாடும்
திமிஜாபெரியலகு நேரிசமாம்பெரியகத்தி
கூவிசமும்குவிசமும் குண்டுகுழல்துப்பாக்கிகளும்
எண்ணிறந்தஆயுதமும் எடுத்தரையிற்கட்டினாள்
பாராசாரிபுரவியின்மேல் பவளக்கன்னியேறினாள்

சுத்திக்குடைபிடித்தார் சூரியனைத்தான்மறைத்தார்
ஆள்பேருஞ்சேவகரும் அனந்தங்கோடிசேனைகளும்
தாதிகளுமூப்பிகளும் தையல்மார்சூழ்ந்துவர
பத்துலட்சம்சேனையுடன் பாரிவேட்டைவாராளே
ஆனையின்மேல்பேரிகை குதிரையின்மேல்டாங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைகிளம்புகுது
பேய்த்தாரையூதவே பெரியடமாரோலடிக்க
சின்னமுழங்கவே திருச்சின்னந்தான்முழங்க
ஐங்காதவழிதூரம் அதற்கேற்றபெரியதாரை
பயணம்பயணமென்று பயணபேரியடிபடுது
அந்தவனங்களெல்லாம் அதிரவருகிறாள்
பொங்குகடல்போலே போய்புகுந்தார்கானகத்தில்
மான்மேட்டையாடியே மயில்வேட்டைதானுடி
குயில்வேட்டையாடியே குருவிவேட்டை தானுடி
வக்காவும்கொக்குகளும் வருக்குருவிதாராவும்
அம்புக்கொருகுருவி ஆரணங்குஎய்துவிட்டாள்
வேட்டைகளாடியே விடாய்த்துத்தளர்ந்தாரே
கானகத்துமண்டபத்தில் கடுகவந்திறங்கினார்கள்
பஞ்சணைமெத்தையிலே பதியக்கொலுவிருந்தாள்
தாம்பூலமுண்டு தனியேகொலுவிருந்தாள்
வாசங்களுண்டு மகிழ்ந்துகொலுவிருந்தாள்
கேளிக்கைபார்த்திருந்தாள் கெம்பீரநாயகியாள்
சங்கீதம்பார்த்து இருக்கிறாள்தையனல்லாள்
அப்போதுவாள்விசயன் அருச்சுனனுந்தானெழுந்து
அச்சுதானந்த ஐயர்முகம்நோக்கி
வந்தாள்காண்வந்தாள் மாதரிளங்கொடியும்
பவளக்கொடியாளும் பைங்கிளியாள்வந்தாள்காண்
கானகத்துமண்டபத்தில் வந்தமர்ந்தாள்கன்னியரும்
மத்தளவோசையது கேட்குதுகாண்மாயவரே
என்னவடிவானாலும் எடுத்துக்கொள்ளும்போர்விசயா
அருச்சுனரேவுன்னடத்தை யறிந்துமிருந்துநான்
அலைச்சல்படும்படியாய் அறியாமலுன்பின்வந்தேன்
கதண்டுகொட்டிமடிந்தாப்போல் இருக்கின்றேன்கானகத்தில்
நீ-கால்வேறாய்கைவேறாய் கட்டிக்கிடத்திவைத்து
மாயவரேசுத்திவந்து மாரடித்துநீரழுங்காண்
என்னைச்சுத்திவந்து இழவுசுடுங்காணும்
பெண்ணுவடிவெடுத்துப் போதவழுதிடுங்காண்
மாரிழவுகொடுத்தெனக்கு மயிரிழவுநீர்கொடுங்காண்
குரலோசைநீயெடுத்துக் கூவியழுதாலே
பெண்குரலைக்கேட்டு பொற்கொடியும்வந்திடுவாள்
ஆரென்றுபார்க்கவே வருவாள்காணாரணங்கு

ஆரணங்குயிங்குவந்து ஆரென்றுகேட்டாக்கால்
மாலையிட்டகணவனென்று மயிலாளுக்குநீருரையும்
தீர்த்தயாத்திரைவந்தோமென்று செப்புங்காண்தேன்மொழிக்கு
மங்கிலியப்பிச்சைகேளும் மாதரெழுப்பிடுவாள்
ஆனந்தவாழ்வாரி அவளைமாலைசூட்டுகிறேன்
கண்ணுக்குநன்றானால் கனமாலைசூட்டுகிறேன்
அழகாயிருந்தாலே அவளைமணஞ்செய்திடுவேன்
வடிவுகள்மட்டானால் மதுரைக்குப்போய்விடுவோம்
என்றுசொல்லியருச்சுனரும் எம்பெருமானைநினைத்து
பார்த்தீபனருச்சுனரும் பரமனைத்தானினைந்து
அருச்சுனன்கதண்டுகொட்டி செத்தவன்போலிருந்தான்
பொந்தியைத்தானடக்கிப் பொட்டெனவேபூமியிலே
மூர்ச்சையடக்கியே முடிசோர்ந்துகீழ்விழுந்தான்
செத்தவனைப்போலாகச் சோபித்துகீழ்விழுந்தான்
அச்சுதானந்த ஐயாவரேதுசெய்தார்
கால்கைகள்வேறாகக் கட்டிக்கிடத்திவைத்து

ஸ்ரீகிருஷ்ணதேவர் பெண்வடிவெடுத்துப் புலம்பல்.

பெண்ணாய்வடிவுகொண்டு போதப்புலம்புகிறார்
தன்னுடையதலைமயிரைத் தானும்விரித்துக்கொண்டு
மன்னனைச்சுற்றிவந்து மாரடித்துத்தான்விழுந்தார்
கொற்றவனைச்சுற்றிவந்து கோவென்றுஅழுகலுற்றார்
மலையேபருவதமே வாட்டமில்லாக்குஞ்சரமே
செம்மலையேபருவதமே உனக்குச்சேதமில்லையென்றிருந்தேன்
மாண்டுமடிந்தாயோ வைகுந்தம்போனாயோ
செத்துமடிந்தாயோ சிவலோகம்போனாயோ
மாளவோயிங்குவந்தாய் மாபாவிபட்டணத்தில்
சாகவோயிங்குவந்தாய் சண்டாளன்சீமையிலே
உன்னைப்பறிகொடுத்து ஒருத்தியுமாய்ப்போவேனோ
மைத்துனர்க்கென்னசொல்வேன் மாமனார்க்கென்னசொல்வேன்
மன்னவனைச்சுற்றிவந்து மாதுபுலம்பலுற்றாள்
அழுதகுரலோசை ஆரணங்குகேட்டுவிட்டாள்
பவளக்கொடியாளும் பத்தினியாள்கேட்டுவிட்டாள்
ஆடலும்பாடலும அத்தனையுங்கையமர்த்தி
ஆரடாதுதுவரே அடர்ந்தவனந்தனிலே
பெண்குரலாய்கேட்கிறது போய்பார்த்துவாருமென்றாள்
அழுதகுரலேது ஆராய்ந்துபார்த்துவாரும்
அப்போதுதாதியரும் அழகுள்ளமோகவதி
மோகவதியாளும் முன்னேவந்துதெண்டனிட்டாள்
தாதியருமங்கேவந்து சரணமிட்டாள்மாதருக்கு
மாதரசிசெல்வருள க்ஷணத்திலொருதூதுவனும்

பவளக்கொடிமாதே பத்தினியேஎன்னுச்சி
ஆறேவொருத்தனவன் ஆளனுந்தென்யுமாய்
கதண்டுகொட்டிமாண்டானென்று கன்னியவள்சொல்லுகிறாள்
புருஷன்மடிந்துவிட்டான் பெண்ணாள்புலம்புகிறாள்
அவனையெழுப்பிவிட்டால் அனந்தங்கோடிபுண்யமுண்டு
அவள்-ஆளனையெழுப்பிவிட்டால் அரிவையற்குமோட்சமுண்டு

பவளக்கொடியாள்வந்துகாண்பது.

இந்தமொழிகேட்டு எழுந்தாள்பவளகன்னி
முத்துநிறப்பல்லக்கில் மொய்குழலுமேறிவந்தாள்
மாண்டவன்தன்னருகே வந்துயிரங்கினாள்காண்
அச்சுதாரந்தவென்னு மையர்புலம்புகிறார்
பெண்போல்புலம்புகிறார் பேசும்பெருமாளும்
நான்பாராநாடுமில்லை பணியாததீர்த்தமில்லை
மிஞ்சியாவனங்களில்லை மூழ்காததீர்த்தமில்லை
தேசம்பலபலவாய் தீர்த்தங்களாடிவந்தேன்
பூமிபலபலவாய் பிரதட்சணம்செய்துவந்தேன்
பவளப்புதுமையிங்கே பார்க்கவந்தேன்மாதாவே
ஆனையின்மத்தகத்தை அறியுந்தண்டுபிங்கே
குதிரைகளையறுக்கும் குளவியுண்மவிட்டத்தில்
சிங்கத்தலைபிளக்குஞ் செங்குளவிகொன்றதுவே
அரியாமலிருக்குவந்தோம் அரும்பாவிப்பட்டணத்தில்
தெரியாமலிருக்குவந்தோம் சென்னந்தூருப்பட்டணத்தில்
இப்படிவருங்கருமம் யாதொன்றுகாணேனே
மலையேபருவதமே வாட்டமில்லாக்குஞ்சரமே
செம்மலையேபருவதமே சேதமில்லாச்சக்கரமே
கல்லானதூணை உன்னைக் கறையானரித்ததுவோ
இரும்பானதூணை உன்னை வுளுவரித்ததுவோ
செம்பாருந்தூஉன்னை சிறகாலடித்ததுவோ
என்று-மோதிரக்கையை முகத்தோடறைந்துகொண்டாள்
கோவென்றசத்தமுடன் குமரியழுகலுற்றாள்
தரையில்புரண்டழுதாள் தரணியளந்தவரும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளத்தின்கன்னியரும்
ஆடிபெண்ணேநீ அழுதுபுலம்புவதேன்
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்துயிங்குவந்தீர்
மாண்டவர்யார்காணும் மாதேநீசொல்லுமென்றாள்

ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்வது.

பவளக்கொடியாளே பத்தினியேபெண்ணுச்சி
ஆறுதல்கேளம்மா ஆரணங்குசொல்லுகிறேன்

ஊருண்டோ எங்களுக்கு உற்றபதியுமுண்டோ
தேசந்திரிபவர்க்கு சீமைகள் பூமியுண்டோ
நாடுவடக்கேயம்மா நகரி திருக்காஞ்சி
தேசம்வடக்கேயம்மா திருக்காஞ்சிமாநகரம்
தீவுபலதிரிந்து தீர்த்தங்களாடிவந்தோம்
பூமியொருபுரமா யெண்ணி தீர்த்தமாடிவந்தோம்
பவளப்புதுமையை பார்க்கவந்தோம் என் தாயே
மாலையிட்டுக்கொண்ட மணவாளனிவர்காணும்
தாலிதரித்துக்கொண்ட தலைவனிவர்காணும்
வாலப்பிராயமம்மா வயதுபதினாலே
மார்பளவாய்முகமளவாய் வந்ததா தண்டுகளும்
மாலைமுடியானை மன்னவனைக்கொன்றுதம்மா
தாலிச்சரடிழந்து தலைவிரிக்கநாளாச்சே
எங்கையோவானம் பிடிக்குதியென்றிருந்தேன்
தப்பாதேவானந் தலைமேலிடித்ததம்மா
அண்ணனில்லை தம்பியில்லை ஆதரிப்பாருமில்லை
அள்ளியிடுவார் அவனிதனிலாருமில்லை
இருவருமாய்வந்தோமே ஒருத்தியாய்ப்போவேனோ
உன்-புண்ணியமாய்ப்போகுது பிழைக்கவழிபாருமென்றாள்
மங்கிலியப்பிச்சையது தாருமம்மா மாதாவே
உன்-தருமமாய்ப்போகுதம்மா தாயேமுகம்பாரும்
என்று-முந்தாணியேந்தி முன்னேநின்றாளே
மடிபிச்சை தாருமென்று மடியேந்திநின்றாளே
மாரிழவுகொடுத்து மயங்கியழுதாளே
அவிந்தவிளக்கேற்றிவைத்தால் அம்மைசற்கர்மமுண்டுனக்கு
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாள்கேட்டு
இந்தப்-பாசாங்குகள்ளியை அப்பாலேதள்ளுங்கடி
என்று-மேகமலைமேலே மெள்ளநடந்துவந்து
அவன்காலைப்பிடித்துக் கரியமுடியசக்கி
பார்த்தாள் திருமுகத்தைப் பார்த்தாள்பலநாளும்
மேலேயிருக்கின்ற முக்காட்டை வாங்கியல்லோ
உற்றுற்றுப்பார்த்தாளே ஒளிபிதுங்குங்கண்ணாளும்
வானவர்பெண்டுகளை வலதழிக்குங்கள்ளனடி
மட்டில்லாப்பெண்டுகளை வகைமோசஞ்செய்தவனடி
தேசத்துமாதர்களை சிறைபிடிக்குங்கள்ளனடி
புரட்டுங்கள் தாதிகளே பின்னழகைப்பார்ப்போமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதிபுரட்டலுற்றாள்
முன்னழகும்பின்னழகும் முகத்தில்மச்சரேகைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
நல்லிற்பரசவீணை பாதத்தில்செந்தாமரை

மீசைமுருக்கழகன் மைவிழியின் திருவழகும்
நாவிலேலநட்சத்திரம் நயனவிழிபார்வைகளும்
பதினெட்டுலட்சணமும் பார்த்தாளேபத்தினியாள்
தேவாதிபெண்டுமடி சுவாமிக்குமைத்துனண்டி
இவனையெழுப்பினால் எனக்குவரும்மோசமென்று
பவளக்கொடியறுத்துப் பார்த்திபனைக்கட்டுமென்றாள்
அப்போதருச்சுனனும் ஆயனைத்தானினைந்து
வாள்விஜையனருச்சுனனும் மாயவனைத்தான்பணிந்து
எப்படியோவுண்டாயவு எம்பெருமாள்மேகவர்ணா
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
ஹரிராமாமாயவரே அருகிருந்துகாருமையா
கட்டினதேயுண்டானால் கட்டவிழப்பாருமென்றான்
மனதில்நினைந்தானே வாள்விசையனருச்சுனனும்
பவளக்கொடியாலே பாங்கிமார்கட்டினார்கள்
கட்டுக்கொடிகளது கடுகவேயிற்றுதங்கே
ஆனைகட்டுஞ்சங்கிலியால் அவனையேகட்டினார்கள்
ஆயனையவாலே அரிராமர்கிருபையினால்
அத்தனையுமவிழ்மி அறுத்தானேஅருச்சுனனும்
மார்பின்சரப்பளியை வாங்கியவனைக்கொடுத்து
கெட்டியாய்கட்டுமென்று கிட்டவந்துநின்றாளே
மாணிக்கச்சரப்பளியால் வலுத்திருக்கிக்கட்டினார்கள்
அவன்-காலையசக்குகிற கால்சேஷ்டைமெத்தவுண்டு
கையையசக்குகிற கைசேஷ்டைமெத்தவுண்டு
இங்கேயிருந்தாலே எனக்குவருமோசமென்று
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பல்லக்கின்மீதேறி பாங்கியர்சூழ்ந்துவர
மங்கையர்கள்சூழவேவந் திறங்கினாள்மண்டபத்தில்
வாள்விசயனருச்சுனனும் மாணிக்கச்சங்கிலியின்
கட்டையவிழ்த்தவனும் கடுகவெழுந்திருந்து
அச்சுதானந்த ரையரேயென்தோழா
ஆயிரந்தோழருக்கு அரிதாகியமணியே
கண்டீரோதோழாநீ கன்னியுடலட்சணத்தை
பார்த்தீரோயென்தோழா பவளக்கொடிலட்சணத்தை
இவளுக்கொப்பானோர் யாருமில்லைவையகத்தில்
ஈஸ்வரன்தேவி ஈஸ்வரியாளீடுமல்ல
இராமரிடதேவி யிலட்சுமிஈடுமல்ல
பிரமனிடதேவி சரஸ்வதிஈடுமல்ல
எமனிடதேவி மோககன்னிஈடுமல்ல
தேவேந்திரன்தேவி யிந்திராணிஈடுமல்ல
சந்திரனார்தேவி ரோகணிஈடுமல்ல

சூரியனார்தேவி சாயாதேவிஈடுமல்ல
கந்தருடதேவி கனகவள்ளிஈடுமல்ல
மன்மதன்தேவி ரதிமாதுஈடுமல்ல
ஆருடைய அழகுக்கு ஒப்பிடுவேனாரணங்கை
வேரிற்பவளமது மின்னுகிறகாந்திகண்டாய்
ஆயிரமின்னலிலே சோதிமின்னல்போல
கண்ணாலேபார்க்க முடியவில்லைகன்னியரை
எப்படிமறந்து இவளைவிட்டுநான்போவேன்
இறப்புக்கும்பிறப்புக்கு மினியொருபெண்வேணுமோ
இவளை-மாலைதரியாமல் வருவதொருநாளுமில்லை
இவளாலேயென்னுயிரும் இறக்கிறதப்பாது
அச்சுதானந்த ரையருந்தானகேட்டு
ஏன்காணும்வாள்விசையா யிந்தமதியுந்தனுக்கு
தோள்மாலைபோட்டதொரு தோழிமார்தங்களிலும்
பாஞ்சாலன்பெற்றபெண்ணை பத்தினியைமாலையிட்டீர்
அவளிலுமெத்த ஆரணங்கிவளழகோ
எந்தனது தங்கை சுபத்திரையைமாலையிட்டீர்
அவளிலுமெத்த ஆரணங்கிவளழகோ
அகத்தியனார்பெற்றெடுத்த அருங்கிளியாள்போகவதி
அவளிலுமெத்த ஆரணங்கிவளழகோ
மேகம்பயின்றெடுத்த மின்னொளியைமாலையிட்டீர்
அவளிலுமிவளழகோ ஆனந்தவாழ்மார்பா
அல்லியரைப்பார்க்கிலு மிச்சமுண்டோயிவளழகு
வேண்டாங்காண்வாள்விசையா வெறுத்துவிடுமவளாசை
எழுலட்சந்தேவிமா ரெல்லோருங்காணிருக்க
மாதொருத்திக்காக மயங்கிவிழுவானேன்
காண்டாவனமெரித்த காளையவன்கூறுவான்
நீர்-என்னதான்சொன்னாலு மென்செவியிலேறாது
மாதங்கக்கன்னியரை மணமாலைசூட்டினக்கால்
என்னுடையசிவன் யிருக்கும் ரண்ணந்தாமா
எண்ணப்படிமுடிக்க வேண்டுங்காணீஸ்வரரே
இருவருமாகவே யிருக்கிறவேளையிலே
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிநாயகமும்
பொழுதுசரிந்தது போகவேணும்மாளிகைக்கு
மார்பின்சரப்பளியை வாங்கிவாதாதியென்றாள்
அப்போதுதாதிமார் அதிதுரிதமாகவந்து
ஆர்காணுமன்னவனை அழகானஐயாவே
ஆச்சியார்கட்டிவைத்த அழகுசரப்பளியை
கட்டிவைத்துப்போனதை கடுகவேதாருமென்றாள்
பொழுதுசரிந்தது போராளரண்மனைக்கு

மார்பின்சரப்பளியை மன்னுகொடுத்திடென்றாள்
திட்டென்றெழுந்திருந்து தேர்விசயனேதுரைப்பான்
உங்கள்-அலகங்களேறி குதித்தேனடி ஆரணங்கே
கோட்டைகளேறி குதித்தேனடிகொம்பனையே
அரண்மனையேறி குதித்தேனடி ஆரணங்கே
மேலேகுதித்தேனே பவளநல்லாள்கோட்டையிலே
பெட்டியெடுத்தேனே பொக்கிஷந்திருடினேனே
மாதவள்கையை வலியவந்துதொட்டேனே
கள்ளன் திருடனைப்போல் கன்னமிட்டுபோனேனே
என்னகுற்றஞ்செய்தேனன் என்னையவள் தானும்
கட்டழகிமாதவளுங் கட்டிவைத்துப்போனாளே
கள்ளனைப்போலாகக் கட்டவும்நியாயமுண்டோ
திருடர்களைப்போலச் சேர்த்துகட்ட நியாயமுண்டோ
கட்டினால்தீருமோ கன்னியவளாசை
கட்டிவைத்தமாதென்னைக் காட்டில்விட்டுபோகலாமோ
கூடவழைத்தலவோ போகவேணுங்கொம்பனையாள்
அரண்மனைக்குளென்னை அழைத்துப்போகலாகாதோ
என்னசுதந்தரத்தில் என்னையவள்கட்டிவைத்தாள்
அம்மாள்மகளென்று அன்பாகக்கட்டினாளோ
அத்தைமகளென்று ஆசையாய்க்கட்டினாளோ
அழகானகன்னியென்று மணமாலைசூட்டினேனே
வடிவானகன்னியென்று வாழ்மணஞ்செய்தேனே
என்னசுதந்தரத்தால் என்னையவள்கட்டிவைத்தாள்
கையிலகப்பட்டதை விடுவேனோகன்னியரே
மார்பின்சரப்பளியை மாதேகொடுக்கேண்டி
வலியவந்தபாக்கியத்தை விடுவேனோகன்னியரே
சண்டையதுவேண்டுமென்றால் சரியாகவாரேண்டி
அவளுக்குஅஞ்சுவனோ ஆனந்தவாழ்மார்பன்
என்றதுங்கேட்டு எதுசொல்வாள்தாதியவள்
உந்தனுக்குசெய்த உபகாரமத்தனையும்
வேங்கைக்குச்செய்த விஷகாரியாச்சுதடா
மாண்டிடத்துமாண்டு மண்ணுளுக்குப்போகாமல்
எழுப்பிவிட்டதோஷமடா இத்தனையும்பேசுகிறாய்
ஆகடியம்பேசுதற்கு அடுக்குமோஉந்தனுக்கு
என்றதுசொல்லியே நடந்தாளிளங்கொடியாள்
வாயுவேகமாகவேதான் வந்தாளேமண்டபத்தில்
பவளக்கொடிமாதின் பாதத்தில்தெண்டனிட்டு
கைகட்டிவாய்புதைத்து கன்னியருமேதுரைப்பார்
மார்பின்சரப்பளியை மன்னவனைப்போய்க்கேட்டேன்
என்னென்றுசொல்லி யிடிவிழுவான்சொன்னதெல்லாம்

பொழுதசிந்தது போகுதேமன்மனைக்கி
மார்பிலசப்பளிகை மன்னவனே தாருமென்றேன்
அவளை-யப்பானவார்த்தைகளு பிம்பானபேச்சுகளும்
சட்டியவாள்சொன்னசொல் எதினைநானுரைப்பேன்
என்றுசொல்லதாதியர்கள் ஏதுசொல்வாள்பவளக்கன்னி
அப்போதுசொன்னேன் தப்புவருமென்றுசொல்லி
அவளையெழுப்புவது ஆகாதெயென்றுசொன்னேன்
நமக்குகிளையாச்சே நாம்சொன்னசொல்மெய்யாச்சே
எந்தசப்பளி போனாலும்போகட்டும்
மாளிகைக்குப்போவோம் மாதேபயமிடு
என்றவள்சொன்னவுடன் இளவிசயனருச்சுனனும்
அச்சுதானந்த ஐயர்முகம்நோக்கி
என்னவடிவுநான் எடுக்கவென்றுயென்றே தோழா
அன்னத்தின்மேலே ஆசையுண்டுமாதருக்கு
நீர்-வேடனைப்போலாக வேஷமெடுக்காணும்
என்னைவிலைகூறியே எடுத்துப்போகத்திறமுன்
பார்த்தாசைபட்டவளே பரிந்துவிலைகேட்பாள்
ஆயிரம்பொன்னென்றுசொல்லி அவள்கையிலேநீகொடு
ஊருக்குகிழக்கே விநாயகர்கோவிலண்டை
அங்கேபோயிருங்காண் அச்சுதனேநான்வாரேன்
என்று-மாயன்பெருமானை மனதிலேதானினைத்து
ஆயன்பெருமானை அப்போநினைத்தானே
எம்பெருமான்மேகவர்ணா யேழுலகளந்தமாயா
முட்டையின்குஞ்சை முகமறியப்பாலகனை
பிட்டுவளர்த்தீரே பிரபலியமாகவென்று
முக்காலேமுள்பொருக்கி முழுமதில்கூடுகட்டி
காக்கையினகுஞ்சுகளை கருதிவளர்த்தீரே
உன்னைநம்பி வுயிர்கொண்டுலாவுகிறேன்
பவளக்கொடியைநான் மணமாலைசூட்டுகிறேன்
அன்னவடிவாக ஆண்டவனேநீர்கொடென்றார்

ஸ்ரீகிருஷ்ணதேவர் அருச்சுனனுக்கு அன்னவடிவுகொடுத்தல்.

அருச்சுனன்தானினைக்க ஆயனதுவரிந்து
அன்னவடிவாக ஆயன்வரங்கொடுத்தார்
ஆறலழகுமன்னன் அன்னத்தைப்போலானான்
செட்டையழகென்ன சீருடையநெற்றியென்ன
காலழகென்ன காதுமடியழகென்ன
மூக்கினழகென்ன முன்னமயிரும்பாவனையும்
கூவுங்குரலழகும் குயிலோசைபோலிருக்கும்
அருச்சுனராசனவன் அன்னவடிவானான்








...ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு அன்னவடிவுகொடுத்தல்.

ஸ்ரீகிருஷ்ணதேவர் வேடவுருவெடுத்தல்.

அச்சுதானந்த ஐயர்பெருமாளும்
காட்டுக்கிழங்கெடுக்கும் கலைவேடன்போலானார்
கால்செருப்புந்தோல்நல்லாவும் கைதனிலேமான்வலையும்
பன்றிகுத்தும்பல்லயமும் பாரிசமுங்கைப்பிடித்து
கோட்டையிட்ட துப்பாக்கி குண்டுகுழல்கைப்பிடித்து
கருநாயுஞ்சங்கிலியும் கைதனிலேதான்பிடித்து
அன்னத்தையேந்திக்கொண்டு அவன்வாரான் கானகத்தில்
பவளக்கொடியாள் பத்தினியாள்தானிருக்கும்
மண்டபத்துவழியாக வருகிறான்வேடனவன்
ஆரணங்குந்தோழிமார் அன்னத்தைத்தான்பார்த்து
ஆடாவேடுவனே அன்னத்தைவிற்கிறவள்
விற்கிறையோநீசொல் வேண்டியபொன் தாரோமென்றாள்
அப்படியேநல்லதென்று அழகுள்ளவேடன்சொல்ல
ஓடியேவந்தவர்கள் உத்தமிமுன்தோழியர்கள்
ஆரோஒருவேடன் அன்னத்தைவிற்கவந்தான்
அன்னந்தனைப்பார்த்தால் அழகாயிருக்குதம்மா
கண்ணிட்டுப்பார்க்க காணமுடியாது
வைத்துவளர்க்கலாம் வாங்குமம்மா ஆச்சியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்னமடமாது
அந்தநல்லவேடுவனை அழைத்துவாருமென்றாள்
ஓடினாள்தோழியரும் ஒருநொடியில்வேடனண்டை
ஆடாவேடுவனே ஆச்சிஅழைக்கிறாள்
அன்னத்தைக்கொண்டுவாடா அழகுள்ளவேடுவனே
என்றதுசொல்லயிலே இசைந்துவழிநடந்து
பவளக்கொடியாள் பத்தினியாள்முன்னேவந்தான்
கண்டாள்பவளநல்லாள் கட்டழகியன்னமதை
என்னப்பாவேடுவனே என்னவிலைசொல்லுமென்றாள்
ஆயிரம்பொன்கொடுத்தால் அன்னம்தருவேனென்றான்
அன்னத்தைவாங்கி அழகாய்மடியில்வைத்தாள்
மூக்கினாலர்ச்சுனனும் முலைமார்பில்குத்தலுற்றான்
மார்பின்ஸ்தனத்தையவன் வாயால்பிடித்திழுப்பான்
முகத்தோடேமுகமணைப்பான் முத்தங்கொடுத்திடுவான்
பவளக்கொடியாளும் பத்தினியேதுசொல்வாள்
என்னடாவேடுவனே இப்படிமேல்விழுகிறது
ஆயிழையாள்தங்கை அவள்வளர்த்தவன்னமிது
பெண்டுகளென்றால் பிரியமாய்மேல்விழுமே
ஆசையாய்முத்தமிட்டு அணைத்துவிளையாடும்
நீயுவளர்த்திடென்று சொல்லிவழிநடந்தான்
அன்னமெப்போவுண்டதோ இரைகொடுத்தீரோ

அடிமேல்பாதந்தான்கொண்டுபோக பொன்னுருவேபொற்கொடியும்
பாம்படமும் [illegible] வாளுறும்பாடகமும்
[illegible]
கொண்டுவந்துவைத்தார்கள் [illegible]
அன்னத்துக்குஊட்டியே ஆவல்தெளியவைத்து
ஆடிதாதிகளே அழையுங்கள்தச்சனைத்தான்
ஏழத்தாகச்சாலே இட்சணமேயழையுமென்றாள்
ஓடினார்தாதியர்கள் ஒருநொடியில்விட்டுவந்தார்
வந்துபணிந்தானே வரிசையுள்ளதச்சனவன்
என்னையழைத்தது ஏதுகருமமென்ன
அன்னபட்சிதானிருக்க அழகுகூண்டுபண்ணுமென்றாள்
சொன்னவுடன்தச்சனவன் சீக்கிரத்திற்கொப்பணிட்டான்
சோடித்துவைத்தவனுங் கொண்டுவிட்டுப்போய்விட்டான்
அன்னத்தைத்தானெடுத்து அவலுடன்பழந்தனிட்டு
கூண்டிலடைத்தவளுங் கொப்பெனவேதானெழுந்தாள்
ஏறினாள்பல்லக்கில் எடுத்தார்நெடுங்குடைகள்
பக்கமிருந்தார்கள் பாங்கிகளுந்தோழிகளும்
சுற்றிநிறைந்தார்கள் தோழிகளுமப்பிராளும்
ஆனையின்மேல்பேரிகை அடிபடுதோசையுடன்
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைமுழங்குது
மேளதாளந்தான்முழங்க மொய்குழலாள்வாராளே
காடுகடந்து கரியமலைதான்கடந்து
வனமாய்வனங்கடந்து வாழ்பனைக்குவாராளாம்
தெத்துகடந்தாள் தெருவீதிதான்கடந்து
கடையுங்கடைத்தெருவுஞ் சமுகவீதிவிட்டு
அங்காடிவீதி அரண்மனையுந்தான்கடந்து
மாடத்தெருவீதி மாளிகையுந்தான்கடந்து
கோபுரவாசலண்டை கொப்பெனவேவந்துநின்று
மாளிகையுள்ளே நுழைந்தாள் கொலுமண்டபத்தில்
சிங்காரமண்டபத்தில் தென்மொழியாள்போய்ச்சேர்ந்தாள்
அந்திநேரமாச்சுது ஆதித்தன்போய்மறைந்தான்
பொழுதுமறைந்தது போதவிருளாச்சு
ஆடிதாதிகளே அலங்காரத்தோழிகளே
அன்னத்தைக்கொண்டுவிலே அறியீர்கள்தாதியரே
மாடத்திற்கூடத்தில் கட்டாதேமங்கையரே
நற்பவளத்தூணு நவரத்னக்கட்டிலென்றாள்
சல்லைமாமண்டபத்தில் தான்வைத்துக்கட்டினார்
பூரிதநிருப்பாளே பாரமெத்ததோணுதைக்கு
அக்கமாரேதங்கைமாரே அன்னமெத்தபாரமது

மஞ்சமலங்கரித்து மண்டபத்தைச்சிங்கரிப்பாள்
வைத்திழுத்துக்கட்டினார்கள் முன்னைக்கழுத்துக்களை
பவளக்கொடியாளுடைய பஞ்சணைமேல்மேலாக
நற்பவளத்தூணருகில் நலமாகக்கட்டினார்கள்
பவளக்கொடியாளும் பத்தினியாளப்போது
தீர்த்தங்கள்வாங்கியே திருவாய்முகங்கழுவி
போசனங்களுண்டு பொடிபள்ளிக்கட்டி
பஞ்சணைமெத்தை பள்ளியறைபோடுமென்றாள்
கடுகவெழுந்தார்கள் கட்டழகியர்கள்
கண்மூன்றுடைய கனைப்பிறக்கட்டிவிட்டு
மெத்தைதமடித்திட்டு மேலேமேடணைகோலி
காம்பரித்தலைப்பு கட்டிலின்மேல்பரப்பி
கால்கோட்டை கைகோட்டை இட்டங்காரிழைக்கு
ஒருகுதலைக்காணி ஒப்பாமப்பஞ்சணையாம்
தங்கத்தலைக்காணி சகலாத்துத்தலையணையும்
அன்னவுஞ்சல்மேலே அழகாகச்சோடித்தார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
கதம்பகஸ்தூரிகளைக் கரைத்துத்தெளித்தார்கள்
சந்தனமுங்குங்குமமுஞ் சவ்வாதுதான்தெளித்து
சாம்பிராணிவாடைகளும் சந்தனப்புகைகொடுத்தார்
பஞ்சணைமெத்தையண்டை தர்பலகட்டில்வைத்தார்
காச்சாகளிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளு மோரங்கிவெற்றிலையும்
வாசாயிலைச்சுருளும் வர்ணத்துவர்பாக்கும்
கொத்துத்துவர்பாக்கும் சோலைவயிலைச்சுருளும்
முத்துக்கட்டகன்றும் பொற்படிக்கம்வைத்தார்கள்
கெண்டிமையினிருகே பொன்செம்பும்வைத்தார்கள்
குத்துவிளக்கு நடையினிலேற்றிவைத்தார்
மாடவிளக்கு மயிலவிளக்கேற்றிவைத்தார்
ஆயிரம்பெருவிளக்கு வாசலிலேற்றிவைப்பார்
சோடித்தாளென்றுசொல்லித் தேதமொழிமார்தெண்டனிட்டார்
அப்போ-பவளக்கொடியாளும் பத்தினியாள்தானெழுந்து
வாசல்பதினெட்டுங் காக்கிறதாதியர்கள்
பத்திரங்காவலென்று பஞ்சணையிற்போயிருந்தாள்
பள்ளியறைச்சாலையிலே பைங்கிளியும்போய்நடந்தாள்
காயாமக்காய்த்த கமுகினிளம்பாக்கும்
வாயாரத்தின்றவளும் மலரணையிற்பள்ளிகொண்டாள்
நிமிசாபெரியலகு நேரிசமாம்பெரியசத்தி
மந்திரவாளு நவி மார்மேலேசாத்திக்கொண்டாள்
பவளக்கொடியாளும் பள்ளிகொண்டாளப்போது

அங்கங்கே தாதியர்கள் ஆணைவொருப்பள்ளிகொண்டார்

அருச்சுனன் அன்னவடிவைவிட்டு தன்சுயரூபமாகுதல்.

ஆனந்தல்நெடுநாழி சென்றபிறகாக
ஆணழகனருச்சுனனும் ஆயனைத்தானினைந்து
மாயன்பெருமானை மனதிலேதானினைந்து
கூட்டைத்திறந்தவனும் சொப்பனரூபமானான்
அன்னவடிவைவிட்டு ஆண்ரூபமானானே
பொல்லாதகாதல் புலம்புறதுக்கெளியது
வன்குயில்பல்லியது வையமாய்சொல்லுறது
எழுப்பியகாதலும் எண்ணியவள்பார்க்கையில்
ஆள்வருத்தாகவே சொல்லுறதுங்கெவுளி
அடுத்தடுத்துசொல்லுவதும் ஆள்வருத்தாய்காணுறது
இத்தனைநாளாக இல்லதுகெவுளியது
ஒருநாளுஞ்சொல்லாத வுச்சிமையச்சொல்லுறது
காட்டிலிருந்தவர்கள் கள்ளரோநானறியேன்
ஆயாசப்பட்டவளும் அழுதாற்போலிருந்தாள்
பின்னுமொருநாழி பொழுதத்தபிறகாக
பொல்லாதகாதல் எழும்பிற்று பொற்கொடிக்கு
எழுப்பியகாதலை எண்ணியவள்பார்ப்பளவில்
அடுத்தடுத்துச்சொல்லுவதும் ஆள்வருத்தாய்காணுவதும்
எண்ணிமனங்கலங்கி இளங்கொடியாளேதுசொல்வாள்
ஆமடிதாதிகளே வலங்காரச்செங்கமலம்
பஞ்சணைமேலாக பாங்கியர்பள்ளிகொண்டாள்
ஒருநாளுஞ்சொல்லாத வுச்சிதக்கெவுளியது
வலப்புறத்துப்பல்லி வலபுறமாய்சொல்லுதடி
கெவுளியின்சாஸ்திரத்தை ஆய்ந்துபாரடீ
என்றதுகேட்டவுடன் இளங்கொடியாள்தாதியர்கள்
அவளறிந்தசாஸ்திரத்தை ஆய்ந்துபார்க்கலுற்றாள்
ஆள்வருத்தாய்காணுதுகா ஆச்சரியமென்னசொல்வேன்
ஆரோதெரியாது ஆள்வருத்தாய்காணுது
அவ்வார்த்தைக்கேட்டுமவ ளாரணங்குரைப்பாள்
வாசல்பதினெட்டும் காத்திருக்குமந்திரிகள்
பத்திரமாகவே காத்திருங்கள்பெண்கிளியே
எச்சரிக்கையாகவே இருங்களடிகாவல்
தப்பிதமுண்டானால் தலையைத்தரித்திடுவேனே
காவலுடையவற்கு கட்டுதிட்டம்பண்ணினாள்
பவளக்கொடியாள் பத்தினியாள்சொற்படிக்கே
பதினெட்டுவாசலுள்ளோர் பத்திரமாய்காத்திருந்தார்
அன்னஅஞ்சல்மேலாக ஆணைத்துப்பள்ளிகொண்டாள்
இன்றுமொருநாழி பொழுதத்தபிறகாக

சாண்டாவணமெரித்த காளையெழுந்திருந்து
எப்படிக்குஇவனுடனே இணங்கிமருவியேன்
என்று-மூச்சைப்பிடித்தவளும் வெள்ளைக்காயைத் தந்துவிட்டான்
கொம்பனையாள் பெத்தையிலே மணிகளைச்சேர்த்துக்கொண்
பொட்டுடனே வசனமிட்டு பார்த்தாளே பொற்கொடியும்
மந்திரவாளாலே வீசினமாதுசன்னி
முன்னாலேகையாமல் பின்னாலேகையால் குதித்தான்
நற்பவளத்தாளு நடுவாகயிற்றுதங்கு
வெட்டல்பூதத்த வீசமணிவாளாலே
பவளக்கொடியாளும் பத்தினியாள் அதிசொல்வாள்
வானவர்களாலுமல்ல வானவர்முகுந்தக்குதப்பிவார்
மனுஷரானாலும் மன்னிடத்திலேவார்
என்றுசொல்லப் பூங்கொடியாள் தானும்பார்த்தாள்
பின்னுமொழிநாழி பொறுத்தபிறகாக
ஆனந்தமாய்பவளம் அருச்சுனருசதுரை
நித்திரைமேவியோ ருசாவுமக்கமோ
மருந்தைத்தான்பிடித்து மன்னனைச்சேர்த்துவிட்டான்
அரவமுங்கில்லணியும் மணிகளைச்சேர்த்துகொண்
வெல்பொருந்தகண்ணாளும் வீசலுற்றாள்நேரம்
வீசினவாளுக்குவெந்தனருச்சுனனும்
முன்லாகையாமல் பின்லாகையால் குதித்தார்
நற்பவளத்தாளு நடுவாகயிற்றதுசான
கண்விழித்துப்பார்த்தாளே கட்டழகியாதுசன்னி
காட்டிவிருந்த கள்ளன் திருடனோ
வானவர்களேதவரிக்கு வந்தாளோநானறியேன்
மந்திரம்புருவேதன் மணிகளைசவாவேனன்
வானவர்களேதவமென்றால் எவ்வாள்முகுந்துதப்பிவார்
ஆனாலுமானால் அவர்பிழைக்கப்பாரதில்லை
ஏறிட்டுப்பார்த்தாளே இளங்கொடியருச்சுனனை
மன்னவனின்முதுகிலே மச்சரேகைகண்டாளே
அப்போதையன் அருச்சுனனுமே மதுனைப்பான்
உலகாசனுக்குவானவர்கள் தேவருமவருவாரோ
நானே-தேவதிபிண்டமடி தேர்விசைப்பார்ச்சுனனடி
பேர்பெற்றுடைய பெருமாளுடமைத்துனனடி
மாயனுக்குமைத்துனன்நானடி
என்று-பல்லொலியைக்காட்டிருன் பவளக்கொடியாளுக்கு
சொர்க்கபதியப்பன் சொல்லை அப்படிவிழுந்தாள்
ஆறுமுகத்துமன்னன் அர்ச்சுனனைக்கொழுந்து
சாயமணிக்குயிர் சக்கைத்த ஆறுவைத்தி

வீசிறாங்களே தெளிய வெண்சாமரைக்காரி
கற்பழியாக்கன்னியரும் கற்பழிந்துபோனேனே
கற்பழிந்துபோனேனமையனை றா கன்னிபுலம்புகிறாள்
அப்போதுசையன் அர்ச்சுனனுமேதுசொல்வார்
நீதானோகற்பழிந்தாய் நேரிழைநாயகமே
கற்பழிந்தமாதர்களை கன்னியர்ச்சொல்லுகிறேன்
தீயிற்பிறந்தவளும் தென்னாட்டான்பாவையரும்
மேகம்பயின்றெடுத்த மின்னொளிநாயகரும்
பார்மண்டலமாளும் பார்ப்பானமடந்தையரும்
நாகம்பயின்றெடுத்த நறுநுதலாள்கன்னியரும்
அச்சுதன்தங்கையவள் ஆரணங்குசுபத்திரையாள்
மகுடத்திரைச்சியவள் வாழ்வரசியல்லிமுதல்
நான்-கற்பழிந்தமாதர்கள் கணக்குமிதமில்லை
என்றதுகேட்டு இளங்கொடியாளேதுசொல்வாள்
எத்தேசங்களும் இவ்வேதொழில்தானோ
எப்போதுமெந்தனுக்கு இதுவேதொழில்தானடி.
குருகுலவம்மிஷத்தில் குந்தியுதரத்தில்
ஐவருடன்பிறந்தேன் ஞானக்கவாழ்மார்பன்
அவனிமுழுதும் ஆளுகிறார்தருமலிங்கம்
நான்-தேசங்களைக்கொள்ளையறுந்தே செல்வரைப்பெறுகிறதும்
இதுவேதொழிலாக இருக்கிறேனேந்திழையே
மன்னவருந்தையரும் மணதுவுறவாகப்பின்பு
உன்மேல்மயலாகி உள்ளமுருகுதடி
அன்னவடிவுதான் கொண்டேனே ஆரணங்கே
வேடனுருவாகதனிலே வில்லியாகக்கண்டாயே
அதினாலுஞ்சாடை யறியாமற்போனாயடி.
என்-மூக்கிறையுன்மாரை குத்தினாயேமாநகையே
உன்-மார்சுனையைக்குத்தி வலிக்கவைத்தேனடிமங்கையரே
அதினாலுஞ்சாடை யறியாமற்போனாயடி.
ஆளனுந்தங்கியுமாய் அக்காட்டிலிருந்தேன்
கதண்டுகொட்டிசெத்தவனைப் போலரணிலிருந்தேன்
பவளக்கொடியுருத்து கட்டிவைத்தாயப்பத்தினியே
கட்டுக்கொடியை யறுத்தேனடிமங்கையரே
அதினாலுஞ்சாடை யறியாமற்போனாயடி.
ஆனைகட்டுஞ்சங்கிலியா லென்னைக்கட்டிவைத்தாய்
சங்கிலியைநானறுத்துப் போட்டேனேதையலரே
அதினாலுஞ்சாடை யறியாமற்போனாயடி.
உன்-மார்பின்சரப்பளியால் வாங்கியென்னைக்கட்டிவைத்தாய்
உன்-சரப்பளியைப்பறித்து வாங்கிவைச்சிக்கொண்டேனே
சொல்வார்த்தையெல்லாஞ் சொல்லுகிறேனடி

உன்னை-யிட்டியழைப்பினண்டி நிக்காகச்சொன்னேனண்டி
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனபடி
அன்னவடிவு எடுத்தேனே ஆரணங்கே
வேடனூர்கொண்டுவர விலைகொடுத்துவாங்கினையே
உன்-முத்துஸ்தனத்தைநான் குத்திவைத்தேனே
மார்பின்சதையை வலித்தேனடிதையலரே
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனபடி
வேடனைப்போலாக வந்தவனுமென்றோழன்
அன்னத்தைக்கொண்டுவந்து அரண்மனையிற்கட்டிவைத்து
பவளக்கால்மண்டபத்தில் பத்தினியேகட்டிவைத்தாய்
அன்னவடிவைவிட்டு ஆள்ரூபமானேனடி
பஞ்சணைமெத்தைதனை அசைத்தேன்மணியசைய
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனபடி
உனக்கு-அழகேபெரிதுகண்டாய் ஆண்மைகள்போதாது
மருட்டுரைச்சியவள் வாழ்வரசியல்லிநல்லாள்
அல்லியவளுடைய ஆண்மையுனக்கில்லையடி
இவையெல்லாஞ்சொல்லியே சிரித்தானிளவிசையன்
பவளக்கொடிமாது பத்தினியாளேதுசொல்வாள்
தோழநீருமாய் வந்தேனென்றீர்சுந்தரரே
அருகேவந்ததோழரவர் ஆணழகரெங்கேயென்றாள்
ஊருக்கு அப்பாலே பிள்ளையார்கோவிலண்டை
பிள்ளையார்கோவிலண்டை யிருக்கிறானென்றோழர்
அவரையழைத்துவா ஆணழகாதோழரைத்தான்

பவளக்கொடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையழைத்துவர அர்ச்சுனராசனை யனுப்புதல்.

என்றதுகேட்டு இளவிசயனேதுசொல்வான்
எந்தவழியாக இளங்கொடியேநான்போவேன்
சாங்கத்துக்குள்ளாகச் சுருக்காய்நடவென்றாள்
அப்படியேநல்லதென்று அர்ச்சுனனுமெழுந்து
சாங்கத்துக்குள்ளாகச் சுருக்காய்நடந்தானே
கோட்டைகடந்தானே கொத்தளமுங்கடந்து
பிள்ளையார்கோவிலண்டை போனானேவாள்விசையன்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனராசனை நினைத்துப்புலம்பல்.

அச்சுதானந்த மையர்புலம்புகிறார்
ஆருயிர்தோழனே அர்ச்சுனனேயென்னசெய்வேன்
உன்-அண்ணர்தர்மராசரும் அனுப்பினாரென்பிறகே
இருவருமாகவே இருக்குந்தீவுதனில்
உன்னையிழந்துநான் எவ்வழியேபோவேனோ
முத்தர்மேலாசையை யகற்றிவிடுத்தீரோ

அவனை-கூடியணையிலே காவலர்கண்டாரோ
பார்த்தர்பெருமானே வஞ்சகட்டழிவேனே
நீகட்டிடணையிலே காவலர்கண்டாரோ
உன்னை-கட்டிப்பிடித்தாரோ காவலிலேவைத்தாரோ
அவனைக்-கூடியொழுக்கிருக்க கோடிபோர்வந்தாரோ
வெட்டிவெறிந்தாரோ வீரமணிவாளாலே
உத்தமவீரியனே உயிர்கழுவில்வைத்தாரோ
நீமாண்டுமடிந்தாயோ உன்வயிரமுடி சிந்தினதோ
மன்னர்பெருமானுக்கு வாட்டங்களுண்டானால்
சந்தனவடிவழகர் தர்மருக்கேதுசொல்வேன்
வெற்றிமதயானை வீமருக்கென்னசொல்வேன்
ஈரலபுருக்க யிரட்டையருக்கென்னசொல்வேன்
தோராவடிவழகி திரௌபதைக்கென்னசொல்வேன்
மந்தாரக்குந்தியர்க்கு மாதாவுக்கென்னசொல்வேன்
அவர்-அங்கிகபிழையாரே ஆனமுனாவென்னசொல்வேன்
காணவும்போனேனே கான்வேபர்கொண்டவனே
பாண்டிப்பெருமானை பார்க்கவும்போனேனே
என்றுசொல்லிமாயவரும் ஏங்கிப்புலம்பலுற்றார்
அந்தசமயத்திலே அங்குவந்தான்வாள்விசையன்
ஏன்காணுமச்சுதரே ஏங்கிப்புலம்புகிறீர்
என்-சமர்த்துகளும்சேவகமும் தாழ்வாகப்போறதில்லை
எந்தவிதத்தாலும் ஈடேறித்தான்வருவேன்
என்றதுகேட்டப்போ ஏதுசொல்வார்மாயவரும்
என்னவடிவாயிருந்தாயிவளுடனே
அன்னவடிவாக அவளுடனேசேர்ந்தீரோ
ஆண்ரூபமாகி அருங்கிளியைச்சேர்ந்தீரோ
மனிதரூபமாகி மாதனைச்சேர்ந்தீரோ
என்னவடிவாகயிருந்தீரவளுடனே

அருச்சுனன் பவளக்கொடியாள் சேதியைச்சொல்லல்.

என்றதுகேட்டப்போ இளவிசையனேதுசொல்வான்
அல்லகாணச்சுதரே ஐயர்பெருமானே
அன்னவடிவாக இருந்தேனவளிடத்தில்
பவளக்கால்தூணிலே பத்தினியுங்கட்டிவைத்தாள்
பஞ்சணைமெத்தையிலே பள்ளிகொண்டாள்லத்தினியும்
அர்த்தராத்திரிவேளையிலே நானெழுந்தேனச்சுதரே
அவள்-நித்திரைசோதித்து நினைவறியவேணுமென்று
அன்னவுஞ்சல்தன்னைநான் அசைத்துவிட்டேனப்பொழுது
அசைத்துவிட்டேனப்பொழுது அவள்கையில்லாருசி
முன்னாஞ்சயாகாமல் பின்லாசையால்திருத்தேன்
மனிதரூபமானக்கால் வாள்முனைக்குப்பார்க்கல

தெவ்வருபாசனுக்காக் கொம்பிப்பிறைத்திடோர்
வர்தனமிசொன்ன வயிரோதியைக்கேட்ட மாற்றான்
நான்பி [illegible]
பேரும்புகழ்பெற்ற பெருமாளர்மைத்துனண்டி
நாயன்பெருமாளுக்கு மைத்துனன்காண் தாண்டி
இவ்வார்த்தைதான்சொன்னே னிளங்கொடியாள்மாதருக்கு
பல்லெல்லாமிளையகாண்காட்டிப் பார்த்துநகைத்திட்டேன்
கண்மயங்கிவிட்டாள் கட்டழகிகன்னியவள்
சோபித்துதான்களைத்தாள் தோகையிளங்கொடியும்
கூடிமகிழ்ந்தேன் குங்குமச்சாலையிலே
மகிழ்ப்பிரிந்தேன் மாதருடவானேனே
உல்லாசமழுப்பெனை உத்தாரம்பண்ணிவிட்டாள்
அவள்மாளிகைக்குப்போக வாருங்காணச்சுதரே
அப்படியேயர்ச்சுனனும் அரவமுகனிருவருமாய்
கல்லடங்கான்கொடுத்து தட்டிவரிந்துகட்டி
தட்டியின்மேலொட்டியாணம் சதுராய்வரிந்துகட்டி
முத்திழையுருமாலை முகமிலங்கக்கட்டினார்கள்
சட்டைமாலையாளும் தரித்தாரழகுபெற
பொன்முடித்துப்பட்டாடை போர்த்தினார்மேலாக
அப்போதருச்சுனனும் அரவமுகனைத்துசொல்வான்
அச்சுதனைக்கையமேலெங்கேதாமு
சாப்பலியும்பொன்முட்டையும் எடுத்துக்கொண்டுவாருமென்றார்
அப்படியேயச்சுதரும் அமுதுமுட்டைதானெடுத்து
இருவருமாகவே இசைந்துவழிநடந்தார்
சுருக்கவழியாக தருசாலைப்போய்நடந்தார்
பவளக்கொடியாள் பட்டினியாள்கோட்டையிலே
உள்ளாசல்போய்நுழைந்தார் உத்தமவீரர்கள்
அகத்தின்னதனைத்தாண்டி முன்பாசலந்துநின்றார்
வந்தவரைக்கண்டாளே பாதுமிளங்கொடியும்
பதறியுடன்புத்தியுடன் பார்க்கவெனமென்றாள்
கொண்டுவந்தமுட்டையைக் கொற்றவனார்கீழேவைத்து
கொம்பனைக்கேபிரேவந்து கொற்றவர்கள்தானமர்ந்தார்
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அப்போ-செல்வபொருது கண்ணாளும் வேந்தர்களைத்தான்பார்த்து
உங்களிருவருக்கும் இதுவேதொழில்தானோ
எங்களிருவருக்கும் இதுவேதொழில்தானென்றார்
முட்டையென்னவென்றுசொல்லிக் கேட்டாளிளங்கொடியும்
அப்போ-அச்சுதனைக்கையருமேமதிசொல்வார்
அர்ச்சுனர்முன்னாலே அன்னவடிவெடுத்து
உன்கொலுமுகச்சாவடியில் கொம்பனையேமுன்னேவந்து

அவர்-ஆட்டமும்பாட்டமும் அதிசயத்தைநீபார்த்து
அன்னமென்றுசொல்லி ஆரணங்கேநான்பிடித்து
வேடனாக வில்லைகூட்டிவந்தேனே
என்னவிலையென்று இளங்கொடியே நீகேட்க
ஆயிரம்பொன்னென்று ஆரணங்கேசொன்னேனே
நீ அன்னமொருகட்டிப் பொன்னொருகட்டியாக
பொற்கொடிநீகொடுத்த பொன்னுடனே அம்மாயிது
கான் வேடனார்க்குசமான வனத்தில்கட்டிவைத்த
உன்-மார்பின்சரப்பளியை மாதாவுக்கென்று
கருநீலப்பூங்குழலாள் மையோதான்கொடுத்தாள்
அப்போதுபெண்மயிலாள் அவர்கையிற்றான்வாங்கி
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடியாளப்போது
மெத்தவிளைப்பாயிருக்கிறீர் வேந்தர்களே
போசனங்கொளங்கேயென்றாள் பொற்கொடியாளிளங்கொடியும்
அப்போ-ஆயர்பெருமானும் அர்ச்சுனர்தாங்கேட்டு
அல்லியிடத்தில் அங்கேபசித்ததுகாண்
மூன்றுநாளாச்சுதே மெல்லியரேதான்பசித்து

பவளக்கொடியாள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கும்
அருச்சுனனுக்கும் விருந்திடல்.

இவ்வார்த்தைதான்கேட்டு இளங்கொடியாள்தானெழுந்து
அவளாக்கும்மெய்யாளரிசிபதந்தானறிவாள்
அப்படிப்பட்ட ஆரணங்குமப்போது
பட்டாடைதான்வாங்கிப் பாவாடையுந்திருத்தி
அடிசில்சமைக்க ஆரணங்குதானினைந்து
பாண்டத்தைக்கழுவி பனிநீருமேவார்த்து
சின்னசம்பாதன்னரிசி தீட்டியுலையிலிட்டாள்
முத்துப்போல்சாதம் வடித்தாளிளங்கொடியாள்
நந்திபெறும்பூசணிக்காய் நாலுவிதக்கறிசமைத்தாள்
வாழைக்காய்ப்பொரியலிட்டாள் வாழைக்காய்தான்குழம்பு
பீர்க்கங்காய்ப்பொரியலிட்டாள் புடலங்காய்தான்பொரியல்
கத்திரிக்காய்தான்பொரியல் கருணைப்புளிக்குழம்பு
கொத்தவரைக்காய்கள் குழைச்சாமல் பொரியலிட்டாள்
பாவக்காய்ப்பச்சடியும் பயித்தங்காய்ப்பொரியலிட்டாள்
அக்கினிறகொடுக்கு நீர்க்கோப்பால்காச்சி
புத்துருக்குநல்லநெய்யும் பொன்போல்பருப்புகளும்
அதிரசமுந்தேன்குழலும் அறுசுவைபதார்த்தங்களும்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் பெண்ணாளே போசனமும்
ஆயிரத்தெட்டு அரிக்கரியும்பொரிக்கரியும்

கடுகச்சமையலிட்டாள் கன்னியிளமயிலும்
ஆச்சுதுபோசனங்கள் அமுதுணவாங்களென்று
பாளையும்ஓலையும் பக்குவமாயக்கொடுத்தாள்
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
தீர்த்தநீர்வாங்கி திருமுகமுஞ்சுத்திசெய்து
வசந்தநீர்வாங்கி மதிமுகமுஞ்சுத்திசெய்து
பூசைபண்ணுமண்டபத்தில் புண்ணியர்கள்வந்துநின்று
வாழையிலைபோலே வழித்திட்டார்வெண்ணீறு
கோவையிலைபோலே குழைத்திட்டார்வெண்ணீறு
பூசைமுடித்து புகழ்வேந்தர்வீரியரும
போசனமண்டபத்தில் புண்ணியர்கள்வந்திருந்தார்
வட்டமணைபோட்டார்கள் வந்தவர்களிருவருக்கும்
வட்டமணைமீது வந்தமர்ந்தாரிருவருமாய்
வாழையிலைபோட்டு வட்டித்தாள்சாதமது
சுத்திகரியும்வைத்தாள் தோகையிளங்கொடியாள்
அள்ளிபருப்பையிட்டாளதுக்கண்டுநெய்வார்த்தாள்
குளிர்ந்தசலம்வெங்கீருங் கச்சாயங்கனிவர்க்கம்
இத்தனையுந்தான்படைத்து ஏந்திழைபாளப்போது
உண்ணுங்களென்று உபசாரணைசெய்யலுற்றாள்
போசனங்களுண்டு பொடியிட்டுக்கைதுடைத்து
சிங்காதனத்திலே தோர்விசயன்வீற்றிருந்தான
காச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளும் மோரங்கிவெற்றிலையும்
அள்ளிக்கொடுத்தாளே ஆரணங்குயிருவருக்கும்
பவளக்கொடிமாது பத்தினியாளைதுரைப்பாள்
ஆயரோஅச்சுதரே அணணுக்வநீர்களும்
சேரும்புராசாக்கள் செய்ததவநத்தவத்தால்
பவளக்கொடியேலே பத்தினியாள்பெண்பிறந்தேன்
பதினறுவருஷமா பட்டமரசாண்டேன்
கொள்ளவருவார்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் வானலட்சங்கோடியுண்டு
நான்-மாலைதரியாமல் மணமாலைசூட்டாமல்
நித்யகன்னியாகவே யிருக்தேனிநாள்வரைக்கும்
அருச்சுனராலே யழிக்துதேபெக்தலங்கள்
பத்தினிசாபமது பாழாய்முடிந்துதே
எந்தன்விதிப்பயனை எதென்றெடுத்துரைப்பேன்
கதியைத்துலைக்கவல்லேன் காக்வரிதீக்கவல்லேன்
என்விதியைத்துலைக்குகைக்கு வெல்லவகையறியேன்
சேரும்புராசருக்கு தேன்மொழியாளென்னசொல்வேன்
இப்படியாக யிளங்கொடியாள்தான்புலம்ப

அச்சுதானந்தரும் ஆரணங்கைத்தான்பார்த்து
என்னென்றுசொல்லி எடுத்துரைப்பார்மங்கையற்கு

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பவளக்கொடியாளுக்கு களவுசொல்லுதல்.

பவளக்கொடிமாது பத்தினியேயென்னாச்சி
என்னைப்பிறப்பித்த ஈஸ்வரனுமீஸ்வரியும்
அக்கினியாத்துக் கருகாகவேவந்து
சூலமொருகையிலே கபாலமொருகையிலே
மானுமொருகையிலே மழுவுமொருகையிலே
விரித்தசடையும் வெண்புலித்தோலாசனமும்
பக்கங்கொலுவிருக்கும் பார்வதிநாயகமும்
சங்காபவானியரும் கவுரிதரித்தவனார்
திருக்கண்ணுடையவருந் திருநீறுதானணிந்து
வெள்ளைரிஷபமேறி வித்தகரும்வந்தார்கள்
நான்-கண்டுபயந்து கடுகசரணமிட்டேன்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிமாதே
சேராம்புராசாக்கள் செய்ததவத்தாலே
பவளக்கொடிமேலே பாலகியையுண்டுபண்ணேன்
பதினாறுபிராயமட்டும் பட்டந்தரிப்பித்தேன்
நாளை-மத்தியானவேளையிலே மாலைதரிக்கவேணும்
மாலைதரியாமல் மணமாலைசூட்டாமல்
இருந்தீரேயாமாகில் எரித்திடுவேன்பட்டணத்தை
பட்டணத்தைநீறாக்கிப் பதியைக்கொளுத்திடுவேன்
மெய்யாகக்கண்டேன் விழித்தேன்கனவாச்சு
இப்படிக்குக்கண்டேனென்று வந்திழையேசொல்லுமென்றார்
அப்படிக்குச்சம்மதித்தா ளாரணங்குமப்போது
போய்வாருமென்றுசொன்னார் புண்ணியரிருவருமாய்
அப்படியேநல்லதென்றாள் ஆரணங்குபவளக்கொடி
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனனுமாயவரும்
சுரங்கத்துக்குள்ளாக துரிசாய்நடந்துவந்து
சுரங்கத்தைவிட்டு வடகோடிகானகத்தில்
ஒட்டைபிள்ளையார்கோவிலண்டை வுத்தமர்கள்போயிருந்தார்
அப்படிக்குத்தானிருந்து ஆரணங்குமங்கையவள்
சப்ரகூடமஞ்சத்தில் தையலாள்நித்திரைசெய்தாள்
அந்தச்சமயத்தி லாரணங்குதாதியர்கள்
அருகேபுடைசூழ அரிவையர்கள்வந்துநின்று
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை
அலண்டுயெழுந்திருந்தா ளாரணங்குமங்கையவள்
காம்பழுகிநிற்பதென்ன கண்டார்கள்தாதியர்கள்
ஒருநாளுங்கருகாத மல்லிகைபுஷ்பமெல்லாம்
காம்பழுகிநிற்பதென்ன காரணமோசொல்லுமென்றார்

பவளக்கொடியாள்கண்டகினவை தாதிகளுக்குச்சொல்லுதல்.

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிசொல்லுகிறாள்
மஞ்சத்தின்மேலேநான் மாதர்களேநித்திரைசெய்தேன்
அந்தநல்லவேளையிலே ஆதிசிவனிங்கேவந்து
என்னை-தட்டிஎழுப்பினா தாமக்குழலாளே
அலண்டுயெழுந்திருந்து யாரென்றுநான்கேட்டேன்
உன்னைப்பிறப்பித்த உம்பர்பிரான்வந்தேனென்றார்
எங்கேவந்தீரென்று இளங்கொடியேநான்கேட்டேன்
பதினாறுவயதளவும் பட்டமாசாண்டாய்
நீகேட்டவரம்நான்கொடுத்தேன் கிளிமொழியேஉந்தனுக்கு
நான்-மாலையிட்டுக்கொண்டதாக மங்கையரேகினவுகண்டேன்
மஞ்சத்தின்மேலேநான் மகிழ்ந்திருக்கக்கண்டேன்
நான்-கண்டகனவாலே கருகிற்றபுஷ்பமெல்லாம்
இவ்வளவுநானறிவேன் மற்றொன்றுநானறியேன்
என்றேயிளங்கொடியா ளெடுத்துவுரைக்கலுற்றாள்
தாய்போல்வளர்த்தெடுத்தத் தாதியர்களதான்கேட்டு
மணமாலைசூட்டுதற்கு மணமுண்டோமங்கையரே
அப்படியேசம்மதித்தா ளரிவையிளங்கொடியும்
இவ்வார்த்தைகேட்க எழுந்தாரேதாதியர்கள்

பவளக்கொடியாள் கண்டகினவைக்கேட்டு தாதியர்கள்போய்ச் சேராம்புராசர்களுக்குச் சொல்லல்.

சேரும்புராசரண்டை தீவிரமாயோடிவந்து
முக்காலடிவணங்கி மூன்றுகால்தெண்டனிட்டார்
தெண்டனிட்டமாதர்களை கண்டார்களரசாக்கள்
என்னைப்பணிந்ததென்ன வந்திழையேசொல்லுமென்றார்
அப்போ-கைகட்டிவாய்புதைத்துக் கன்னியர்கள்சொல்லுகிறார்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிநாயகியாள்
பதினாறுவயதளவும் பட்டமாசாண்டிருந்தாள்
பட்டங்கட்டியாண்டிருந்தாள் பாருலகமத்தனையும்
இன்றையதினத்திலே இளங்கொடியாள்கோட்டையிலே
கண்டவதிசயத்தை கன்னியர்சொல்லுகிறோம்
பார்த்தவதிசயத்தைப் பாவையர்கள்சொல்லுகிறோம்
என்னவென்றுசொல்லி யெடுத்துரைப்போமன்னர்களே
மஞ்சத்தின்மேலிருந்த மலர்கள்கருகிற்று
இதுவென்னவென்றுகேட்டோம் இளங்கொடியாள்நாயகியை
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிசொன்னது
தன்னைப்பிறப்பித்த சுவாமியவர்வந்துநின்று
சொற்பனஞ்சாதித்தாராம் தோகையிளங்கொடிக்கு
பதினாறுவயதளவும் பட்டமாசாண்டாய்
கேட்டவரம்நான்கொடுத்தேன் கிளிமொழியேயுந்தனுக்கு

மணமாலைசூட்டுமென்று மகாதேவர் தானுரைத்தார்
இனி-கேட்டவாயநாளைக்கொடுத்தேன் கிளிமொழியேயுந்தனுக்கு
என்றுவுரைத்தாரும் ஈஸ்வரனுமப்போது
இப்படிக்குக்கண்டேனென்று ஏந்திழையாள் தானுரைத்தாள்
மணமாலைசூட்டுதற்கு மங்கையற்குமனதாச்சு
என்றுவுரைத்தார்கள் ஏந்திழைமார்தாதியர்கள்
இவ்வசனங்கேட்டார்கள் இன்பமுடன்ராசாக்கள்
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
முட்டப்பெருகி முழுஆறுவந்ததுபோல்
சந்தோஷப்பட்டார்கள் தரணியாளும்ராசாக்கள்
சேராம்புராசாக்கள் துரைகளவரேதுசொல்வார்
எங்கள்-மனதிலிருந்தபடி ஆச்சுதம்மாவுந்தனுக்கு
நாங்கள்-பண்ணுந்தபசுபலன் பலித்துதம்மாபத்தினியே
மாலையிடவல்லோ வருந்துகிறோம்நாங்களெல்லாம்
எங்கள்தபசுபலன் ஈடேறிப்போச்சுதம்மா
கன்னிகழியாதார் காசினியிலாருமில்லை
அப்படியேயநீயும் அழகுமணமாலையிடும்
சிந்தைகுளிர்ந்தாரே சேராம்புராசாக்கள்

சேராம்புராசாக்கள் மந்திரியையனுப்பித் தமுக்கடிக்கும் பறையனை அழைத்துவரச்சொல்லல்.

ஆரடாமந்திரியே அறிவுள்ளவீரியனே
இன்றையபோதையிலே எந்தன்மகளார்க்கு
மணமாலைசூட்டவேணும் மங்கையிளங்கொடிக்கு
தோட்டியைத்தானழைத்து தமுக்கோசைபோடவேணும்
வெட்டியானைத்தானழைத்து வீரமுரசறையனிடம்
மண்டலத்துராசாக்கள் வரவழைக்கச்சொல்லுமென்றார்
ஆரடாதூதுவனே அழையடாசாம்புவனை
ஓடியழைத்தவனை ஒருநொடியில்வாருமென்றான்
சொன்னதைக்கேட்டுத் துரிதமாய்த்தூதுவனும்
என்னையழைத்தவகை யேதுகருமமென்றான்
அப்போ-ஐம்பதுபேராசாக்கள் ஐயமாயேதுசொல்வார்
பவளக்கொடிமாது மணமாலைசூடுகிறாள்
பட்டத்துராசாக்கள் பலபேருந்தானறிய
முரசறையவாருமென்றார் முடிமன்னர் மந்திரியும்
அப்படியேநல்லதென்று நடந்தானேசாம்புவனும்
வெள்ளானைமேலாக விருதுகளைக்கட்டினான்
வெள்ளித்தமுக்கடித்தான் வெண்கலக்கொம்பெடுத்தான்
ஆனைமேறிமாலைசூட்டி அடித்தான்பறையோசை
என்னசொல்லித்தானடித்தான் ராசாக்கள்தான்கேட்க
சேறும்புராசாக்கள் செய்தகுலத்திலே

பவளக்கொடிமேலே பிறந்திருந்தபதிவிரதை
பதினாறு வருஷமாய்ப் பட்டமரசாண்டாள்
மணமாலைசூட்டுதற்கு யாதுநினை வாருள்
கொம்பனையைக்கேட்டவர்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் வையகத்தில்கோடியுண்டு
இன்றையநாள்வரைக்கும் மணமாலைசூட்டாமல்
நித்தியகன்னியாகவே இருந்தாளிந்நாள்வரைக்கும்
இப்போ-மணமாலைசூட்டுதற்கு யாதுநினைவாருள்
ஆருக்குக்கிடைக்குமோ அன்னநடைமாது
திங்கட்கிழமையிலே திகழ்புனர்பூசத்திலே
இருபதுநாழிகையில் எழில்மங்கிலியஞ்சூட்டுதற்கு
மனதுள்ளராசாக்கள் வந்திடுங்கள்பந்தலுக்குள்
மண்டலத்துராசாக்கள் மந்திரிகள்தான்கேட்டார்
அனைவோருமறியவென்று அடித்தான்பறையோசை
அடித்தான்பறையோசை அங்ககந்தான்கேட்க
மண்டலத்துராசாக்கள் மந்திரிகள்தான்கேட்டார்
திக்கிலுள்ளராசாக்கள் துரைகளெல்லாங்கேட்டார்கள்
பிள்ளையார்கோயிலண்டை இருந்தவிதாருபோர்விசையன்
அடித்தபறையோசை ஆணழகன்கேட்டுவிட்டான்
சந்தோஷப்பட்டலவோ சரீரங்கள்பூரித்து
என்னவடிவாகப் போவோம்நாம்பந்தலுக்கு
ஆசைநினைக்கலுற்றான் அளவற்றசிந்தையிலே
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
அடியளந்தமாயவனே ஐயாசரணமையா
காக்குங்குலதெய்வமே கரியமால்மைத்துனரை
வெண்ணெயுண்டசெவ்வாயா வெற்றிகொடுக்குந்தூயா
கண்ணுக்குஇமைபோலே காக்கி-றவென்றுசொன்னீர்
இதுவல்லவிதுசமய மேந்திழையைக்காருமையா
பவளக்கொடியாளை மணமாலைசூட்டுதற்கு
மாலைவந்துமார்பில்விழ வரந்தாருமென்றனுக்கு
மூக்காலேமுள்பொறுக்கி முனைமரத்தில்கூண்டுகட்டி
காக்கையின்குஞ்சுபோல் கூடிவளர்த்தாயே
முட்டையின்குஞ்சுகளை முகமறியாப்பாலகரை
பிட்டுவளர்த்தீரோ பிரபலியமாகவென்று
உந்தன்தயவாலேயல்லோ வுயிர்கொண்டுலாவுகிறேன்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
மணமாலைசூட்டுதற்கு வடிவெனக்குத்தாருமென்றார்

ஸ்ரீகிருஷ்ணதேவர் அர்ச்சுனனுக்குக் கிழப்பிராமண ரூபங்கொடுத்தல்.

அந்தச்சமயத்தில் அர்ச்சுனராசதுரை
தொண்ணூறுஞ்சென்ற துவண்டகிழவனானார்



ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியவர் அருச்சுனனுக்கு விருப்பிரசாதனரூபங்கொடுத்தல்

நானூறும்பத்துஞ்சென்ற நரைத்தகிழவனானார்
தும்பைப்பூப்போலே துவண்டகிழவனானார்
நாணற்பூப்போலே நரைத்தகிழவனானார்
பண்ணைப்பூப்போலே பழுத்தகிழவனானார்
குஷ்டரோகிபிராமணனைப்போல் கொற்றவரும்ரூபமானார்
வெள்ளரிப்பழம்போலே வெடித்தது தேகமெல்லாம்
வெடித்தரணத்தில் புழுக்கள்நெளியுந்
சீழுஞ்சிலைத்தண்ணீருஞ் சிந்துதே தேகமெல்லாம்
ஒருகண்ணும்பொட்டை ஒருகாலுநொண்டியானார்
சொட்டைத்தலையொன்று ஒடிந்தகொண்டையுதம்
செல்லெறித்தபுத்தகத்தைச் சேர்வைபிடித்து
பட்டயம்போலாக பரக்கதிருநாமமிட்டார்
அச்சுதானந்தரும் அறியாதபிள்ளையானார்
பிராமணரூபமதுவெடுத்தானேபுண்ணியனும்
பிள்ளையார்கோவிலண்டை இருந்தாரிருவருமாய்

சேரம்புராசாக்கள் கலியாணஞ்செய்வதற்கு
பந்தலலங்கரித்தல்.

அந்தச்சமயத்திலே சேரம்புராசாக்கள்
வாசலலங்கரித்தார மணமாலைசூட்டுதற்கு
முத்தைப்பிளந்தார்கள் மூன்றுங்கால்பந்தலிட்டார்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நட்டார்கள்
வெள்ளியால்கால்நிறுத்தி வெக்கிலைப்பால்பந்தலிட்டார்
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
ஈர்க்குப்பிளந்தார்கள் இருகாதம்பந்தலிட்டார்
மூங்கில்பிளந்தார்கள் முக்காதம்பந்தலிட்டார்
நாணல்பிளந்தார்கள் நாற்காதம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசலலங்கரித்தார்
மாவிலைத்தோரணமும் மருடகல்லத்தோரணமும்
அரசிலைத்தோரணமும் ஆலிலைத்தோரணமும்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்சங்குவிட்டு
பச்சைக்கிளிகளைப் பந்தலிலேதொங்கவிட்டார்
வெட்டிவேர்குரிவேரும் விதவிதமாய்த்தொங்கவிட்டார்
பட்டாலலங்கரித்து பாவனைபலொப்பமிட்டார்
கோத்தமுத்தைதூக்கி கொலுமுகத்தில்பந்தலிட்டார்
மற்றமுத்தைப்பந்தலிலே மாணிக்கமாய்வைத்திழைத்து
வாழைமரங்கமுகுமரம் வாசலெங்குங்கட்டினார்கள்
சோலைபலாமரமும் தெருவெங்குங்கட்டினார்கள்
எங்கெங்குந்தோரணமும் எங்குந்திருவிளக்கும்
சன்னல்கள்தோறுஞ் சரங்கள்மிகக்கட்டினார்

அந்தப்புரமதனிலே அள்ளித்தெளித்தார்கள்
சந்தனமுங்குங்குமமும் சவ்வாதுதான்தெளித்தார்
நிலக்கோலமிட்டார்கள் [illegible] பெண்பூ தெளித்தார்
பந்தலலங்கரித்துப் பட்டுத்தொங்கல்போட்டார்
[illegible] பாய்போட்டார்கள் [illegible] தலைக்காணியிட்டார்
[illegible] [illegible] [illegible]த்து
கற்பகப்பக்கவிலே கட்டி [illegible]
இரும்பு [illegible] யால் இருப்பிட [illegible]
ஆராட்டிமணியை [illegible]
ஆராட்டிமணிசத்தம் அண்டமெல்லாங்கேட்குதாம்

ஐம்பத்தாறுதேசத்து ராசாக்கள்வருதல்.

அடிக்கும்பறையோசை அல்லாருங்கேட்டிருந்து
ஐம்பத்தாறுதேசத்து ராசாக்கள்வாறார்கள்
ஒண்ணியாம்பச்சையில் ஒண்ணு நூறுபேராய்
இரண்டாணியாம்பச்சையில் இரண்டாயிரம்பேர்களாம்
யானையேறுந்துரைகளெல்லாம் யானையேறிவந்தார்கள்
குதிரையேறுந்துரைகள் [illegible] வாறார்கள்
கண்டவிடங்களெல்லாம் கருமலைபோல் யானைகளாம்
பார்த்தவிடங்களெல்லாம் பர்வதம்போல் சேனைகள்
கண்கொள்ளாக்கடுஞ்சேனை மண்கொள்ளாமகாரதங்கள்
ஏகமாய்த்திரண்டு எல்லோரும்வாறார்கள்
பூமியதிருதங்கே பூலோகங்குலுங்கிடவே
வாறார்கள்ராசாக்கள் மகமேருகுலுங்கிடவே
பிள்ளையார்கோவில் ஓரமாய்வாறார்கள்
காளையருச்சுனனார் கண்டானே துரைகள்தன்னை
அச்சுதானந்த ஐயரேநீர்கேளும்
இந்தண்டராசாக்கள் இச்சையுடன்வாறார்கள்
பவளக்கொடியாளை பார்மாலைசூட்டுதற்கு
அனந்தங்கோடிராசாக்கள் ஆசையுடன்வாறார்கள்
மாயன் தயவாலே நான்மாலைசூட்டினால்
அந்தண்டராசாக்கள் [illegible]
எக்கூற்றுப்போவாரோ [illegible] சொல்லாமே
என் [illegible] எல்லோருடன்நடந்தார்
பார்ப்பான்வருகிறதைப் பார்த்து [illegible] சொன்னார்
கிழக்கிழவனைவனே [illegible]
[illegible]
அங்கந்தசைகளெல்லாம் [illegible]
இந்தக்கிழவனைவனே [illegible]
என்றுசிரித்தார்கள் இயலானராசாக்கள்

கோவிந்தாவென்று சொற்பனமுங்கேட்டுவிழுந்தான்
தள்ளாடித்தடியூன்றி தான்வருவார்மெள்ளமெள்ள
கொக்கென்றிரும்புவார் கோழைதானடைக்க
வப்புவாய்கொட்டிவந்த வாய்நீருங்கள்கொழுக
கண்ணிரண்டுங்கிரைவிழ காதிரண்டுங்கேளாது
தூக்கியடிவைப்பாராஞ் சுழன்றுவிழுவாராம்
எடுத்தடிவைப்பாராம் இடறிவிழுவாராம்
அறுப்புகள்தட்டினால் அறுபதிடம்விழுவார்
மூங்கில்வேர்தட்டினால் முப்பதிடம்விழுவார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
இவனைக்காணாதேயல்லோ கலங்குகிறாள்பவளகன்னி
மாலையிடத்தேடி மயங்குகிறாள்மங்கையவள்
இவனைக்காணாதேதேடியல்லோ ஏங்கிதவிக்கிறாள்
சோரம்புராசாக்கள் துரைகளிடபந்தலிலே
வாகனங்கள்விட்டிறங்கி வந்தமர்ந்தாராசாக்கள்
மணக்கோலபந்தலிலே பண்ணவரும்வந்தமர்ந்தார்
ஆரியகிழவனும் அர்ச்சுனனும்வந்தமர்ந்தார்

பவளக்கொடியாளை ஸ்நானஞ்செய்வித்து ஆபரணங்களை அலங்கரித்தல்.

பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளை
ஆயிரந்தாதிமார் ஆசனங்கொண்டோடிவந்து
சலவைக்கல்மண்டபத்தில் மையலாகவோடிவந்து
பூவிரத்னமணிமண்டபத்தில் பொற்கொடியைக்கூட்டிவந்து
தண்டையசைய சதங்கைத்திருகிட
கொண்டையசைய குயில்வந்தகூத்தாட
வட்டமணைமேலே மாதரசையிருக்கவைத்து
நல்லெண்ணெய்கொண்டுவந்து நலங்கிட்டார்பந்தலுக்குள்
சந்தனவெண்ணெய்கொண்டு அந்தவருக்குமிட்டார்கள்
குங்குமவெண்ணெய்கொண்டு கூந்தலுக்குமிட்டார்கள்
மூந்நூறுபிராமணஸ்திரீகள் மூன்றுநலங்கிட்டார்கள்
ஐந்நூறுபிராமணஸ்திரீகள் ஐந்துநலங்கிட்டார்கள்
மங்களம்பாடியே நலங்கிட்டார்கூந்தலுக்கு
சோபனங்கள்பாடியே சலங்கிட்டார்கூந்தலுக்கு
ஆலர்த்திசுற்றியே அபிஷேகமாட்டலுற்றார்
மஞ்சனச்சாலையிலே மஞ்சள்நீராட்டிவைத்தார்
ஒட்டுமஞ்சள்நீராட்டம் ஒரிபவனநீராட்டி
ஸ்நானங்கள்பண்ணியே தாமக்கருங்குழலாள்
நீர்காட்டிவிழ்த்தியே நெருப்பில்தலைசாய்த்து
ஈரத்துகில்களைந்து இழைசேர்க்கப்பூட்டி
நனைந்ததுகில்களைந்து நாரிசுட்டுடுத்தி

பாவாடையுள்ளுடுத்திப் பட்டாடைமேல்சாத்தி
ஆனந்தமாரியற்கு அலங்காரம்பண்ணலுற்றார்
பூவாழைமுளைதன்னைதொட்டே பாதமயிர்கோதி
சீவியசிக்கறுத்து சிமிழ்போலேசிக்கெடுத்துவிட்டு
வாரிமுடித்தார்கள் மாணிக்கக்கொண்டையிட்டார்
ஒவ்வொருமயிர்களுக்கு ஒவ்வொருபொன்விதமாம்
பொன்னிதழும்பூவிதழும் போதமுடித்தகொண்டை
சுத்திமுடித்துவைத்த கொண்டைவந்துதாமரைசய
தட்டிமுடித்துவைத்த கொண்டைவந்துதாமரைசய
கொண்டைக்குத்தண்டையும் கொண்டைதாங்கிமாலையும்
ஆயிரம்பொன்பெற்ற அன்பானசவுரிவைத்து
கொண்டைசடைபில்லை குப்பியலங்கரித்து
ஆண்மயிலும்பெண்மயிலும் அணிந்தாரழகுபெற
பல்லியுமாழ்வாரும் பக்கத்திலணிந்தார்கள்
சந்திரபிறைசூரியபிறை தையலற்குதானணிந்தார்
நெற்றிக்குச்சுற்றிகட்டி நேர்விழிக்குமையெழுதி
கண்ணுக்குமையெழுதி கஸ்தூரிபொட்டுமிட்டார்
முத்தாலேபொட்டுமிட்டு முன்னாலேதொங்கவிட்டார்
அன்னகொப்புவர்ணகொப்பு அருகுவாளிசொருகுவாளி
மாணிக்கவாளி மயிர்கீழேகாலியிட
கல்லிழைத்தகம்மலுங் காதில்தரித்தார்கள்
இருதலைபட்சிகளும் இசைந்ததொருகொப்பழகும்
பத்தம்புகடிகளும் பச்சைக்கல்முருகுகளும்
முத்தணிந்தமூக்குத்தி நத்துமணிந்தார்கள்
ஒற்றைச்சரங்களாம் ஒருபுயமாம்பொற்சரிகை
முத்துச்சரப்பளியாம் மோகனமாலைகளாம்
வட்டச்சரப்பளியாம் மார்நிறைந்ததாழ்வடமாம்
கொத்துச்சரப்பளியாம் கோலமணித்தாழ்வடமாம்
சந்திரகாந்திசரப்பளியுந் தரித்தார்களப்போது
நாய்க்காரைதன்னையும் நங்கழுத்தில்தான்தரித்து
தோள்வாங்கிகைவாங்கி துதித்திட்டகைவளையல்
கடகஞ்சரிபவழங் கைநிறைந்தபொன்வளையல்
பத்துவிரலுக்கும் பதிந்தகணையாழி
உத்திரசஞ்சமது போட்டார்களுத்தமிக்கு
எட்டுவிரலுக்கும் இசைந்தகணையாழி
அரைக்கிசைந்தஒட்டியாணம் அழகுபெறசாத்தினர்
காலாழிகல்லணையாம் பீலாழிபில்லணையாம்
ஆடையாபரணமெல்லாம் அலங்கரித்தாரங்கேமம்
பட்டுபளபளென்ன பாடகக்காலசைய
முத்துமினுமினென்ன முத்தாலிபொன்னசைய

திருநீற்றுக்காப்பு திருச்சாந்துமிட்டுவிட்டார்
அருச்சனைக்கண்ணுக்கு அழகானமையுமிட்டு
மல்லிகைமாலை மார்பிலணிந்துவிட்டார்
[illegible] முடியைவைத்து [illegible]
பவளத்தேர் [illegible] பவளக்கொடியாளும்
அப்பொழுது [illegible] வாயற்றனிலே
ஆனவர்க்கெல்லாம் அடிபணிந்துவிட்டாள்
மாயன்பெருமானை மனதிலேதானினைந்து
ஸ்ரீரங்கநாயகரே துணைவருமென்றனுக்கு
ஆயன்பெருமானை அகமனதில்தானினைத்தாள்
பாங்கிமார்களாலே பார்வதிகிருபையினால்
பவளக்கொடிமேலே பிறந்தபதிவிரதை
ஆதிசேஷனாலே அழைப்புவந்ததனுக்கு
கலியாணமானதற்கு அழைப்புவந்ததனுக்கு
குலசேகரனுக்கு [illegible] வேல்மாதனைவி
கொண்டுவந்து [illegible] குருள்க்கு
ஆலவாயகோக்கும் அம்மனையீன்றெட்டியும்
திருமலை [illegible] முடி [illegible]
ஆனந்த [illegible] அப்போதனுப்பிவிட்டார்
வசந்தமுடன் [illegible] பிடித்தார்
மாலைகள் [illegible] மெல்லியபதினார்கள்
[illegible] குடைகள்
கந்திக்குடைபிடித்தார் சூரியனைக்காணாமல்
பக்கத்து [illegible] காணாமல்
கவிந்துக்குடைபிடித்தார் [illegible] காணாமல்
முன்னதாக [illegible] முடிபோட்டெடுத்துவிட்டார்
[illegible] விட்டார்
மேளமுழக்குதற்காண முத்துமண்டலமசைய
அஷ்டதிக்குப்பரிவாரம் அந்தணர்கள்தக்களிக்க
பேரிகைகள் [illegible] முழங்க
[illegible] முதிய
நாற்காதவழிதூரம் [illegible] முழங்க
[illegible] முழங்க
[illegible]
அவன்திருக்கோசக்க [illegible] பார்த்தவப்பார்
[illegible]
[illegible] போலே
[illegible] போல்
[illegible] போல்
[illegible] போல்

பொன்னையுருக்கி பூமியிலேவிட்டாற்போல்
சந்திரனைப்போலே திரும்புகிறாள் தையனல்லாள்
சூரியனைப்போலே துலங்குகிறாள் கோதையரும்
யாருக்கிருக்குமோ அண்ணமாரே நானறியோம்
எவருக்கிருக்குமோ இந்தநல்லபாக்கியங்கள்
தாங்களெல்லாம் சொல்லியே தலையெடுத்துப்பார்த்திருந்தார்
ஆனந்தவாழ்மாரி அவருடைய தேர்வருது
அரசர்சபைநடுவே ஆனைக்குதேர்வருது
அரசர்சபைநடுவே ஆனைக்குதேர்நிறுத்தி
என்று மென்னுகிறாள் ஏலப்பசுங்கொடியாள்
ஆறுலழகுமன்னு அர்ச்சுனராசாவே
வடிவோடுவாருமென்று மன்னவனைச்சொல்லுகிறாள்
என்னவடிவாகயிருக்கிறாயோ நானறியேன்
இவனைப்போலபெண்கள்தா னெங்குங்கிடையாதே
நாட்டிலமையாதே நாயகியாள்தன்போலே
என்றுமனதில் இசைந்துவழிபோனீரோ
தருமாபுரிக்கல்லோ தானடந்துபோனாரே
எனைசெய்வனீஸ்வரரே நானேதுமறியேனே
கிழக்குமுகம்நோக்கி பார்த்தாளேராசகன்னி
பக்கத்தில்தோழியவள் பாங்கியவளோதுசொல்வாள்
முத்துமுடிதரித்த முடிமன்னராசாக்கள்
எனறு-தாதியவள்சொல்ல தையனல்லாள்தான்கேட்டு
தெற்குமுகமாகத் திரும்பினாள்மெல்லியவள்
பக்கமிருந்தவள பாங்கியவளோதுசொல்வாள்
வச்சிரமுடிதரித்த மந்திரிகள்ராசரம்மா
மண்டலத்தையாளுகின்ற மகாராசராசரம்மா
மாலைசூட்டியே மன்னர்மேல்போடுமென்றாள்
மேற்குமுகமாகத் திரும்பினாள்மெல்லியவள்
பக்கத்திலிருக்கின்ற பாங்கியவளோதுசொல்வாள்
பவுந்தத்துராசாக்கள் பல்லக்குதுரைகளம்மா
இக்காசையாளுகிற துரைகளிவர்களம்மா
மாலைசூட்டியே மன்னர்மேல்போடுமென்றாள்
வடக்குமுகமாகத் திரும்பினாள்மாதுகன்னி
பக்கத்திலிருந்தொரு பாங்கியர்களோதுசொல்வார்
இக்காசையாண்டொரு துரைகளிவர்களம்மா
வடதேசராசாக்கள் மன்னரிவர்களம்மா
உன்னழகுக்கேற்ற புருஷனிருப்பானடி
உன்மனதுக்கிசைந்த மணவாளன்தானிருப்பான்
மாலைசூடுமென்றாள் மாதரிளங்கொடியை

பவளக்கொடியாள் அருச்சுனனை மாலைதரிக்கல்.

பவளக்கொடியாளும்
பங்கயந்தி[illegible]ன்னாள் பவளக்கொடி

அப்போ-யாரைநினைத்தாளே அவரவற்றசிந்தையிலே
எவரைநினைத்தாளோ என்னமற்றசிந்தையிலே
ஆரியவாணியம்மா அம்மன்பிடாரிகளை
மஞ்சளழகோரே மடிசேலைக்காரிகளை
பொன்கயிறுமே பொற்கொடியாண்டவரே
இல்லாத்துத்தேவதைகள் எல்லோருந்துணையிருங்கள்
ஆலவாய்சொக்கரே அங்கயற்கண்மீனாட்சி
மதுரைமீனாட்சியம்மன் வந்துதுணையிருங்கள்
என்னைப்பிறப்பித்த எல்லோருந்துணையிருங்கள்
மாயன்பெருமாளே மங்கைநல்லலட்சுமியே
ஆயன்பெருமாளே யனைவருந்துணையிருங்கள்
முப்பத்துமுக்கோடி முனிவரெல்லாங் காத்திருங்கள்
வசிஷ்டருங்குந்தியம்மாள் மணிமாலைகாத்திருங்கள்
நான்-ஆராயம்விட்டமாலை அருச்சுனனார்தன்கழுத்தில்
நான்-சுழட்டிவிட்டமாலையது தேர்விசயன் தன்கழுத்தில்
அருச்சுனனார்தன்கழுத்தி லழகுமாலைவிழவேணும்
என்னவடிவாக யிருக்கிறாரோநானறியேன்
தேவரைக்காணினைந்து சுழட்டினாள்மாலைதன்னை
சுழட்டிவிட்டமாலையது தெய்வலோகம்போகுது
சூரியமண்டலத்தை சுற்றியுலாவுகுது
எதிர்பட்டதேவர்களை யாவரையும்பார்த்துவரும்
நாலுபக்கத்து ராசாக்களைசுற்றிவரும்
தேடிப்பார்க்குதே தேர்விசயனருச்சுனரை
சூரியனைப்போலாக இருந்ததோரருச்சுனர்மேல்
வாழ்விசயன்தோள்மேலே வந்துவிழுந்தது
பிராமணர்தன்கழுத்தில் விழுந்ததுமாலை
தேவதுந்துமிமுழங்க தேவர்பூமாரிபெய்ய
ஆகாயம்பேரிகைதா னடிபட்டுநிமிர்ந்தெழுந்து
புஷ்பவிருஷ்டிதான் பொழிந்தார்கள்தேவரெல்லாம்
ஆராட்டுமணிகளு மடித்ததுஓசையுடன்
சேரன்புராசாக்கள் துணைகளவர்பார்த்துவிட்டார்
சேரம்புராசாக்க ளிவைகண்டுதானிருக்க
மண்டலத்துராசாக்கள் மந்திரிகள்வந்திருக்க
மற்றொருவர்தோள்மேலே விழாமலிந்தமாலை
பார்ப்பான்கழுத்திலே விழுந்ததென்னபாவமிது
ஆரியனைமாலையிட யிருந்தாளோவாரணங்கு
வேதியற்குமாலையிட விருந்ததோபெண்மகளே
செல்வமாய்ப்பெண்பிறந்து சீரழியலாச்சோ
அருமையாய்ப்பெண்பிறந்து அம்பலமானதே
இச்சைபிறந்ததனாலும் பிராமணர்க்குப்பெண்ணோதி

கல்லெடுப்பரிசுக்கு காத்திருக்கனாரக்கோ
பாத்தாளியரிசிக்கு பார்த்திருக்கனாரக்கோ
இந்தக்கிழவனுக்கு இருக்கானால் பெண்வளர்த்தேன்
குருட்டுக்கிழவனுக்கோ கொடிதான் தப்புபண்ணேன்
மொண்டிக்கிழவனுக்கோ வேணதான் தப்புபண்ணேன்
சண்டிக்கிழவனுக்கோ தா மாலைசூட்டிவிட்டாள்
இந்தக்கிழவனுக்கு எவர்தான் வழிவிட்டார்கள்
பாவிக்கிழவனென் பந்தனுக்குள் சொல்லுங்கான்
அர்காண்பிராமணரே அழுதுமாலைதாருமென்றார்
பெண்ணரசிபோட்ட பூமாலைதாருமென்றார்
அப்போதவாள்விசய னரியனாரே மொழிசொல்வான்
பங்கயஞ்சிகண்ணாள் பவளக்கொடியாட்கு
மாலைதரிக்கிறார் மன்னவர்க்கென்றுசொல்லி
பிச்சைக்குவந்திடத்தில் பூமாலைபோட்டுவிட்டாள்
வேணுமென்றுவந்தே தேனுமொல்லிமாலையிட
இவளைநான்பெண்ணைவைத்து என்னசெய்யப்போறேனப்பா
தள்ளாக்கிழவனுக்குக் கொடுப்பதுமென்கானும்
எனக்கிட்டமாலைதன்னை எடுத்துத்தரித்துக்கொள்ளும்
மாலைதரித்துக்கொள்ளும் மங்கிலியஞ்சூட்டிவிடும்
உங்களுக்குப்பெண்டிருக்க வலத்திலானபடி
வளர்த்துவைத்தீர்கள் மாலைதரித்திடுங்கள்
இந்தமாலையென்று ஐயங்கார்பிராமணரும்
அந்தச்சமயத்திலாரணங்குதான்கேட்டு
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியோடிவந்து
என்னையுப்பெற்றெடுக்க இயலானவண்ணமே
மாளாக்கிழவனுடன் வார்த்தைகேளுங்களுக்கு
ஆதிசிவன்றன்னெழுத்தை அழியாதிவார்கள்
என்தலைவிதிப்பயனை எவரும்விட்டார்கள்
வாருமபிராமணரேவென்று வலதுகையைத்தான்பிடித்து
இவருக்குப்பெண்டாக விருப்பேனென்தகப்பா
ஒருவனுக்குமாலையிட்டால் குலகத்தாருனாபடி
தலைபெழுதினது தவறுமோ சாருக்கானும்
எட்டிலெழுதினதை எடுத்தழைக்கப்போறதில்லை
தலையிலெழுதினதைத் தள்ளிவைக்கப்போறதில்லை
அன்றெழுதுமாதிசிவன் அழித்தெழுதப்போறதில்லை
என்விதியைத்தலைக்குனைக்கு வெல்லவகையறியேன்
கதியைத்தலைக்கவல்லேன் காவேரிநீந்தவல்லேன்
பாவித்தலையிலிந்த பிராமணரையெழுதிவைத்தார்
எல்லாத்தலையிலும் ஓரெழுத்தாயெழுத்து
மாணிக்கவாசலிலே மறையவனைக்கொண்டுசென்றார்

அந்தச்சமயத்தி லாயன்பெருமாளும்
செக்கும்பிபோல ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
செவ்வியன்றுசாண்பறந்த தேன்மொழியாள் தன்செவியில்
வந்தழைத்தார் மயிலனையாள் தன்செவியில்
அஞ்சாதே பயந்தாதே வருந்தாதே நங்கை நொந்தாதே
ஆணைமுதல்வன்னார் அர்ச்சுனராசன் நான்
என்றுரைத்தார் மின்கொடியாள் தன்செவியில்
அருஞ்செவியில் சாற்றுரைத்து ஆயனும்போய்விட்டார்
பங்கயஞ்சீர்க் கண்ணாள் பவளக்கொடியாளும்
வேடத்தைமாற்றி விசையர்வடிவெடென்றாள்

அருச்சுனன் கிழப்பிராமணவடிவைவிட்டுத்
தன்சுயரூபமெடுத்தல்.

சேராம்புராசாக்கள் சிந்தைகுளிர்ந்துவிட
கண்டபேர்பயந்துவிட கல்லைகதுமாற
சிந்தைகுளிர்ந்துவிட தேர்விசயன்வடிவெடுத்தார்
அங்கங்குளிர்ந்துவிட அருச்சுனன்வடிவெடுத்தார்
முன்னழகும்பின்னழகும் முதுகில்மட்டசரேகைகளும்
பல்லிலேபொரசுழிணை நாசிலேநட்சத்திரம்
நாசிலேநட்சத்திரம் நயனவிழிபார்வைகளும்
மாயன்தயவாலே வாள்விசயன்ரூபமானார்
ஆயன்தயவாலே அருச்சுனன்ரூபமானார்
கண்டவர்தான்மயங்க காண்டீபன்வடிவெடுத்தார்
பார்த்தவர்கள்தான்மயங்க பார்த்திபன்வடிவெடுத்தார்
ஐந்துபிராய மறியாப்பிராயமென்று
அச்சுதானந்த ரையரும்வந்துவிட்டார்
பவளக்கொடிவந்து பார்த்துமகிழ்ந்துவிட்டாள்
சேராம்புராசாக்கள் தேர்விசயன்றன்னைக்கண்டு
கண்டுமகிழ்ந்தார்கள் காண்டீபனர்ச்சுனரை
பார்த்துமகிழ்ந்தார்கள் பார்த்திபனருச்சுனரை
விசயனழகுகண்டு மெத்தமகிழ்ந்தார்கள்
எங்கள்மகளார்க்கேயேத்த மணவாளன்வந்தீரோ
அருச்சுனனைப்போலாக வாறுமலாணழகா
பிறமணவடிவாக ஏனெடுத்தீர்புண்ணியரே
வந்துதன்னைப்பெண்கேட்டால் கொடுக்கோமென்று சொல்லுவமோ
ஈக்கிழவனைப்போல் யேன்சாண்வடிவெடுத்தீர்
என்றுமனமகிழ்ந்தா ரிராசராசாக்கள்
அந்தச்சமயத்தி லனந்தமான துரைகளெல்லாம்
பங்கயஞ்சீர்க்கண்ணாள் பவளக்கொடியாளும்
ஆரியனைமாலையிட அழைத்துப்போகக்கண்டவர்கள்
இருசிநின்றதுபோ லேக்கரித்தராசாக்கள்

விருத்தக்கிழவனுக்கு வேதியர்க்குமாப்பிள்ளைக்கு
அங்கிருந்தென்னபல வென்றிறவனியராசர்கள்
அவரவர்மாளிகைக்கு அனைவரும்போகலுற்றார்
சேரம்புராசாக்கள் துரைகளவரோடுசொல்வார்
வில்விசயனருச்சனனை வேந்தர்வரவழைத்து
நல்லவேளை தப்பாமல் நாகுமாசம் மாறாமல்
அர்ச்சிதங்கள் யாசகங்கள் வாருதவேயன்றி
சேஷையைப்போட்டுச் சீருடைபாக்கவிட்டு
சென்னலரிசிகொண்டு செங்கதிரோன்பொங்கவிட்டு
மாப்பிள்ளையும்பெண்ணையும் மணைமேலேதந்தவைத்து
முந்நூறுபிராமணர்கள் மகத்துதலைத்தெளிக்க
சாலுங்கரகமும் சந்திரர்த்தமும்பாக
அம்பிகலமாக அரசாணிமுன்பாக
வேதப்பிராமணர்கள் வேதங்களோதிவர
ஓமப்புகையெறிய வுடுக்கைவேதஞ்சொல்ல
காப்பரிசிதான்வழங்கி கன்களையுங்கட்டினார்கள்
சேரம்புராசாக்கள் துரைகளொழுந்திருந்து
மாவுங்கமுநாலும் மஞ்சணுடைவிளைதையும்
காவியுங்கூறையுந் தான்கொண்டுவந்தார்கள்
குருகுலத்தரசாவே குந்திமகனே
மந்தாரக்கந்தியரும் பெற்றமகனே
பங்கயஞ்சீர்கண்ணன் பவளக்கொடியாளை
தந்தேனுனக்கிந்தேன் தாரைநீர்ப்பிடியுமென்றார்
காலுக்குமிஞ்சியிட்டார் கைக்குமணைபாரியிட்டார்
கைபவளைத்தான்கொடுத்து தாரைநீர்வார்த்தார்கள்
எந்திழையைத்தான்கொடுத்து இஷ்டநீர்வார்த்தவரும்
மாலைதரித்து மணமாலைசூட்டுமென்றார்
அப்போதருச்சுனனும் மாயனைத்தானினைந்து
தாலியைக்கட்டினான் தேர்விசயனருச்சனனும்
பிர்மமுடி மூன்றுமுடி போட்டானே வாள்விசயன்
காப்பரிசிதான்வழங்கி கங்கணமுந்தானவிழ்த்தார்
அம்மிமிதித்து அரசாணிசுற்றிவந்து
பெரியோர்களெல்லோரும் பெருக்கமனமகிழ்ந்து
மன்னவனுக்கேத்தியுமாய் மாளிகையிலேபுகுந்தார்
தங்கத்தின்மேடையின்மேல் தனஞ்சயனும்வீற்றிருந்தார்
ஐப்பசியோருமவர்களுடனேதேவியரும்
பொங்குமனங்குளிர்ந்து பொற்கொடிமாதரெல்லாம்
தனஞ்சயற்கும்வேதியர்க்கும் சமமாகசேசையிட்டு
பாலும்பழமும் பரிவுடனேதான்கொடுத்தார்

பாலமிர்தமுண்டு பசியாறித்தானிருந்தார்
அப்பால்வந்தமனிதருக்கும் மகாபெரியோர்களுக்கும்
அத்தரும்பன்னீரும் அழகாகத்தான்தெளித்து
சந்தனமுங்கெந்தபொடி தாம்பூலந்தனைவழங்கி
பாரிசாதபுட்பம் பரிமளங்கள்தன்னுடனே
பூரிவெகுதானங் கொடுத்தார்பெரியோர்க்கு
தட்சணைத்தாம்பூலம் தார்வேந்தர்தான்கொடுத்தார்
வந்தமனிதர் மகாசேனையெல்லவர்க்கும்
கைக்குச்சலங்கொடுத்தார் கட்டழகரெல்லவர்க்கும்
பந்தியமர்த்தி பரிமாறிபோசனங்கள்
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்பருப்புகளும்
பத்துவகைபச்சடியும் பசியாறிபாலர்களும்
புத்துருக்குநெய்யுமாய்ப் போதமிகப்படைத்து
முப்பழஞ்சர்க்கரையும் அப்பளமுந்தான்படைத்து
ஆயாசந்திரவே பாயாசந்தான்கொடுத்து
போசனங்களுண்டு புகழ்வேந்தர்யாவருந்தான்
கைகாலலம்பி கனபிருந்தமானவரெல்லாம்
வேடிக்கையாக வீற்றிருந்தார்பந்தலிலே
அப்போ-வெட்டியபாக்கும் பிறமணக்குவெற்றிலையும்
சொர்னபுஷ்பமாலைகளும் சேப்புசகலாத்துகளும்
வைத்துக்கொடுத்தார்கள் வரிசைவெகுமானம்
ஒட்டைகுதிரைகள் உத்தமர்கள்மெய்யெழுதி
உத்தமரெல்லோரும் உள்ளங்களிகூர்ந்து
காண்டீபனருச்சுனனும் கன்னியவள் பைங்கிளியும்
ஊர்கோலமானபின்பு வுத்தமனுந்தேவியும்
பள்ளியறைமண்டபத்தில் பாங்குடனேபோகமுற்றார்
வந்திருந்தராசாக்கள் மன்னவர்களெல்லோரும்
அவரவர்கள்ராச்சியத்தை ஆளுதற்குப்போனார்கள்
வாளவிசையன்கோமானும் மருவுண்டுதானிருந்தான்
பதினாறுநாளாச்சு பார்த்தன்வந்துமாலையிட்டு
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
அல்லிப்பெருமாளும் ஆணைக்கேதுசெய்தாள்
மருடத்துறைச்சியரும் வாழ்வரசியல்லியரும்
கொச்சித்துறைச்சி கொடிமதுரையல்லியரும்
மச்சிதுறைச்சி வடமதுரையல்லியரும்
காலையில்தானெழுந்து கனிவாயைச்சுத்திபண்ணி
பாலைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
பொய்கையில்போயிறங்கி பொற்றேனியுமப்போது
ஈரத்துகில்களைந்து இடைசேர்க்கப்பட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி

சொக்கருமென்று திருநீற்றுக்காப்புமிட்டு
மதுரைமீனாட்சியை மாதாவைத்தானினைந்து
அரன்பூசைபரிபூசை அருந்தவப்பெண்ணானவள்
இட்டமுடனேதானும் அலங்காரம்பண்ணலுற்றாள்
சல்லடந்தான்தொடுத்து தட்டிப்பிறகெடுத்து
தட்டியின்மேலொட்டியாணம் சாதாவிரிந்துகட்டி
சல்லடத்தின்மேலேயவள் தாமரைப்பூச்சுங்குவிட்டாள்
சங்குவைத்தாள்வெள்ளைவைத்தாள் சாதிலிங்கப்பொட்டுமிட்டாள்
வலப்புறத்துச்சங்கிலே மாணிக்கப்பட்டாரமும்
தென்புறத்துச்சங்கிலே தெய்வமணிப்பட்டாரமும்
முத்தாகப்பாயணிந்து முத்துமெல்லாமங்கிப்போட்டாள்
வச்சிரகப்பாயணிந்தாள் மார்நிறையஅங்கிபோட்டாள்
கிரீடபுஜகீர்த்தி கீர்த்தியுடன்தானணிந்தாள்
அங்கிகப்பாயணிந்தாள் அல்லிமலர்நயமும்
கேடயவல்லயமும் கிளிமொழியாள்தானெடுத்தாள்
மந்திரவாளெடுத்து வலதுகையில்தான்பிடித்தாள்
பதினெட்டுஆயுதமும் பத்தினியாள்தான்தரித்தாள்
முத்துப்பதியடியை தொட்டுநடந்துவந்து
வசந்தமணிமண்டபத்தில் மாதவளும்வந்தமர்ந்தாள்
கொலுக்கூடமண்டபத்தில் கொம்பனையுமேகமர்ந்தாள்
மந்திரிபவளச்சீனை மயிலனையுமேவந்தமர்ந்தாள்
தாதிகளுந்தோழிகளுந் தையலரைச்சூழ்ந்தார்கள்
செங்கமலத்தாதி சேனாபதிபவளசென்ன
வெண்சாமரைக்கவரி வீசியவள்பக்கம்நின்றாள்
ஆலவட்டஞ்சாமரை அருங்கிளிமார்வீசிவர
மல்லிகைச்சிறிகளும் மயில்விசிறிதான்வீச
செண்டாடிபந்தாடி தேன்மொழிமார்சூழ்ந்துவர
கேளிக்கைபார்த்து இருக்கிறாள்கொம்பனையாள்
சங்கீதம்பார்த்து இருக்கிறாள்தையலவள்
முத்துவிற்றவர்த்தகரும் வெள்ளைக்கணக்கர்களும்
கணக்குகட்டையெடுத்து கைக்கணக்கர்கள்
கொம்பனையாள்முன்னேவைத்து கும்பிட்டுதெண்டனிட்டார்
கைகட்டிநின்றார்கள் கட்டழகியெல்லாரும்
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசியவளுஞ்சொல்வாள்
முத்துகொடுத்ததும் விற்றகணக்குகளும்
அன்றாடங்கணக்குகளென் அம்பலத்தில்வாராமல்
எட்டுநாள்கணக்குகளும் எழுதிமுடியுமென்றாள்
எட்டுநாள்வாராமல் இருந்தவகையென்ன
ஒருமுத்துத்துறைதன்னிலே உயிர்க்கழுகில்கோட்டிவென்
இருமுத்துத்துறைதன்னிலே சாலிகைபோட்டிவென்

வாயாற்பொறிபறக்க வலதுகாலூன்றவீச
செந்தழல்நாகம்போல் சீறியெறிபாய்ந்தான்
கண்ணாற்பொறிபறக்க மாதங்கனைவீச
வாயாற்பொறிபறக்க வலதுகாலூன்றவீச
ஈச்சம்பழம்போல் விருதாகவுறந்தானவிடைக்க
சோலைப்பமம்போலே வெள்ளிக்கொம்வீசதுபார்
கண்டச்சகலதகலைக் கடிக்கும்முந்தானியரும்
கணக்குக்கதிகாரி கைகால்நடுங்கிவிட்டார்
எட்டுகாள்கணக்குகளும் எழுதிமுடிக்காறார்
கணக்குமேல்கணறு பிருக்கிறாள்கணியரும்
ஆறாறுக்குடியே ஆற்றவொண்ணுக்காமப்பா
அந்தச்சமயத்தில் அர்ச்சுனபுத்திரனும்
ஸ்திரிலாசமது விளையாடிமேல்வந்தன்
தங்கத்தைதாட்டிய தனஞ்செயன்புத்திரனும்
செம்பொன்னைதாட்டிய சித்திரவீதியெல்லாம்
முத்தைதாட்டிய முடிமன்னர்வீதியெல்லாம்
மாணிக்கத்தைதாட்டி மதுரைத்திருவீதியெல்லாம்
தண்டைபனைசயவே சதங்கைதநதன்னன
ஆரவடமுவின்கொண்டு அசைந்துநிழல்காட்ட
கண்ணாமூச்சாடிட கண்டசங்கலிபின்ன
வட்டமிட்டகேற்றியிலே வயிரகட்டிநின்றிலங்க
சருவாபரணங்களும் தாழ்வடமுந்தானசைய
சிவகாமிதியடியும் சிங்காரவிரல்களும்
பக்கமிருபுறமும் பட்டாகமுட்டியவர
தந்தைடப்பன்னவெல்லாம் கைகட்டியேந்திவர
சட்டிபிடிமன்னரெல்லாம இருபுறமுஞ்சூழ்ந்துவர
பொருபரிசுமேலேறப் பிள்ளைவருகுதுபார்
வெகுசனங்கள்கூடி நெருங்கிடங்கொள்ளாமல்
அப்போதுநெருங்கிவந்த அருமைகளைக்கண்டுவிட்டாள்
அப்பாவருக ஆணழகாபுத்திரனே
வருகவருகவென வாழ்த்திவருகவென்றாள்
திருவரும்பூவே தேனேவருகவென்றாள்
கண்ணின்மணியே கருவிளமணிவருக
கண்முன்றுடைய கைலாசநாதரே
சொக்கர்திருவாசலுக்கு அடைமணிவிளக்கே
வைகைக்கரைக்கு மண்மதக்கொக்கரே
எப்பவும்சொக்குத்துறைதுணையுமருளவனே
அப்பாவருகவென்று அலுங்காமல்முத்தமிட்டாள்
மார்பிலேசேர்த்தணைத்து முகத்தில்முத்தமிட்டாள்
மைந்தனையேந்தி மடியில்வைத்திருந்தாள்

போரஞ்சாமன்னன் புலந்திரனுங் கூறலான்
போதும்போதுமென்னுச்சி பிள்ளையைத்தேடினது
மைந்தனைக்கொண்டுவா போதுமம்மா மாதாவே
[illegible]த்தேர்த்தாரோ தனஞ்செயனுடைய பட்டணம்
[illegible]ப்பொன்னேர்த்தங்காரோ திகழ்வெள்ளிக்கோபுரமாம்
மாணிக்கத்தேர்தங்கார் வளநாட்டுராசாக்கள்
முத்துத்தேர்தங்கார்கள் முடிபுனைந்தராசாக்கள்
சித்திரவீதி தெருக்கள்பதினாயிரமும்
மதுரைப்பெருந்தெருவும் மட்டில்லாவீதிகளும்
பவளத்தேரோட்டமென்று பத்தினியே நானுங்கேட்டேன்
அவ்வார்த்தைக்கேட்டாளே அல்லிப்பெருமாளும்
அருச்சுனன்போனதொரு தேசமதைப்பார்க்கலுற்றாள்
பதினாறுநாளாச்சு பார்த்திபன்போனதுவாம்
மூன்றுநாளாறு பொழுதிலேவாருமென்று
மைந்தன்மேலாணையிட்டு மாபாவிபோனானே
ஆணைமறந்தவனும் ஆர்மேலேஆசைகொண்டான்
எங்கேயுல்லாசமாக யிருக்கிறாரோ [illegible]
அவன் - எமலோகம்போனாலும் இடவெந்துசங்கரிப்பேன்
பாதாளம்போனாலும் பார்த்திபனைக்கொன்றிடுவேன்
ஆகாயம்போனாலும் அதம்பண்ணிப்போட்டிடுவேன்
என்று - சீறியேகண்சிவந்து சிங்கத்தின்குட்டியைப்போல்
கையைக்கடித்து கன்னியருந்தானுமிழ்ந்தாள்
உதிரமுஞ்சதையுமாய் உமிழ்ந்தாளே பூமியிலே
காட்டானைபோலாகத் தேன்மொழியாளல்லியரும்
சிங்கத்தைப்போலாக தேன்மொழியாளல்லியரும்
உருட்டினாளிருகண்ணை ஒதுங்குகிறார்ராசாக்கள்
ஆங்கரித்துபற்கடித்து அதட்டியெழுந்தாளே
ஆறுலுங்கூடியே ஆற்றவொண்ணாக்கோபமுடன்
பாண்டிவளநாடாளும் பஸ்பமாய்ப்பறக்குது
பகல்வத்திபோலாக எறியுதேயிருகண்ணும்
மைந்தனையிடுக்கி வளநாட்டாள்வாருளே
அறுபதுபேரெழுந்து அங்கேநேரோடிவந்து
அம்மா - எந்தநாடென்று அறிவாயிளங்கொடியும்
எங்கேயிருந்தாலு மிட்டுவாரோமர்ச்சுனனை
இங்கேயிருமம்மா இராசகுலநாயகமே
என்றதுகேட்டுமவளேதுசொல்வாளல்லியரும்
எனக்கெதிர்சொல்லாதே பெண்ணுனை ஐயாவே
அரண்மனை திறவுகோல் அன்னவிடைகொடுத்தாள்

அல்லியரசாணி அருச்சுனன்மேல் படையெடுத்தது.

[illegible]டாமந்திரியே அறிவுள்ளகாருபாதி
[illegible] சேனைபரிவாரம் அடங்கலும்ப[illegible]

காலாளுஞ்சேனைகளுங் கடுகவேபயணமென்றுள்
தேர்கொண்டுவாருமென்றுள் துரிதமாய்ப்போகவென்று
சொன்னபொழுதிலே துரிதமாய்வந்தார்கள்
சித்திரத்தேர்தன்னைச் சோடித்தாரழகுபெற
ஆறுவண்டிநாறுசட்ட மழகானகுத்துக்கால்
குத்துக்கால்சொப்பனிட்டு கொடுங்கைநிரைவளைத்து
கும்பக்கலசமுங் குடைகளலங்கரித்து
அம்புருச்சிலையது அலங்காரம்பண்ணினார்கள்
பாராசாரிபுரவியொன்று பஞ்சகலியாணியொன்று
தேசியெனும்புரவியொன்று தீவரத்தின்குதிரையொன்று
நாலுபுரவிகளை நலமாயலங்கரித்து
குதிரைகளைகொண்டுவந்து கொப்பெனவேகட்டினார்கள்
அலங்கரித்தேதாம்தேரையென்று அடிபணிந்துநின்றார்கள்
பயணம்பயணமென்று பயணபேரிதானடித்தார்
இப்போதுபயணமென்று யியல்பாகதானடந்தார்
கானலுக்குத்தானெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
வெய்யலுக்குத்தானெடுத்தார் வெள்ளைநல்லகூடாரம்
பனிகளுக்குத்தானெடுத்தார் பச்சைநல்லகூடாரம்
யானையின்மேல்டாவுங் குதிரையின்மேல்டங்காவும்
கறுப்புநிசான்செகப்புநிசான் கலந்துபிடித்தார்கள்
யானைகளாறுகோடி அசுவங்களேழுகோடி
தேர்களொருகோடி தோணிகள்மூக்கோடி
அமரதருஞ்சமரதரும் ஆஸ்தானமகாதரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியமராட்டியரும்
சழத்துவங்கனரு மினாட்டுசோனகரும்
ஒளிவானபாகுசரும் ஒட்டியருஞ்சோனகரும்
சட்டைகழட்டாத சாமார்த்தியரானவரும்
குப்பாயம்வாங்காத குலமன்னரானவரும்
மட்டில்லாசேனைகளும் மன்னர்பயணமானார்
பட்டயமுஞ்சூரிகளும் பாங்கானகவரிகளும்
நிமிசாம்பரியலகு நேரிசமாம்பெரியகத்தி
கூலிசமுஞ்சூலிசமுங் குண்டுதுப்பாக்கிகளும்
சக்கரமும்வேலுந் தடியும்பெருவுலக்கை
உண்டைவில்லுஞ்சுண்டைவில்லுஞ் சிங்காணிபூச்சிவில்லும்
எண்ணுன்குஆயுதமு மெடுத்தரையிற்கட்டினார்கள்
பாளயங்களுள்ளதெல்லாம் பயணங்களாச்சுதம்மா
ஆனையின்மேல்பேரிகை அடிபடுதகுமுகுமென்று
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைசிலம்புகுது
அண்டங்கிடுகிடென்ன ஆகாசம்நெக்குவிட
பூமிடுகிடென்ன பூலோகம்நெக்குவிட

அடங்காதகோபமுடை அல்லிமகாராசியாள்
அலங்கரித்ததேர்மேலே ஆனந்தமேறினாள்
இலக்கியமில்லையுடனேறினாள் தேர்மேலே
மந்திரியமாசேனை மங்கையவள்தானேறி
சேதனைதிருப்பினாள் தளிகாயாட்சனமே
சுற்றிக்குடைபிடித்தார் சூரியனைத்தான்மறைக்க
பக்கங்குடைபிடித்தார் பகலவனைத்தான்மறைக்க
கவிந்தகுடைபிடித்தார் கதிரோனைத்தான்மறைக்க
அடிபடுதுபேரிகை அங்கங்காணதிர
எட்டுதிசைநடுங்க இளங்கொடியாள்தான்வாறாள்
இரதகசதுரகமுடன் நாலுவகைச்சேனைகளும்
மாவணியும்மாவணியும் மற்றுமுள்ளராசபலன்
வருகுதுவெகுசனங்கள் மண்ணுலகின்றாங்கொள்ளாமல்
செந்தூளெழும்புகுது சூரியனைக்கப்புதங்கே
கருந்தூளெழும்புகுது கதிரோனைக்கப்புதங்கே
அண்டரண்டந்தானதிர அடித்தார்கள்பேரிகையை
பூமிகிடுகிடென்ன பேரிகைதானடிக்க
கடல்நீர்சுவரிடவே காளசின்னந்தானடிக்க
அஷ்டதிக்கெங்கும் அதிரசின்னந்தான்முழங்க
அண்டங்கிடுகிடென்ன அடித்தார்பறைப்பாசை
ஆனையணிநடக்க அரசுமன்னர்தானடக்க
குதிரையணிநடக்க குலசேகர்பின்னடக்க
தெத்துக்கடந்து தெருவீதிதான்கடந்து
அங்காடிவீதிகடந்து ஆயிரந்தெருகடந்து
குச்சிலிபர்வீதி குலமன்னர்தான்கடந்து
பீங்கான்கடைத்தெருவும் பின்விட்டுமுன்னடந்தார்
வைகைக்கரைகடந்து மதுராபுரிகடந்து
பட்டணத்தைவிட்டு பரிவாய்நடந்தார்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அரியவனங்கடந்து
சில்லிலன்றுபூத்த செடிகள்வனங்கடந்து
புல்லிலன்றுபூத்த புலியின்வனங்கடந்து
வேங்கையிருக்கும்வனம் வெள்ளைப்பூத்தவனம்
எட்டடிவேங்கை யிருக்கும்வனங்கடந்து
பத்தடிவேங்கை பருத்தவனங்கடந்து
அறுபதடிவேங்கை யடர்ந்தவனங்கடந்து
சிங்கமுலாவுவனம் சிறுபுலிதாங்குவனம்
ஆளியுலாவுவனம் அன்னபட்சிதாங்குவனம்
செண்டபேரண்டங்கள் இருக்குமவனங்கடந்தார்
பாதிரிமுல்லை பருத்தவனங்கடந்தார்

ஒருநாளைக்கொருநாளை யோர்ந்தமயில்தானிருக்க
ஒருநாளைக்கிரைதேடும் கானவனங்கடந்தார்
மாமலைகளேகேட்கும் மார்க்கோப்புதானடந்தார்
எக்கள் நுழையாத இருண்டவனங்கடந்தார்
அண்டமறியாத காண்டவனங்கடந்தார்
கொக்கறியாத வெளிக்காடுதானடந்தார்
சந்திரர்கள்சூரியர்கள் காணாவனங்கடந்தார்
வெகுதூரம்வருகையிலே வேல்பொருதுங்கண்ணாளும்
பவளம்மின்னுகின்ற பார்க்கானகாடுகண்டாள்
தூரத்திற்கண்டவுடன் செல்வனவனேதுசொல்வான்
எங்கேயாள்போனது இக்காடோஆச்சியென்றான்
ஐயாவென்றுசொல்லவே அடித்தாள்தவடையிலே
அடித்தபொழுதிலே யலறிப்புலம்பிவிட்டான்
பாவியைநினைக்கவல்லோ பாலனையானடித்தேன்
என்று-மைந்தனைக்கொஞ்சியல்லோ மடிமேலேவைத்தாளாம்
அப்போ-மதுரைப்பரிசனங்கள் மகாசேனைதான்கடந்தார்
மதுரைப்படைத்தலைவர் மந்திரிகள்காரியக்கார்
சேனைபரியழகன் சமர்த்தர்கள்சூழ்ந்துவர
ஐந்துலட்சங்குதிரைகளு மெல்லியனைச்சூழ்ந்துவர
ஆனைபவுத்திரளு மாரனைச்சூழ்ந்துவர
சேனைப்பரிசனங்கள் சொல்லமுடியாது
இப்படியாக எச்சரித்துகாடடக்க
அப்போது-காடுவெறிகிறதும் கல்லுப்பிரட்டுறதும்
ஆனைமேல்பாரி அசைக்கிறதும்குலுங்குறதும்
குதிரையின்மேல்கூடாரம் கூடஅசைகிறதும்
குதிரைபிரியாமல் கூடநடக்கலுற்றாள்
அப்போது அல்லியரும் ஆரணங்குமதுரைப்பாள்
ஆனைகளாறுகோடி குதிரைகளேழுகோடி
மதுரைப்படைகளெல்லாம் மன்னுவருகுதடா
மதுரையின்நாட்டில் மகாராசர்கேட்கலுற்றார்
அப்போ-அம்மாவருகிறது ஆனைப்படைகளெல்லாம்
பாண்டியனாநாட்டாளும் பவளக்கொடிபோய்புகுந்தாள்
வெய்யல்விடாய்த்துவந்து விழுந்ததேசேனைகளும்
காதைதபடைக்கிறதும் களைப்பாய்வருகிறது
நாக்கைவாட்டுறதும் கிர்க்காகவிழுக்கிறதும்
வாடிமயங்கினார் மயிலனையாள்சேனையெல்லாம்
அந்தச்சமயத்தில் லாரணங்குதான்கேட்டு
பானையமிறங்குமென்றான் பத்தினியாளல்லியரும்
கூடாரம்போடுமென்று கொப்பெனவேயிறங்குமென்றாள்
பஞ்சவர்ணகூடாரம் பலதிசையும்போட்டார்கள்

விசித்திரமாகவே மரத்தின் பாளையங்கள்
ஆனைக்குட்டேறவும் குதிரைக்குக்கொட்டாரவும்
மக்களுக்குத்தாம்புகளும் மனிதருக்குக்கூடாரம்
பாளையங்கள்தோறும் படிசொரிந்தாலல்லியரும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
கானகத்தினுள்ளிருக்கும் கனவேடர்வந்தார்கள்
பாளையமிறங்கினதைப் பார்த்தார்கள்வேடுவர்கள்
இத்தனைகாலமாய் இதுநெடுநாள்கண்டதில்லை
இப்படிக்குப்பாளையங்கள் இவ்வுலகிற்கண்டதில்லை
இப்பெரியகானகத்தில் இருக்குறோம்வெகுநாளாய்
இவ்வனத்தில்நாமும் பார்த்ததில்லைவெகுகாலம்
இதுவென்னகாலமோ என்றுமனதிலெண்ணி
என்றல்லோவேடுவர்கள் மெச்சரித்துவந்தார்கள்
அப்போதுமந்திரிகள் கண்டார்கள்வேடுவர்கள்
ஆரப்பாநீங்களென்று கேட்டார்களப்போது
இந்தகல்லகானகத்தில் இருக்கின்றவேடுவர்கள்
என்றுமவர்சொல்ல மெச்சரித்துமந்திரிகள்
பிடித்துவந்துவிட்டார்கள் பெண்பொருபாளண்டையிலே
அவர்கள்-கும்பிட்டுநின்றார்கள் கொம்பனையாள்முன்பாக
மகுடத்துரைச்சியவள் வாழ்வரசிகண்டுவிட்டாள்
எந்தவூர்வேடுவரோ எனக்குரியச்சொல்லுமென்றாள்
இந்தவனத்திலே எனம்மாயிங்குவந்தாய்
கதண்டுகொண்டுகொட்டி காவலர்கள் மாண்மடிந்தார்
முகமுரியப்பேழை மொய்க்குங்கதண்டுகள்தான்
இந்தவனத்திலம்மா கதண்டுகுளவிகள்தான்
பவளம்வெட்ட வந்தவர்கள் பாருலகில்மெத்தவுண்டு
கதண்டுகொட்டிமடிந்தவர்கள் கணக்குமிதங்களில்லை
எங்கள்-அச்சிபெருப்பிவாள் அனந்தகோடிசேனைகளை
என்றுசொல்லிவேடுவரும் மொத்தமழைபோல்தொழுசெய்வாள்
இதுயாருடையபாக்கியம் என்றுமேளஅல்லிமுதும்
அதுல்சொன்னச்சி அமைவாகச்சொல்லுகிறோம்
சோழம்பராசாக்கள் துரையானவரைம்பதுபேர்
பிள்ளையில்லையென்று பெருந்தபசுபண்ணினார்கள்
மைந்தனில்லையென்று வருந்தித்தவசுபண்ணார்
குமாரனில்லையென்று கோடிதபசுபண்ணார்
ஆருக்கும்பிள்ளையில்லை யென்றுமேளயீஸ்பரியாள்
அப்போ-பரமசிவன்மனமகிழ்ந்து பவளக்கொடியாளை
பாலகியையுண்டுபண்ணார் பரமசிவனப்போது
பவளக்கொடியாளென்று பேரிட்டாரீஸ்பரனார்

அப்போ-சோமப்பிரகாசன் துரையவனைக்கொல்லவேணும்
பிள்ளைகளிப்போதைப் பெண்ணென்று சொல்லாமல்
அவளை-பெற்றெடுத்தாள் தாயார் சோமப்பிரகாசன்
பெண்ணென்று சொல்லாமல் பிள்ளையென்றுதான்வளர்த்தார்
அவள்-மீறிடங்காமல் மெல்லிருந்தவளாலே
பிள்ளையென்றுசொல்லி பேர்மகுடஞ்சூட்டினார்
அந்தமுடிகொண்டாளவளிராச்சியத்தை
பதினாறுசன்மாவரும் பட்டங்கொண்டாள்
அவளைக்-கொள்ளவருவார்கள் கோடானகோடியுண்டு
அவளை-மாலையிடவந்தவர்கள் மட்டுமிதற்கில்லை
நித்தியகன்னியாகவே இருந்தாளின்றுவரைக்கும்
குருட்டானையருதலைத்தான குந்திமகனருச்சுனன்றான்
சந்தனவடிவழகன் தருமராசன் தம்பியவன்
தோழனும்ராசனுமாய்த் தேசத்தில்வந்தவரும்
பவளக்கொடியாளை பத்தினியைமாலையிட்டு
பதினாறுநாளாச்சு பத்தினியைமாலையிட்டு
அந்த-ஆனைக்குவாழ்மாரியவளமருள்ளராச்சியத்தை
இராசபடிதரித்து நலமுடனேயாளுகிறாள்
அவ்வார்த்தைகேட்டாளே அல்லிப்பெருமாளும்
சீறியெரிபறந்து சிங்கக்குட்டிபோலெழுந்து
கொக்கரித்துதானெழுந்தாள் கொல்லுங்குருவியைப்போல்
ஆடாதுதவனே அழையுங்கள்வேடுவரை
காவலிலேவையுமென்றாள் கட்டழகிவேடுவரை
மூன்றுநாளாறு பொழுதிலேவருவேனென்று
மைந்தன்மேலாசையிட்டு வந்தானே விசயன்
மாலையிட்டுக்கொண்டு வாழ்ந்திருக்கநாளாச்சே
யமலோகம்போனாலும் விட்டுவந்துசங்கரிப்பேன்
ஆகாயம்போனாலும் மறுப்புதான்வருவேன்
பாதாளம்போனாலும் பார்த்துமேகொண்டிடுவேன்
எரிமேய்ந்துகண்சிவந்து எழுந்தாளேபத்தினியாள்
அப்போதுமாயவரு மறிந்தாரேயிவ்வண்ணம்
கோபசங்கரித்து முடிக்குமர்ச்சுனற்கு
அப்பதவதாரம் ஒக்கப்பிறந்தாரே
பத்தவதாரம் பாக்கப்பிறந்தாரே
அப்படிப்பட்டதொரு அருச்சுனராசாவை
சங்கரிக்கவல்லவோ நினைத்தாளேதையனல்லாள்
அண்டர்கள்வரத்தையெல்லாம் பெற்றவளாரணங்கு
சொக்கர்வலிமையுண்டு சுந்தரியாளல்லியற்கு
அறிந்துமிருப்போமே அல்லிநல்லாள்தன்சமர்த்தை
வமாங்குமாமிருந்தா விக்கம்வருமர்ச்சுனற்கு

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியரசாணியுடைய பாளையங்கள்
எல்லாவற்றையுங் கொல்லும்படியாக கதண்டு
குளவிகளை ஏவுவித்தல்.

[illegible]றுளமெழுந்தாரே எம்பெருமாள்மேகவர்ணர்
துவாரகையைவிட்டு ஸ்ரீராமர்வந்துவிட்டார்
மாய்கையாய்வந்துவிட்டார் வனமாய்வனந்தனிலே
கதண்டுகுளவிகளைக் கடுகவரவழைத்தார்
செங்குளவிகருங்குளவி சேரவரவழைத்தார்
அல்லியரும்புத்திரரு மிருவரையுந்தப்பவிட்டு
ஆனைகுதிரைகளை அடங்கவொன்றுசேனைகளை
அத்தண்டபேரையு மல்லவரைக்கொல்லுமென்று
என்றதுசொன்னார் எம்பெருமாள்மேகவர்ணர்

கதண்டுகுளவி சேனைகளைக்கொல்வது.

மாயனுரைகேட்டு வருகுதுவண்டுகள்
பாளையத்தில்போய்புகுந்து பதைக்கவேகொல்லுகுது
கண்டதுண்டமாய்க் கடித்துமேபோடுகுது
கால்பிடுங்குதே எல்லவரைக்கொன்றிடுதே
குடலைப்பிடுங்குதே குப்பையில்தள்ளுதே
அம்மாடியத்தையென்று அலரிவிழுவாரும்
செத்துமடிந்தாரே சிவலோகம்போனாரே
அல்லியரும்புத்திரரு மவ்விருவர்தப்பிவிட்டார்
மற்றபேரெல்லோரும் மாண்டுமடிந்தார்கள்
கண்டாளேயல்லியரும் சனத்தவிசாரமிட்டு
இதுவென்னபாவமிது ஏதுமறியேனே
அநேகமாகவே அனைவோருமாண்டார்கள்
எல்லோரையுந்தானெழுப்ப இளங்கொடியாள்தானினைந்தாள்
ஆலவாய்சொக்க ராண்டவனைமாருமென்றாள்
மதுரைமீனாட்சியம்மன் வாழ்மதுரைசொக்கரே
ஆபத்தைதீர்க்கவே ஆண்டவனைவாருமென்றாள்
தொழுதுவணங்கியே தோத்திரம்பண்ணுகுறாள்

சொக்கலிங்கரும் மீனாட்சியம்மையும் வருகிறது.

சொக்கரதுவரிந்து திடுக்கென்றுதானெழுந்தார்
அங்கயற்கண்மீனாட்சி ஆச்சியருந்தானெழுந்தார்
அல்லவரைத்தானெழுப்ப ஆண்டவருந்தானும்வருவார்
மாயரதுவறிந்து வந்துவிட்டார்சொக்கரண்டை
என்னுடையமைத்துனரே எங்குநீர்போறீரோ
புருஷருந்தேவியுமாய் போறவண்ணமென்ன
அல்லியுடபாளையங்கள் அதமாய்மடிந்த[illegible]
கதண்டுகொட்டிசெத்தவர்க்கும் [illegible]புலம்பினாள்

அல்லவரைநானெழுப்ப ஆமோபோமோவென்றார்
மாயன்பெருமாளும் வார்த்தைகளேதுரைப்பார்
இதுவொருகாரியமாய் நீர்போமகாரணமேன்
அடியேனுலாகாதோ நானெழுப்பமாட்டேனோ
என்னாலேயாகாதோ எழுப்பிவிடமாட்டேனோ
மயிர்க்கால்முறியாதே மாதரிடசேனையெல்லாம்
எழுப்பிவிடுகிறேன் ஈஸ்வரகோதப்பாது
அரண்மனைக்குப்போங்களென்று அனுப்பிவிட்டார்மாயவரும்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அருச்சுனரை யழைப்பது.

சேரும்புராசாக்கள் சிறையிலேவைத்துவிட்டார்
அச்சுதானந்தரும் அல்லிநல்லவேளையிலே
காலையில்தானெழுந்து கால்கைகள்சுத்திபண்ணி
பூங்காவனத்திற்குப் போகிறவேளையிலே
மாயன்பெருமானை கண்டுவணங்கினார்
ஆயன்பெருமானை அடிபணிந்தாரெல்லவரும்
வாள்விசயனெங்கேயென்று மாயவனார்கேட்கலுற்றார்
அம்பரவருச்சுனனெங்கேயென்றார்மாயவரும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளுக்கே
சதுரங்கமாடியே இருக்கிறான்தேர்விசயன்
வாள்விசயர்கோமானை வரவழைத்துவாருமென்றார்
அவ்வார்த்தைகேட்டுமவர் அச்சுதருமோடிவந்தார்
அருச்சுனனுந்தேவியரும் ஆசாரவாசலிலே
சொக்கட்டாடுகிற வேளையில்தோழனவன்
கண்காட்டி தானழைத்தான் காண்டீபனருச்சுனனை
சைகையைத்தானறிந்து தேர்விசயன்தானெழுந்து
பூசைபண்ணிவாரேனென்று போய்நடந்தானருச்சுனனும்
அரண்மனைகளேழுகட்டு மந்தப்புரங்கடந்து
தெத்துகடந்து தெருவீதிவந்தபின்பு
ஆணழகனருச்சுனரே அரிராமர்வந்தார்காண்
மாயன்பெருமாளும் வரவழைத்தாருன்னையென்றார்
எங்கேயிருக்கிறார் எம்பெருமாள்சொல்லுமென்றார்
பிள்ளையார்கோவிலண்டை யிருக்கிறார்வாருமென்றார்

அருச்சுனன் வருவது.

என்றதுகேட்டுமவர் யிளவிசயன்தான்பார்த்து
பூங்காவனம்புகுந்து புஷ்பமலர்பரித்து
மல்லிகைமுல்லை மலர்பரித்தோடிவந்து
மாயனிடபாதத்தில் வணங்கியேதெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரைக் குபுகுவென்றுதான்சொரிந்தார்
முக்காலடிபணிந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாழ்த்தியிருந்தமாயவரும்

ஸ்ரீகிருஷ்ணன் சொல்வது.

தம்பியருச்சுனனே மன்னுமெழுந்திரென்றார்
மூன்றுநாளாறு பொழுதிலேவ. வேளையென்று
[illegible]மந்திரமே மலரணையிட்டு வந்தீரோ வாள்விசயா
மற்றுமொருகன்னியரை மணமாலைசூட்டினாய்
மருடத்துரைச்சியவள் வளநாடிபொல்லாதாள்
வெட்டியெறிவாளே வீரமணிவாளாலே
கொல்லநினைத்தாளே கொம்பனையாள்மாதுகன்னி
வைகைநதியாள் வந்தாளேபடைகூட்டி
தண்டெடுத்துவந்தாளே தையலிளங்கொடியாள்
வடகோடிகானகத்தில் வந்துதண்டிறங்கியது
ஆயிரங்கூடாரம் அங்குவந்துபோட்டார்கள
என்செய்வீர்வாள்விசயா என்றார்பெருமாளும்

அருச்சுனன்சொல்வது.

ஆணழகுமன்னன் அருச்சுனனுமேதுசொல்வார்
மதிமயக்கமாச்சுதே மாயவரேயென்னசெய்வேன்
எங்கேயொளித்து இருப்பேன்காண் மைத்துனரே
நான்-எமலோகம்போவேனோ எழுலோகங்கண்டவனே
நான்-பிர்மலோகம்போவேனோ பெருமாளேசொல்லுமென்றார்
நீ-சிவலோகம்போனாலும் தேர்விசையாசாவே
நீ-பிர்மலோகம்போனாலும் போய்ப்பிடிப்பாளல்லியரும்
நீ-எமலோகம்போனாலும் இழுத்துவந்துசங்கரிப்பாள்
நீ-ஆகாயம்போனாலும் அம்புக்கிரையிடுவாள்
நீ-பாதாளம்போனாலும் போய்ப்பிடிப்பாளல்லியம்மாள்
இனியென்னசெய்வீர்காண் என்றார்பெருமாளும்
உன்-பாதாரவிந்தத்திலே பாகதிசேர்ந்திடுவேன்
நான்-செத்துமடிந்திடுவேன் ஸ்ரீராமரேயறிய
நான்-வல்லபிராணனை கல்லோடுமோதிடுவேன்
வேறேகதியில்லையென்று விழுந்தலறிக்கொண்டுவிட்டான்.

கிருஷ்ணர் இருவரையுமாண்டவர்போல்செய்தது.

ஆயன்பெருமாளு மருளாளரப்போது
எந்நாளுமுந்தனிடயிடியோடாபெந்தனுக்கு
உன்னாலேயென்னபாக்கியம் உன்பெலன்கண்டேனடா
என்றந்தமாயவரும் இருவரையுந்தானழைத்து
பவளநல்லகாட்டிலே பாரளந்தார்கூட்டிவந்து
அருச்சுனன்தன்னுயிரு மச்சுதனைதன்னுயிரும்
இருவர்உயிர்வாங்கி எம்பெருமாளடக்கிவைத்தார்
தக்கண்டுகொட்டிசெத்தவர்போல் கரியமாலன்பென்றார்
குடலைபிடுங்கியே குண்டிசரித்துவிட்டார்
[illegible]யுக்கிழித்து மனிக்குடலை[illegible]

குத்திசரித்து குடைகொல்லாக்கிதாங்கவிட்டார்
துண்டந்துண்டமாகத் துணித்தாரிருவரையும்
நாய்நரிகள் தீண்டாத நல்லிரும்புமேடையாமே
சக்கரத்தைத் தானெடுத்து அவரவர்காவல்வைத்தார்
பத்திரமாயிருவென்று பாரைக்காப்பிட்டாரு

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஓலையெழுதுதல்.

மற்றுமொருமரத்தடியில் வந்தபெருமானும்
செங்குருத்தோலை வாரிப்பதமாயவரும்
வண்ணக்குருத்தோலை வாரிப்பதமாயவரும்
பொன்னெழுத்தாணி பொருந்தவேகைபிடித்து
ஒப்பனையாகவே ஓலையெழுதினார்
சேரம்புராசாக்கள் சென்றெழுதம்பாவனைபோல்
வெற்றிமதயானை வீமனவன்தனக்கும்
நகுலசகாதேவ இருசாக்கர்பாவருக்கும்
மந்தாரக்குத்திபெற்ற மாயன்பெருமாட்டிக்கும்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பதிவிரதைத்துரோபதைக்கும்
ஆருயிரவரையன்மார்பாண்டியற்கும்
மருட்டுரைச்சியவள் வாழ்வரசியல்லியற்கும்
மேகம்பயின்றெடுத்த மின்னொளிநாயகிக்கும்
நாகங்கள்பின்றெடுத்த நாககன்னிமங்கையற்கும்
சோரவளநங்கை சுபத்திரைநாயகிக்கும்
ஊருபதயானை உத்தமர்கள் நூற்றுவர்க்கும்
அக்கத்தார்சுற்றத்தார் அனைவோருந்தானறிய
உறவின்முறைபாரும் உள்ளவருந்தானறிய
வெள்ளிக்கிழமையில் விடியவைவந்தநாழிகையில்
சேரம்புராசாக்கள் தலைவளிபட்டணத்தில்
பவளம்வெட்டப்போனிடத்தில் பார்த்திபனருச்சுனனும்
அச்சுதானந்த அன்புள்ளதோழனும்
கதண்டுகொட்டிமாண்டார்கள் கட்டழகனென்றுசொல்லி
சாவோலைதானெழுதி தலைப்பாகத்தில்கட்டினாராம்

ஸ்ரீகிருஷ்ணர் வெட்டியானுய் ஓலைகொண்டுபோகுதல்.

அப்போது-ஆயன்பெருமானும் அருளாகவேதுசொல்வார்
வெட்டியானைப்போலாக வேடங்கொண்டாரெம்பெருமாள்
கம்பளியைப்போர்த்து கையில்தடியெடுத்து
தோட்டியைப்போலச் சாவோலைதனைப்பிடித்து
ஓட்டம்நடையுமாய் ஓடுகிறாரெம்பெருமான்
அல்லிநல்லாள்தானிருக்கும் அவ்வழியேயாமாம்
கண்டாரேதோட்டிதனை கட்டழகியல்லியரும்
மனிதருமில்லாதே மயங்குமிந்தவழியிலே



ஸ்ரீகிருஷ்ணன் வெட்டியானாக ஓலைகொண்டுபோகுதல்.

அண்ணுபடாதோட்டியென்று அழைத்தாளேயல்லியரும்
ஏனம்மாளென்னையழைத்தீர் என்றவனுக்கெண்டனிட்டான்
எவ்வூருதோட்டிநீ எனக்காரியஞ்சொல்லுமென்றாள்
சோம்புராசாக்கள் சீமையின்தோட்டியென்றான்
சந்தவூர்புரிக்கு ஓலைகொண்டுபோறீர்காண்
குருநாட்டுசீமைக்கு போறேனம்மாகொம்பனையே
குருகுலவம்மிசத்தில் குந்திமகனருச்சுனனும்
தருமரிட தம்பியாம் தனஞ்சயனருச்சுனனும்
வெற்றிமதயானை வீமனுக்குத்தம்பியாம்
சோம்புராசாக்கள் துரைகளவர்பெண்ணை
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளை
பதினாறுநாளாச்சு பத்தினியைமாலையிட்டு
கதண்டுகொட்டிமாண்டுவிட்டான் காண்டீபனருச்சுனனும்
ஆசையினாலே அனுப்பினானென்னையம்மா
ஓலைகொண்டுபோறேன்காண் வுத்தமியேயென்றுரைச்சி
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிவயிறெரிந்து
ஓலையைத்தாரும் உத்தமனேபார்ப்போமென்றாள்
எந்திழையாள்முன்னெடுத்து ஈந்தான்மடக்கோலை
மடக்கோலைதானெடுத்து வாசித்துப்பார்த்தாளே
அதிலிருக்குமார்க்கமெல்லாம் அறிந்துபுலம்பலுற்றாள்
விரித்தாள்தலைகூந்தல்விட்டு விட்டெறிந்தாளம்பலத்தில்
அப்பிக்கொண்டாளடிவயிற்றில் அறைந்துகொண்டாள்திருமுகத்தில்
கோட்டைபிடிக்காற்போல் குத்திக்கொண்டாள்தன்வயற்றில்
பிச்சிக்கொண்டாள்மார்சனத்தை பிடித்துக்கொண்டாள்தலைமயிரை
கோவென்றசத்தமுடன் குமறிப்புலம்பலுற்றாள்
ஐயையோதெய்வமே அநியாயம்பண்ணீரோ
எங்கேயோவானம் இடிக்குதென்றிருந்தேன்
தப்பாதேயென்றன் தலையிலிடித்ததுவே
தன்னெடுத்துவந்தேனே சண்டையிட்டுப்போராட
உயிரோடிருந்தால் உற்றசண்டைபண்ணவேணும்
மடிந்தவர்தன்னுடனே வார்த்தைகேளெனக்கு
எம்பத்தாவைபறிகொடுத்து பாரினில்நிற்பேனோ
புருஷனைதானிழந்து பூமியிலேநிற்பேனோ
கூடமடிந்திடுவேன் குவலயத்தினில்லாது
மாண்டுமடிந்திடுவேன் வையகத்தினில்லாது
தீப்பாய்ந்துபோவேனென்று சொல்லியழுதாளே
உடன்கட்டையேறுவேனென்று உருகியழுதாளே
அண்ணுவேதோட்டியடா அழுதமைந்தன்தானேடா
மைந்தன்புலந்தினை பொறுத்திமென்னவனே
[illegible] குருநாடுவிசேதமென்றான்

பஞ்சவரைப்பெற்றெடுத்த பாவையாளென்மாமி
பாட்டியவள்கையிலே பாலனைப்போட்டியென்றாள்
அப்போதுதோட்டியவள் ஆரிழைக்கேதுசொல்வாள்
அம்மா-ஆண்மனைகளென்றால் அஞ்சுபேர்வாம்நாங்களம்மா
நான்-தந்தமடக்கோலை தையலேதாருமென்றாள்
மடக்கோலைதான்கொடுத்தாள் மாதயிளங்கொடியும்
ஓலையைக்கைப்பிடித்து உத்தமனுக்கீந்தாள்

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனப்போது
மாதாவைப்பார்த்து மைந்தனுமேதுசொல்வான்
அம்மா-நானையாரென்றால் அடித்தாய்பாவாய்மேலே
இப்போ-ஆறொன்றழுகிறீர் ஆனந்தவாழ்மாரி
புருஷன்மேல்சண்டைக்குப் போனபோதையாகத்தில்
நீ-தனையெடுத்துப்போனதினால் தனதுசெவ்வனோர்மாண்டுவிட்டார்
நீ-வரவொடுக்கப்போனதேனோ ஆவலைநீக்குஞ்சேர்க்கையோ
நான்-பவளாத்தேர்கேட்ட பாவமெல்லாமென்தாயே
கேளாமல்நானிருந்தால் சுகமாயிருப்பாரே
எனக்காகயிங்குவந்து என்தகப்பன்தான்மடிந்தார்
என்தகப்பன்தன்னுடனே என்னுயிரைநானுமடிப்பேனே
என்தகப்பனைமாண்டு இனியிருக்கேனோ பூமியிலே
நான்-இப்பவேயென்னுயிரை இழக்கிறேனென்மாதாவே
நான்-ஐந்துவயதம்மா அறியாதபாலனுக்கு
இந்தக்கதியெனக்கு ஈஸ்வரனார்கட்டளையோ
என்று-மண்ணில்விழுந்து மைந்தன்புரண்டழுதான்
அப்போ-மைந்தனழுகிற பரிதாபந்தான்பார்த்து
ஐயோசிவனேயென்று அழுகிறபாலன்தன்னை
நாயகியாள்சென்றெடுத்து நல்லதுகம்பியப்பா
அப்பாமகனே அறிவுள்ளகண்மணியே
இந்தவயதிலே ஈஸ்வரனார்கட்டளையோ
அறியாதபாலனுக்கு அமைத்தாரேயித்துயரம்
இப்போ-பழிகாரியானேனே பாலன்புலந்திரனே
என்று-ஆறாததுக்கமுடன் அழுதுகொண்டுதானிருந்தாள்

கிருஷ்ணர் தருமருக்கு ஓலைகொடுத்தது.

தோட்டியுமான துவாரகாபுரிவாசன்
சில்லென்றகாடுகள் செடிகள்வனங்கடந்து
காடுகடந்து கரியமலைதான்கடந்து
அண்ணாமலையிலசைந்துவருங்காவேரி
வண்டாமலைமரங்கள் வனங்களெல்லாந்தான்கடந்து
அங்கபத்திரிநாடு அடைந்தாரேதோட்டியரும்

அண்ணையடாதோட்டியென்று அழைத்தாளேயல்லியரும்
எனம்மாவெனையழைத்தீர் என்றவனுந்தெண்டனிட்டான்
எவ்வூருதோட்டிநீ எனக்கறியச்சொல்லுமென்றாள்
சோம்புராசாக்கள் சிறையிற்றோட்டியென்றான்
எந்தவூர்புரிக்கு ஓலைகொண்டுபோறீர்காண்
குருநாட்டுச்சீமைக்கு போறேனம்மாகொம்பனையே
குருகுலவம்மிசத்தில் குந்திமகனருச்சுனனும்
தருமரிடத்தம்பியாம் தனஞ்சயனருச்சுனனும்
வெற்றிமதயானை வீமனுக்குத்தம்பியாம்
சோம்புராசாக்கள் துரைகளவர்பெண்ணை
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளை
பதினாறுநாளாச்சு பத்தினியைமாலையிட்டு
கதன்டிகொட்டிமாண்டுவிட்டான் காண்டீபனருச்சுனனும்
ஆனையினாலே அனுப்பினானென்னையம்மா
ஓலைகொண்டுபோறேன்காண் வுத்தமியேயென்றுரைச்சி
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிவயிறெரிந்து
ஓலைதாரும் உத்தமனேபார்ப்போமென்றாள்
எத்திறைபானமுன்னெடுத்து ஈந்தான்மடக்கோலை
மடக்கோலைதானெடுத்து வாசித்துப்பார்த்தாளே
அதிலிருக்குமார்க்கமெல்லாம் அறிந்துபுலம்பலுற்றாள்
விரித்தாள்தலைகூந்தல்விட்டு விட்டெறிந்தாளம்பலத்தில்
அப்பிகொண்டாளடிவயிற்றில் அறைந்துகொண்டாள்திருமுகத்தில்
கோட்டைபிடிக்காற்போல் குத்திக்கொண்டாள்தன்வயற்றில்
பிச்சிகொண்டாள்மார்சதையை பிடித்துக்கொண்டாள்தலைமயிரை
கோவென்றசத்தமுடன் குமறிப்புலம்பலுற்றாள்
ஐயையோதெய்வமே அனியாயம்பண்ணீரோ
எங்கேயோவானம் இடிக்குதென்றிருந்தேன்
தப்பாதேவானம் தலையிலிடித்ததுவே
தண்டெடுத்துவந்தேனே சண்டையிட்டுப்போராட
உயிரோடிருந்தால் உற்றசண்டைபண்ணவேணும்
மடிந்தவர்தன்னுடனே வார்த்தைகளேனெனக்கு
எம்பத்தாவைபலிகொடுத்து பாரினில்நிற்பேனோ
புருஷனைத்தானிழந்து பூமியிலேநிற்பேனோ
கூடமடிந்திடுவேன் குவலயத்திலில்லாது
மாண்டுமடிந்திடுவேன் வையகத்திலில்லாது
தீப்பாய்ந்துபோவேனென்று சொல்லியழுதாளே
உடன்கட்டையேறுவேனென்று உருகியழுதாளே
அண்ணேவேதோட்டியடா அழகுமைந்தன்தானோடா
மைந்தன்புலந்திரனை மீந்திமன்னவனே
கொண்டுபோயென்மாமியிடம் குருநாட்டில்சேருமென்றாள்

பஞ்சவரைப்பெற்றெடுத்த பாவையாளென்மாமி
பாட்டியவள்கையிலே பாலனைப்போட்டியென்றாள்
அப்போதுதோட்டியவள் ஆரிழைக்குஏதுசொல்வாள்
அம்மா-அரண்மனைக்கென்றால் அஞ்சுவோம்நாங்களம்மா
நான்-தந்தமடக்கோலை தையலேதாருமென்றாள்
மடக்கோலைதான்கொடுத்தாள் மாதுயிளங்கொடியும்
ஓலையைக்கைப்பிடித்து உத்தமனுந்தானடந்தான்

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனப்போது
மாதாவைப்பார்த்து மைந்தனுமேதுசொல்வான்
அம்மா-நானையாவென்றால் அடித்தாயேபாவைமேலே
இப்போ-ஆரென்றழுகிறீர் ஆனந்தமாம்மாமி
புருஷன்மேல்சண்டைகளப் போர்வேதாவையகத்தில்
நீ-தண்டெடுத்துப்போனதனே தனஞ்செயனார்மாண்டிட்டார்
நீ-வாளெடுத்துப்போகலே அவனைத்துகந்தேசார்ந்தமே
நான்-படையாத்தீர்கேட்ட பாவைசொல்லைப்பெண்தாயே
கேளாமல்நானிருந்தால் சுகமாயிருப்பாரே
எனக்காகயிங்குவந்து என்தகப்பன்தான்மடிந்தார்
என்தகப்பன்தன்னுடனே என்னுயிரைநானுமடிப்பேனே
என்தகப்பன்மாண்டு இனியிருக்கேனபூமியிலே
நான்-இப்பவேயென்னுயிரை இழக்கிறேனம்மாதாவே
நான்-ஐந்துவயதம்மா அறியாதபாலனுக்கு
இந்தவிதியெனக்கு ஈஸ்வரனார்கட்டினாரோ
என்று-மண்ணில்விழுந்து மைந்தன்புரண்டழுதான்
அப்போ-மைந்தனழுகிற பரிதாபந்தான்பார்த்து
ஐயோசிவனேயென்று அழுகிறபாலன்றன்னை
நாயகியாள்சென்றெடுத்து நல்லதுகம்பியரோ
அப்பாமகனே அறிவுள்ளகண்மணியே
இந்தவயதிலே ஈஸ்வரனார்கட்டளையோ
அறியாதபாலனுக்கு அமைந்தாரோயித்துயரம்
இப்போ-பழிகாரியானேனே பாலன்புலந்திரனே
என்று-ஆறாததுக்கமுடன் அழுதுகொண்டுதானிருந்தாள்

கிருஷ்ணர் தருமருக்கு ஓலைகொடுத்தது.

தோட்டியுமான துவாரகாபுரிவாசன்
சில்லென்றகாடுகள் செடிகள்வனங்கடந்து
காடுகடந்து கரியமலைதான்கடந்து
அண்ணாமலையிலசைந்துவருங்காவேரி
வண்டாமலைமரங்கள் வனங்களெல்லாந்தான்கடந்து
துங்கபத்திரிநாடு துடர்ந்தாரேதோட்டியரும்

குருநாடுதேசத்தில் கொற்றவனும்போய்புகுந்து
அன்புடையதருமரவர் அரண்மனைக்குமுன்னேவந்து
கொற்றவனார்தருமரவர் கொலுவுக்குமுன்னேவந்து
கைகட்டிநின்றவனுங் கடுகெனவேகுதெண்டனிட்டான்
தயவாகத்தோட்டிமுகம் தர்மருந்தான்பார்த்து
யாருடையதோட்டிநீயென்றாரே அழகர்
நான்-சேராம்புராசாக்கள் தேசத்துத்தோட்டியென்றான்
இங்கேநீவந்ததென்ன எனக்கறியக்கூறுமென்றார்
சொன்னவுடனேயவன் சுருளோலைகைகொடுத்தான்

தருமர்முதலிய யாவரும்புலம்பல்.

மடக்கோலைகட்டவிழ்த்து வாசித்துப்பார்த்தவரும்
அதிலிருக்குஞ்செய்தியெல்லாம் அறிந்தாரேதர்மலிங்கம்
வாய்மூடிதருமரவர் வயிறெறிந்துபுலம்பலுற்றார்
மாளவோதம்பியரே உன்னையனுப்பிவைத்தேன்
செல்வத்திருமுகமே தேர்விசையனருச்சுனரே
என்-கட்டிக்கரும்பேநீ கருவிளமேயெங்கொளித்தாய்
தேடக்கிடையாத திரவியமேயெங்கொளித்தாய்
சுவரிலெழுதவொண்ணாச் சித்திரமேயெங்கொளித்தாய்
படத்திலெழுதவொண்ணா பார்த்திபாயெங்கொளித்தாய்
உன்னைப்பிரிந்துநான் இருப்பேனோபூமியிலே
நானெப்படிமனந்துணிந்து இருப்பேனோவாள்விசையா
என்றதுசொல்லியே யேங்கியழுகலுற்றார்
வெற்றிமதயானை வீமசேனன்கேட்டு
விம்மியழுதானே விழுந்துபுரண்டழுதான்
கூவியழுதானே கொற்றவனுமப்போது
நகுலனதுகேட்டு நலமுடனேயோடிவந்து
மடிந்தீரோஅண்ணாவென்று மண்ணில்புரண்டழுதான்
செத்துமடிந்தீரோ சிவலோகம்போனீரோ
மாண்டுமடிந்தீரோ வைகுந்தம்போனீரோ
உன்னையும்விட்டுநான் இருப்பேனோபூமியிலே
என்று-தரையிற்புரண்டழுதான் தாக்குடையநகுலனவன்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவன்தான்கேட்டு
அண்ணாவேயென்று அழுதுபுலம்பலுற்றான்
குந்தியம்மாள்தான்கேட்டு குஞ்சரமேயென்றழுதாள்
ஐயோமகனேயென்று அழுதுபுலம்பலுற்றாள்
பாஞ்சாலன்தன்மகளும் பத்தினியாள்துரௌபதையும்
மாரிழவுகொண்டு மயிரைவிரித்துக்கொண்டு
ஏங்கியழுதாளே இடைதாவடம்புரள
அன்னகரிலுள்ளோர் அனைவோருந்தானழுதார்
வர்த்தகரும்வாணியரும வருந்துக்கங்கொண்டார்கள்

திக்கெட்டுஞ்சிட்டெழுதித் தேசமெங்குநாட்டெழுதி
மாரிழவுகொண்டார்கள் மகாசேனையுள்ளவரும்
அங்கவர்கள் துக்கம் அழுதுவந்துகண்டார்கள்
எல்லோருங்கூடியே இறைந்தழுதுகூச்சலிட்டார்
கட்டியழுதார்கள் கடலிறையும்வெள்ளம்போல்
எல்லையளந்த எம்பெருமாள் தான்பார்த்து
குஞ்சிரிப்புகொண்டு குலுங்கமிகநகைத்து
நீங்கள்நடவுங்கள் என்றுரசேனைவர்னர்

தருமர்முதலியயாவரும் பவளக்காட்டிற்குவருவது.

அப்போது தருமலிங்கம் அவசரமாய்த்தானெழுந்தார்.
தம்பிமார்மூவரும் தானும்நடக்கலுற்றார்
குந்தியம்மாள் தானும் கூடநடக்கலுற்றார்
பத்தினியாள் துரோபதையும் மற்றுமுள்ளவேதியரும்
சங்கவதியம்மாள் தானும்நடக்கலுற்றாள்
பல்லக்கின்மேலேறி நடந்தார்பலபேரும்
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
சிங்கமுலாவுவனஞ் சிறுபுலிகள் தூங்குவனம்
யாளிகள்வாழுமந்த அவ்வனத்தைதான்கடந்தார்
மயிலோசைகேட்குமந்த மாந்தோப்புந்தான்கடந்தார்
அண்டரறியாத தண்டவனங்கடந்து
வேந்தரறியாத வெளிக்காடுதான்கடந்து
சந்திரசூரியர்கள் காணுவனங்கடந்தார்
அல்லியம்மாள் தானிருக்கு மவ்வனத்தில்தான்வந்தார்

தருமர் புலந்திரனையழைப்பது.

தாரார்புகழுடைய தருமர்பெருமாளும்
கண்டார்புலந்திரனை கண்மணிபுலந்திரனை
அப்பாபுலந்திரனே அழகுள்ளகண்மணியே
தேனேபசுங்கிளியே தெவிட்டாததெள்ளமுதே
கண்ணேநவமணியே கற்கண்டேசர்க்கரையே
சொக்கநாதர்கோவிலுக்குத் தூண்டாமணிவிளக்கே
என்-தம்பிபுலந்திரனே தனிவிசயன்புத்திரனே
வைகைகரைதனக்கு மண்சுமந்தசொக்கரே
ஆறாயிரம்பாண்டியர்க்கு அழகானபேரனையா
வாருமகனேயென்று வாரியெடுத்தணைப்பார்
தம்பிநீவாடாவென்று தருமரெடுத்துரைப்பார்
போரஞ்சாமன்னன் புலந்திரனுந்தான்பார்த்து
பெரியப்பாவென்று பிரியமுடன்கண்டனிட்டான்
அண்ணாவேயென்று அடிபணிந்துதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாரியெடுத்தணைத்து

வாழ்த்தியெடுத்து மகனைமடியில்வைத்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
மைந்தன்புலந்திரனை மன்னவனுந்தான்பார்த்து
என்-தங்கக்கிளஞ்சியமே தார்வேந்தர்பூஷணமே
அரியசிரோன்மணியே அருச்சுனனுரெங்கேயென்றார்

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
ஐயாவேநீர்கேளும் அடைவாச்சொல்லுகிறேன்
எங்கள்-பாண்டிவளநாட்டாளை பவளத்தேர்கேட்டேனப்பா
பாண்டிவளநாட்டில் பவளங்கிடையாது
எனக்குத்தோஷித்ததென்று எழுதியோலைவிட்டாள்
கனைதாங்கிபோச்சுதென்று கன்னியெழுதிவிட்டாள்
அப்போதுஐயரும் அவரிங்கேவந்தாரையா
ஐயரைநானும் பவளத்தேர்கேட்டேனையா
எடுத்துமடியில்வைத்து என்கண்ணேநல்லதென்றார்
எப்போவருவீரென்று யான்கேட்டேனையாவே
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
என்பேரிலாணையிட்டு எழுந்தருளிப்போனாரையா
சேராம்புகானகத்தில் செத்துமடிந்தாரையா
பவளத்தேர்கேட்டுநான் பழிகாரனானேனையா
சும்மாவிருந்தேனானால் சுகமாயிருப்பாரையா
ஐயாவேயென்று அலறினான்பாலகனும்
தாரார்புகழுடைய தருமராவர்கேட்டு
பாலன்புலந்திரனைப் பார்த்துபுலம்பலுற்றார்
அறிவுள்ளஐயாவே ஐயாவேயென்றழுதார்
வெற்றிமதயானை வீமனும்பார்த்தழுதான்
நகுலசகாதேவரென்னும் ராசர்புலம்பலுற்றார்
அங்கவர்களெல்லோரும் அழுதுபுலம்பலுற்றார்
தாரூர்புகழுடைய தருமர்பெருமாளும்
மதுரையாளுகின்ற மாதுமுகம்நோக்கி
மைந்தரும்நீருமாய் வந்ததென்னசொல்லுமென்றார்

அல்லியாசாணி சொல்வது.

பிறவாமுடிதரித்த பெண்ணரசிசொல்லலுற்றாள்
வந்தேன்மதிகுலேந்தேன் விதியினிடதன்வசத்தால்
முன்னேநடந்த முறையெல்லாம்சொல்லலுற்றாள்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனும்
பவளத்தேர்வேணுமென்று பலபேரைநான்கேட்டேன்
சேரும்புகானகத்தில் உண்டென்றார்செம்பவளம்
எங்களாலாகாது எடுத்துவருவதற்கு
அருச்சுனராசாவால் ஆகுமென்றுசொல்லவும்

மைந்தன்புலந்திரற்கு மகாபயம் வந்ததென்று
ஓலையெழுதியே வுத்தமரே அனுப்பிவைத்தேன்
அதனாலே அருச்சுனரும் ஐயரிங்கேவந்தாரை யா
பாலன்புலந்திரனும் பவளத்தேர்கேட்டேனையா
மூன்றுநாளாறு பொழுதிலேவாறேனென்று
மைந்தன்மேலாணையிட்டு மன்னவரும்போனார்காண்
பதினாறுநாளாயும் பார்த்தன்வரவில்லையென்றாள்
யாரோவுயித்தியங்கள் பண்ணுகிறாரென்றுசொல்லி
தண்டுதளமெடுத்து வந்தே தனஞ்சயரே
மதுரைப்படைத்தலைவர் மகாராசாத்தனையும்
யானைகுதிரைகளும் அண்டவொண்ணாச்சேனைகளும்
கதண்டுகுளவிவந்து கொட்டிமடிந்தது
மைந்தனும்நானும் மரம்போலநின்றுவிட்டோம்
என்று-தருமராசாபாதத்தில் தான்விழுந்துதெண்டனிட்டு
என்னசெய்வேனென்று ஏங்கிமிகவழுதாள்
மைந்தன்புலந்திரனை வைத்துவளர்த்திடுங்கள்
எடுத்துவளர்த்திடுங்கள் என்றந்த அல்லியம்மாள்
தீப்பாய்ந்துபோவேனென்று சொல்லிபுலம்பலுற்றாள்
பாருளுந்தருமலிங்கம் பார்த்துமிகவழுதார்
மோதிரக்கையை முகத்தோடேவைத்துக்கொண்டு
மெத்தப்புலம்புகிறார் வேந்தர்தருமலிங்கம்

கிருஷ்ணன் அர்ச்சுனன் இறந்துவிட்டதைக் காட்டுதல்.

எல்லையளந்ததொரு எம்பெருமாள்தான்பார்த்து
ஏன்காணழுகிறீர்கள் இப்பெரியகானகத்தில்
மன்னவரருச்சுனனார் மாண்டவிடங்காட்டுகிறேன்
என்றுசொல்லிமாயவரும் எல்லோரையுமழைத்துவந்து
வாள்விசயன்பிணத்தை வகையாகக்காட்டலுற்றார்

தருமர்முதலிய யாவரும்புலம்பல்.

தக்கபுகழுடைய தருமர்பெருமாளும்
விசையர்திருமுடியை வேந்தர்வரவழைத்து
காண்டீபன்தன்முடியைக் கண்மலரிலொற்றிக்கொண்டு
தம்பியடாவென்று தருமர்மிகவழுதார்
வீமரவர்பார்த்து மிகவும்புரண்டழுதார்
நகுலசகாதேவ ராசர்புலம்பலுற்றார்
அண்ணாவேயென்று அழுதுபுலம்பலுற்றார்
மந்தாரக்குந்தியம்மாள் மாதுபுலம்பலுற்றாள்
சங்கோதியம்மாள் பார்த்துப்புலம்பலுற்றாள்
பாஞ்சாலன்பெற்றெடுத்த பத்தினிதுரோபதையும்
என்னை-மாலிபி — மன்னவரை மந்திரியு கானகத்தில்

என்றந்தத்ரௌபதையும் ஏங்கியழுகலுற்றாள்
மதுரைத்துறைச்சி மாதுநல்லாளல்லியரும்
காண்டீபனருச்சுனனைக் கண்டுமனங்கொதித்து
பார்த்துமேமாரடித்துப் பைங்கிளியுந்தானழுதாள்
கூடமடிவேனையா கொற்றவனேயென்றுசொல்லி
மெத்தப்புலம்புகிறாள் மெல்லிநல்லாளல்லியரும்
அச்சுதன்தங்கை ஆரணங்குசுபத்திரையும்
என்-கண்ணனைமைத்துனனே காண்டீபனருச்சுனனே
உம்மைவிட்டுநான்பிரிந்து இருப்பேனோபூமியிலே
மாண்டுயிருக்கிறது மன்னவனேநீதியுண்டோ
இனியிந்தசிவனை இழக்கிறேனென்றழுதாள்
கோவென்றழுதாள் கோபாலன்தங்கையவள்
தேவிமாரெல்லோருந் தாந்தரமாய்த்தானழுதார்
போரஞ்சாமன்னன் புலந்திரனுமப்போது
அந்த-பாருளுந்தருமரைப் பார்த்தந்தபாலகனும்
ஐவருடன்கூட ஐயாவேநான்மடிவேன்
நான்கூடமடிவேனென்று குழந்தையழுகிறனும்
பாலனழுகிற பரிதாபந்தான்பார்த்து
மைந்தன்புலந்திரனை மன்னவருந்தான்பார்த்து
அறியாதபாலகனே அறிவுள்ளவப்பாவே
இந்தத்துயரமும் வருவானேனுந்தனுக்கு
இது-மாயர்மருத்துவமோ மன்னவனேநாமறியோம்
என்று-மைந்தனைத்தானிணைந்து மன்னவருந்தானழுதார்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்தழுதார்
நகுலசகாதேவ ராசாக்கள்தானழுதார்
முத்துமுடிதரித்த முருகுழலாள்புத்திரனை
கட்டியழுதார்கள் கடலுடைந்தவெள்ளம்போல்
கூட்டியழுதார்கள் கொம்பனைமாரெல்லோரும்

சோரம்புராசாக்கள் பவளக்கொடியாளை அருச்சுனராசன் எங்கேயென்று கேட்குதல்.

சோரம்புராசாக்கள் தெருவிலுலாவுகையில்
வடகோடிகானகத்தில் வருவானேன்கூச்சலென்று
ஐம்பதுபேருமாய் அரண்மனைக்குள்ளேவந்து
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
மாப்பிள்ளைரூபனும் மன்னவனுமெங்கேயென்றார்
பூசைபண்ணிவாறேனென்று போனாரவர்கானகத்தில்
வடகோடிகானகத்திலென்னமோகூச்சலென்று
அஞ்சலிலேதூதுவரை அனுப்பிவைத்தாரப்போது
அப்போதுதூதுவர்கள் அடுத்தார்களவ்வனத்தை



சேரம்புராஜர் வருவது.

மாப்பிள்ளைராயர் வைகுந்தஞ்சேர்ந்தார்காண்
பூசைபண்ணிவாரேனென்று போனாரவர் கானகத்தில்
வடகோடிகானகத்தி லென்னமோகூச்சலென்று
அஞ்சலிலேதூதுவரை அனுப்பிவைத்தாரப்போது
அப்போதுதூதுவர்கள் அடுத்தார்களவ்வனத்தை
மாப்பிள்ளைராயர் வைகுந்தஞ்சேர்ந்தார்காண்
ஓடிவந்தார்தூதுவர்கள் ஒருநொடிக்குள்ளாக
தூதுவரும்வந்து தொழுதுமேதெண்டனிட்டு
மாப்பிள்ளைராயர் வைகுந்தஞ்சேர்ந்தார்காண்
அவர்களுடசேனைகளும் அனைவோரும்வந்திறங்கி
கட்டியழுகிறார் காவகங்கொள்ளவில்லை

சேரம்புராசாக்கள் வருவது.

ஐம்பதுபேராசாக்கள் அபயம்சிவாயமென்று
அவரை-முன்னறியேன்பின்னறியேன் மும்மூர்த்தியானவரை
அனியாயமென்றுசொல்லி அருஞ்சிறையாவைத்தன்ன
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
ஐம்பதுபேர்ராசாக்கள் அவர்களிடதேவியரும்
எல்லாருங்கூடியே ஏகலுற்றார்கானகத்தில்
கானகத்தில்வந்து கதும்பிமிகவழுகார்

பவளக்கொடியாள் புலம்பல்.

கட்டியழுதார்கள் கடலுடைந்தவெள்ளம்போல்
அப்போ-பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பதினான்குதன்வருஷம் பாவிசிறையிருந்தேன்
இந்தப்பழமொழியா ஈஸ்வரரேயிங்குவந்து
என்னை-மாலையிடச்சொல்லி மயக்கமல்லோபண்ணீரே
அப்படியேமாலையிட்டேன் அருச்சுனரைநானுமிப்போ
அண்டமுலகளந்த ஆயர்பெருமானே
நீ-எத்தனைநாள்காத்திருந்தீர் என்னைச்சிறையில்வைக்க
எத்தனைபேராசாக்கள் வந்தார்கள்மாலையிட
நான்-யாருக்குமாலையிடேனென்றிருந்தேனிப்போது
அருச்சுனனைமாலையிட்டு அருஞ்சிறையானேனே
ஐயையோதெய்வமென்று அலறியழுகிறாள்
அப்போதுஎம்பெருமாள் ஆயரவர்பார்த்து
மதுராதுரையல்லியரின் மனதைக்கலக்கிவிட்டார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
உற்றுற்றுப்பார்த்து உளமுமிகக்கலங்கி
வாலைப்பிராயம் வயதுபதினாறிருக்கும
வேரிற்பவளம் பின்னுகிறகாந்தையைப்போல்

கோடிசூரியப்பிரகாசம் போலேயிருக்கிறாள்
இவைகளெல்லாங்காணாநிந்தாள் இளங்கொடியாளல்லியரும்
வில்விசயன்தோள்மேலே மாலையிட்டாளருத்தமியும்
நான்-நாணுதகாட்சியெல்லாங் கண்டோமிதுவெகுநாள்
பதினாறுநாளையிலே பாவிசிறைவைத்தார்காண்
என்றுசொல்லியல்லியரும் யேங்கியழுதாளே
தோராவடிவழகி துரோபதையுந்தான்கேட்டு
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளை
கட்டியழுதார்கள் கமலப்பூநாயகியை
அப்போது-ஐம்பதுபேரரசர்களு மவர்களுந்தானழவே
ஆருயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
எல்லோருங்கூடியே யிசைந்தழுதுகூச்சலிட்டார்
அங்கவர்கள் துக்க மடங்கினபிற்பாடு
தக்கபுகழுடைய தருமராசாவேதுசொல்வார்
இறந்தோராருச்சுனனு மினித்திரும்பப்போறதில்லை
மாண்டோராருச்சுனனு மப்படியும்வாறதில்லை
என்தம்பியைத்தான்தொடுத்து தகனங்கள்செய்யவேணும்
ஆராரைக்கூட்டி அனுப்புவதுசொல்லுமென்றார்
அப்போது அல்லியரும் அரசர்க்கெடுத்துரைப்பாள்
ஆதிநகர்த்தாவே ஐயாவேநான்பாவி
இவருக்குப்பொதுவல்லோ ஆரணங்குதுரோபதையும்
மேகத்தில்வந்துதித்த மின்னொளிநாயகியாள்
பார்ப்பான்மகளான பரிவுடையபோகவதி
நாகம்பயின்றெடுத்த நாககன்னிநாயகியும்
அச்சுதன் தங்கை ஆரணங்குசுபத்திரையும்
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அன்னநடைமாதர்களை அக்கினியில்தள்ளுமென்றார்
அப்போது-ஐம்பதுபேருமாய் அனைவருமோடிவந்து
தாரார்புகழுடைய தருமரடி வணங்கி
எங்கள்-ஐம்பதுபேரரசருக்கும் ஆண்டிருக்கப்பிள்ளையில்லை
நாங்கள்-ஐம்பதுபேரரசர்களும் அருந்தபசுபண்ணுகையில்
எங்கள்-யாவருக்கும்பிள்ளையில்லை என்றதனால்வானோர்
பவளக்கொடிமேலே யுண்டுபண்ணுப்பாலகியை
பிள்ளைகலியினால் பெண்ணென்றும்பாராமல்
பெண்ணென்றுசொல்லாமல் பிள்ளையென்றுநான்வளர்த்தேன்

மின்னேயென்றுசொல்லி பெண்மருட னருட்டினேம்
எண்ணடைச்சங்கோடியுண்டு மாலையிடவந்தவர்கள்
மற்றொருவர்கையில் மணமாலைதீண்டேனென்று
நித்தியசன்னியாகவே இராச்சியத்தையாண்டிருந்தாள்
பதினேருநாளாச்சு பாவிவந்துமாலையிட்டு
அப்படிப்பட்ட அரசரையனுப்பிவிட்டு
இயங்கியிருப்போமோ திருமகளைத்தானிழந்து
எங்களைக்கூடவே யிளவரசேதள்ளுமென்று
ஐம்பதுபேராசர்களும் அவர்பாதம்போய்ப்பணிந்தார்
தாரார்புகழுடைய தருமரவர்பார்த்துமல்லோ
பாராளுந்தருமரந்தப் பரிதாபம்பார்த்துமல்லோ
மோதிரக்கையை முகத்தோட மைர்ந்துக்கொண்டு
மகாராசர் தருமரவர் வயிறெரிந்துமனங்கலங்கி
என்னசெய்வேன்வாள்விசயா என்றுமிகவழுதவர்
அந்நேரவேளையிலே அரிராமரோதுசொல்வார்

ஸ்ரீகிருஷ்ணர் வைத்தியனுய்வருவது.

பாராளுந்தருமரிட பரிதாபம்பார்த்துமல்லோ
ஏழுமலையளந்த எம்பெருமானப்போது
எழுப்பிவிடவேணுமென்று யெம்பெருமாள்தானெழுந்து
மாயன்பெருமாளும் மனமகிழ்ந்துவாரார்காண்
மடிந்தமடிப்புகளும் மாணிக்கத்தொப்பைகளும்
பொன்னூல்பிதியடியும் பொந்திக்கோல்கைபிடித்து
வைத்தியன்போலாக மருந்துபையைதோளில்வைத்து
ஆரடாமன்னவனே யாரவர்கானகத்தில்
எவர்காணுமிங்கே இறைச்சலென்னகானகத்தில்
அப்போதருமர் அரசாளும்ராசதுரை
நாங்கள்-குருநாடுசீமை கூச்சல்வந்ததென்றுசொன்னூர்
தர்மரென்றுசொல்லுவார் நீதானோதார்வேந்தா
ஆமையாநான்தான் அவதிப்படுகிறேன்
மாண்டதொருமன்னன் மன்னவனேயார்காணும்

வைத்தியருக்கு தர்மர்சொல்லியது.

என்னேடேதான்பிறந்த எழில்விசயனர்ச்சுனர்காண்
மாண்டதொருமன்னர்க்கிந்த மாதவரெல்லாம்வரிசையென்றூர்
தாயாருங்குந்தியம்மாள் தங்கையவள்சங்கோதி
இவ்விருவர்தான்தவிர இயலானஐயாவே

மற்றதொருமாதரெல்லாம் மன்னனிடத்தனியர்கள்
சிவசிவாவென்றுசொல்லி திருச்செவியில்கையைவைத்து
அன்மூன்றுமில்லையோ கைலாசநாதருக்கு
என்றுஉலகளந்த எம்பெருமானைமுகுதி
வானவர்கள்தேவருக்கும் வைத்தியனென்காணும்
கதண்டுகொட்டிமடிந்தவனை எழுப்பித்தருவீரென்றார்
இறந்ததொருமன்னவனை யெழுப்பிவிட்டோமாகில்
எனக்கென்னகொடுப்பீர்காண் டென்றார்பெருமானும்

தருமர் சொல்வது.

அப்போதுதர்மர் அதிகமனமகிழ்ந்து
அப்படியேநீரும் எழுப்பிவிட்டீராமாகில்
அண்டகுருநாடு அடங்கலுமுமக்கென்றார்.
அப்படியேசொன்னாலாகாதுஐயாவே
எழுதித்தரவேணும் என்றாரேயெம்பெருமாள்
தாமமுடியார் தர்மரெடுத்துரைப்பார்
அந்தகருநாடும் ஐந்துபங்காய்பங்கிட்டு
நால்வரிடபங்கை நானெழுதித்தாரேனிப்போ
வில்லாளிபார்த்தன் விசயன்பிழைத்தாக்கால்
அவன்-தந்தானேயாமாகில் தாரேவந்தாவாங்கிக்கொள்ளும்
எல்லையளந்த எம்பெருமான்தான்கேட்டு
சந்தோஷப்பட்டு தன்மனதில்தானடக்கி
மதுரைநகராளும் மாதுமுகம்நோக்கி
உன்-பத்தாவைத்தானெழுப்பித் தாரேனுன்பங்கிலிவே
எனக்கென்னதருவாய் என்றாரேயெம்பெருமாள்
அப்போது அல்லி ஆரணங்குமேதுசொல்வாள்
என்-வாழ்பாண்டிநாடு மதுரைப்பதிமுழும்
என்-அந்தகநாடும் அடங்கலுமுன்னுதென்றாள்
அப்படிக்குச்சொன்னால் ஆகாதுஆரணங்கே
எழுதித்தரவேணும் என்றாரேயெம்பெருமாள்
அப்போதுஎம்பெருமான் அதிகமனம்பூரித்து
ஆயருமப்போது அர்ச்சுனரைச்சுற்றிவந்து
வளையத்திரைபோடும் என்றாரேயெம்பெருமாள்
வளையத்திரைநடுவில மன்னவனைக்கொண்டுவந்து
எடுத்துநிறுத்துமென்றார் பெம்பெருமாள்மேகவர்ணர்
எடுத்துநிறுத்தினார் யியலானமன்னவனை
பாலுடன்தேனும் பகர்ந்தெனப்பேசுமென்றார்

அப்படியேகொண்டுவந்து கொடுத்தார்களப்போது
வைத்தியர் சொல்வது.

ஓமம்வளர்த்தி உலகளந்தமாயவரும்
காயம்பட்டமேனியெல்லாங் கையாலேதான்தடவி
மற்றுமொருநினைவாய் மாயவருமேதுசொல்வார்
பெண்டுகளைப்பார்த்தாற் பொறுக்கமுடியாது
வசைபண்ணும்பெண்டுகளை உறுதிபண்ணிதாருமென்றார்
அப்படியேநல்லதென்று அரசாந்தர்மதுரை
கால்வேறுகைவேறாய் கடுகக்கிடத்திவைத்து
எமலோகம்போனவுயி ரிட்டுவந்தனிப்போது
வந்தொருசீவன் வைகுந்தம்போகுதுகாண்
எடுத்தடக்கிக்கொள்ளு மென்றல்லோஎம்பெருமாள்
எழுந்துநடந்தாரே எம்பெருமாள்மேகவர்ணர்
அப்போதுதர்மரவர் அவர்பின்னேகானடந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்பின்னோட
முன்னோடிவந்தவுடன் பெருமாளுநின்றல்லோ
செந்தாமரைபுட்பம் தேனிதழைநோக்கி
வாள்விசயனருச்சுனனை வதையொன்றும்பண்ணேனென்று
நிச்சயமாய்சொன்னால் நிசமாயெழுப்பிடுவேன்
என்றுரைக்கமாயவரு மேந்திழையுஞ்சொல்லுவாள்
எங்கள் ஆருயிரவர் ஐயமார்தம்மானை
அங்கயற்கண்ணம்மை அவருடையசீர்பாதம்
என்சீவனுள்ளகாலமெல்லாம் தீண்டேனருச்சுனனை
என்றுசொல்லமாது எம்பெருமாள்சம்மதித்து
சோரவளநங்கை சுபத்திரையைத்தான்பார்த்து
நீஎன்னசொல்லுமென்றார் நிகரில்லாமாயவரும்
எங்களண்ணனுடசீர்பாதம் அவரைநான்தீண்டவில்லை
அலைமோதுபாற்கடலில் பள்ளிகொள்ளுமச்சுதர்காண்
நீஇட்டதோராணை எனக்குமிகப்பாரமல்லோ
சூடாமணிக்கடகத்தில் இருக்கின்றதுசமது
அதை-விட்டுவிட்டாயானால் விசையனெழுந்திருப்பார்
மாட்டேனென்றுசொல்லி மறுத்தாள்சுபத்திரையும்
ஆ[illegible]றந்தாளே ஆரணங்குசுபத்திரையும்
அப்போ-பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
கோபந்தணலாகி கொம்பனையாளப்போது
[illegible]றப்போயில்லையோ வேல்பொருதுங்கண்ணாளே
உன்னொருத்திக்குமன்னர் உயிரிழந்துபோனக்கால்
நாங்கள்[illegible] மருந்துசிறைபடுவோமடி.

என்றுசொல்லியருச்சுன ராசனை தானெழுப்ப
பூதத்தைவிட்டாள் பொற்கொடியாள் சுபத்திரையும்

வைத்தியனுகியகிருஷ்ணர் அர்ச்சுனனையெழுப்புதல்.

அப்போதுஎம்பெருமா னங்கமிகக்குளிர்ந்து
அர்ச்சுனராசனை சுற்றிவந்துமாயவரும்
தட்டியெழுப்பினார் தனஞ்செயருச்சுனரை
அண்ணரிடபாதம் அடிவணங்கிதெண்டனிட்டான்
வாரியெடுத்து மார்போடேதானணைத்து
நீர்-வைகுண்டம்போனீரோ வாள்விசயார்ச்சுனரே
ஆகாயம்போனீரோ ஆணழகாவருச்சுனரே
என்று-கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
என்னையாவென்று தருமருஞ்சொல்லிக்கொண்டார்
அப்போதுவாள்விசைய னடிதொழுது தானெழுந்து
குந்தியம்மாள்பாதம் கொற்றவனுந்தெண்டனிட்டான்
குந்தியம்மாள்தானுங் கொற்றவனைத்தானெடுத்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டாள்
வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
விசையனருச்சுனனை வேல்பொருதுங்கண்ணாளன்
அவன்-கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
வேல்பொருதுங்கண்ணே விசையாநீஎங்கேபோனாய்
சீனிசருக்கரை செல்வமேயெங்குபோனாய்
என்றுமேவீம னிருந்தானகமகிழ்ந்து
நகுலசகாதேவர் இருசமுடிமன்னவர்கள்
அண்ணாவேயென்று அருச்சுனரைக்கட்டிக்கொண்டார்
பொங்கிமனமகிழ்ந்து புகழ்வேந்தர்தாமிருந்தார்
மைந்தன்புலந்திரனு மன்னவனுமப்போது
அர்ச்சுனர்பாத மடிவணங்கிதெண்டனிட்டான்
தெண்டனிட்டமைந்தனை தேர்விசையர்தானெடுத்து

அருச்சுனர் புலந்திரனைக்கேட்டது.

வாழ்த்தியெடுத்து மடியின்மேல்வைத்துக்கொண்டு
முகத்தோடேமுகம்வைத்து முத்தமிட்டுபாலகனை
என்தங்கமுடிபெற்ற தார்வேந்தன்புலந்திரனே
என்வந்தாயிங்கேயென்று யெழில்விசயர்தான்கேட்டார்

புலந்திரர் சொல்வது.

அப்போதுபுலந்திரனும் அர்ச்சுனர்க்குசொல்லலுற்றான்
குருநாட்டில்தானிருந்து கொற்றவரேநீங்களுந்தான்
மதுரைக்குத்தாங்கள்வந்து மன்னவரேயிப்போது
பவளத்தேர்சொப்பனிட்டு கொண்டுவாரேனென்றுசொல்லி
மூன்றுநாளாறு பொழுதிலேவாரேனென்று
பதினாறுநாளாச்சு பார்த்தர்வரவில்லையென்று
[illegible] நல்லாளல்லியரும [illegible]

அந்த-தாமமுடியாளும் தண்டுதளமெடுத்து
எங்களையர்போனவழி யிதுதானோவென்றுகேட்டேன்
ஐயரொன்றுசொல்லவே அடித்தாளவாய்மேலே
அப்படிகோபமாய் வரும்போது அல்லியரும்
சேரம்புகானகத்தில் சென்றோம்தளத்தோடே
தண்டுதளங்களெல்லாந் தாபரித்துயாமிருந்தோம்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
சேரம்புகானகத்தில் சேவிக்கும்வேடர்வந்தால்
அந்த-வேடுவரையப்போது வேந்தர்கள்தான்பிடித்து
மாதுயிருக்கும் மயிலனையாள்கூடாரம்
கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவரும்வேடுவரை
மதுரைநகராளுமெங்கள் மாதுநல்லாளப்போது
நீங்களார்காணுமென்று அல்லியருங்கேட்கலுற்றாள்
சேரம்புகானகம் சேவிக்கும்வேடரென்றார்
இது-யாருடையசீமையென்று அருங்கிளியாள்கேட்டாளே
பவளக்கொடியாளின் பைங்கிளியாள்சீமையிது
என்றந்தவேடுவரும் ஏந்திழைக்குச்சொன்னார்கள்
அப்போதுமாதுநல்லா ளல்லியருஞ்சொல்லலுற்றாள்
மாதுநல்லகன்னியர்க்கு மணமாலையாச்சுதடா
பதினறுநாளாச்சு பைங்கொடியைமாலையிட்டு
ஒக்கவொருவ னுயிர்த்தோழனவன்தான்
அவருக்குமணமாலை ஆச்சுதுஅம்மாளே
என்றதுகேட்டாள் இளங்கொடியும்அல்லியம்மாள்
கதும்பியெழுந்திருந்தாள் காட்டானைபோலாக
அப்படியாவென்று ஆரணங்குமப்போது
கோபந்தணலாகி கொம்பனையுந்தானிருந்தாள்
கதண்டுகுளவிகளும் காவலனைத்தானுமப்போ
யானைகுதிரைகளை அடல்பெரியசேனையெல்லாம்
கொட்டிமடித்தது கொற்றவரெல்லாரையுந்தான்
மதுரைத்துரைச்சி மைந்தனைத்தப்பவிட்டு
அத்தண்டசேனையெல்லா மங்கேமடிந்தார்கள்
செத்துமடிந்ததை செல்வதியாள்தான்பார்த்து
ஈஸ்வரியேபார்வதியே என்றுபுலம்பலுற்றார்
மெத்தவிசாரமாய் மெல்லியருந்தாமிருந்தார்
சேரம்புராசாவின் தோட்டிஒருவன்வந்தான்
நீர்-எந்தவூர்போகின்றீர் என்றாளிளங்கொடியும்
குருநாடுசீமைக்குக் கொற்றவர்ஓலைகொண்டு
தருமர்க்குத்தம்பியராம் அவர்பொருச்சுனராம்
சேரம்புகானகத்தில் சென்றுமடிந்தாரங்கே
தர்மர்க்குஓலைகொண்டு வந்தேனென்றான்சாம்புவனும்
அப்போதுமாது அலரிமிகவழுதாள்

அடித்துப்புரண்டழுதாள் அன்னநடையாளும்
என்னசெய்வேனென்று ஏங்கியழுதாளே
குருநாட்டுச்சீமையிலே கொற்றவனுந்தேவியரும்
மாண்டயிடத்துக்கு மன்னவர்களெல்லோரும்
எல்லோரும்வந்தார்கள் இறைச்சலிட்டுதானழுதார்
அதனாலேயிங்குவந்தோம் ஐயாகேளென்றுசொன்னான்
பாலன்சொன்னவார்த்தையெல்லாம் பார்த்திபன்கேட்டானே
மெத்தஅதிசயமாய் வேந்தர்கள்தாமிருந்தார்
அப்போதுபெண்களெல்லாம் அதிகமனமகிழ்ந்து
அர்ச்சுனன்தேவிமா ரெல்லாருந்தானெழுந்தார்
தருமரிடபாதஞ் சாஷ்டாங்கந்தான்பணிந்தார்
தெண்டனிட்டமாதர்களை சீர்பெறவேவாழ்த்தினார்
தம்பிமார்வந்து தாளிணையைப்போற்றிசெய்தார்
கண்டுகளிகூர்ந்தார் காண்டீபனருச்சுனனை
அப்போது அல்லியரு மர்ச்சுனனைத்தான்பார்த்து
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடியாளப்போது
மூன்றுநாளறுபொழுதில் வாரேனென்றீர்சுந்தரரே
பதினாறுநாளாகப் பார்த்திருந்ததினால்
தண்டுதளமெடுத்து கார்குழலும்வந்தேனிங்கே
காண்டீபருச்சுனரே காளையரேயும்மையுந்தான்
அலைகடல்பள்ளிகொள்ளும் ஆயனுந்தானறிந்து
என்னசெய்வாளோ என்றுமனதிலெண்ணி
இவ்விதம்பண்ணினால் இளங்கொடியுமேது செய்வாள்
என்று-மாயவனார்செய்த மயக்கமிதுவென்றிருந்தேன்
அப்போது-எல்லவருங்கூடியே யிருக்குமந்தவேளையிலே
சேராம்புராசாக்கள் எல்லோருந்தானெழுந்து
தர்மரைத்தான்வணங்கி சாஷ்டாங்கதெண்டனிட்டு
எங்கள்-வளம்பெரியபட்டணத்தை வன்மையாய்நீபார்க்க
எல்லவரும்வாருங்கள் எங்கள்மேல்தயவுவைத்து
சாஷ்டாங்கமாகவே தெண்டனிட்டாராசாக்கள்

தர்மர்முதல் அனைவரும் அரண்மனைக்குப்போகுதல்.

அந்தப்பட்டணத்தைநோக்கி பரிவுடனேதான்வந்தார்
அப்போதுதர்மதுரை அதிகமனமகிழ்ந்து
எல்லவர்களுங்கூடி ஏகரித்துதானடந்தார்
போனார்களெல்லோர்கள் பொங்கிமனங்குளிர்ந்து
போனார்கள்நால்வருமாய் பொற்கொடியாளரண்மனைக்கு
பாராளுந்தருமருக்கு பவளக்கொடியாளும்
மாணிக்கசிங்காசனம் மன்னருக்குசோடித்து
குருநாடுஆளுகிற கொற்றவரேயிருமென்றாள்
வெற்றிமதயானை வீமதுரைராசருக்கு
நவரத்தினசிங்காசனம் நலமுடனேசோடித்து

இதன்மேலிருவென்று இளங்கொடியுமப்போது
காமக்கொடியுடைய காதலனவன்றனக்கு
சிங்காசனமதுவிட்டு வீற்றிருவென்றப்போது
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவராசருக்கு
பொன்னிழைக்குழைத்த சிங்காதனம்போட்டு
இதன்மேலிருவென்று இளங்கொடியாளப்போது
புலந்திராசனுக்கும் போட்டார்சிங்காதனங்கள்
எடுத்துமவன்வைத்து இருமையாதம்பியரே
என்றுமவள்சொல்லி இளங்கொடியுமப்போது
விசயனார்தேவியற்கு விதவிதமாய்வார்த்தைசொல்லி
அவரவர்க்குத்தக்கதோ ராசனங்கள்போட்டுவைத்தார்
அப்போது-தேவிமாரெல்லாருந் திறமுடனேதானிருந்தார்
பார்த்திபனருச்சுனனும் பள்ளியறையுட்புகுந்து
அப்போது-பாராளுந்தருமதுரை பார்த்துமனமகிழ்ந்து
இந்த-மாதுநல்ல கன்னியவள் மரியாதையுள்ளவள்காண்
இறப்புக்கும்பிறப்புக்கும் இனியொருபெண்வேணுமோ
என்றுமனங்குளிர்ந்து இருந்தார்சந்தோஷமாக
மதுரைத்துரைச்சியரும் மணம்பொருந்தியல்லியரும்
மாதினுடபட்டணத்தில் மகாசேனையுள்ளதெல்லாம்
அரண்மனையிருபுறமும் ஆஸ்தானமண்டபமும்
பள்ளியறையெங்கும் பார்க்கமுடிபோகவில்லை
அந்தப்-பவளப்புதுமைகளைப் பார்த்தாளே அல்லியரும்
இடம்பெரியவாசலது எழுநூறுகாதவழி
தூணுக்குத்தூணுமங்கே தொண்ணூறுகாதவழி
ஆயிரங்காதவழி அழகானவாசலது
பவளக்கால்சொப்பனிட்டு பாங்காயலங்கரித்து
பொற்றூணுங்கற்றூணும் குங்குமகற்றூணும்
தூணுக்குத்தூணுமங்கே தூண்டாவிளக்கெரிய
குளிர்ந்ததங்கத்தூணும் குங்குமகற்றூணும்
தூணுக்குத்தூணுமங்கே தூண்டாவிளக்கெரிய
இட்டிருக்குமாசனமும் மேன்மணிச்சிங்காசனமும்
வாடாததாமரையும் வந்துநிழல்காட்ட
முத்துமரகதமும் முழுபவளத்தூணுமங்கே
தங்கத்தால்பொம்மைகளும் தனிவயிரமாலைகளும்
வாழைகமுகுகளும் வண்ணபலாச்சோலைகளும்
சேலைகட்டி செம்பவளத்தாணிருத்தி
நின்றவிடந்தோறும் நிலைதோரணசப்பரமும்
கண்டவிடந்தோறும் கண்ணாடிமாலைகளும்
காடைவிளக்குகளுங் கைவிளக்குதேர்விளக்கும்
தாமமுடியானுக்குச் சப்பரநல்விளக்கும்
பவளப்புதுமைதனை பார்க்கமுடியாது

கண்டவிடந்தோறும் கனத்தபவளமாலை
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகிக்கு
எங்கும்பவளமா யிருக்குதாம் மனைக்குள்
அப்போது-பங்கயஞ்சீர்கண்ணன் பைங்கிளியாள்பார்க்கையிலே
அந்தப்-பவளநிறமும் பாரித்தகண்ணழகும்
சோதியழகுமவள் தூயமுகத்தழகும்
அவள்-வடிவழகுமொப்பனையும் வையகத்தில்கண்டதில்லை
இந்த-மாதினிட உபசாரணை மரியாதைதான்பார்த்து
மதுரைநகரையல்லியரும் மனங்குளிர்ந்தப்போது
பவளக்கொடியாளை பைங்கிளியைத்தான்பார்த்து
வாருமிங்கேவம்மாவென்று வார்த்தைமிகப்பேசி
பாஞ்சாலன்பெற்றெடுத்த பைங்கிளியாள் துரோபதையும்
அலைகடலிற்பள்ளிகொள்ளும் அச்சுதனார் தங்கையரும்
கொம்பனையாமெல்லோரும் கூடியணைபாடினார்கள்
மாமியார்குந்தியம்மாள் மருமகளைத்தான்பார்த்து
என்-கண்ணானமங்கையரே எட்டமுடியாதென்று
மார்போடேதானணைத்து மருமகளைமுத்தமிட்டு
என்-அறிவுள்ளநாயகமே அழகுமுடிபொறுத்து
என்று-திருஷ்டிகழித்தார்கள் தேன்மொழிக்கப்போது
எட்டுநாளங்கே யிருந்தார்கள்யாவருமாய்
விருந்துகள்பண்ணியே வெகுமானந்தான்கொடுத்து
பவழத்தாற்பல்லக்கு பாரித்தார்யாவருக்கும்

பவளக்கொடியாள் புலந்திரனுக்குச்சொல்லுது.

பங்கயஞ்சீர்கண்ணன் பவளக்கொடியாளும்
மைந்தன்புலந்திரனை மடிமேலெடுத்தணைத்து
என்-கண்ணானகண்மணியே காண்டீபன்தன்மகனே
குருநாட்டையாளுகிற கொற்றவர்கள் தன்மகனே
தங்கமுடிபெற்ற தனஞ்சயனார்புத்திரனே
நவரத்தினபொன்முடியே நாயகியாள் தன்மகனே
என்று-கண்ணோடேதானணைத்து கனிவாயைமுத்தமிட்டு
வாரியெடுத்து மடிமீதில்வைத்துக்கொண்டு
மதுரைநாடாளுகிற மாதுதுரைமகனே
என்று-பவளக்கொடியாளும் பைங்கிளியாளே தான்சொல்வாள்
என்-தங்கக்களஞ்சியமே தார்வேந்தர் தம்பியரே
உந்தனைத்தொட்டு உண்மைபொலாச்சுதையா
நீ-பவளத்தேர்வேண்டியே பத்தாவைக்கேட்டதினால்
எம்முடன்-பத்தாவுமிங்குவந்து பாலித்தார்கானகத்தில்
நான்-கானகத்தில்வேட்டைவந்தேன் கண்டுவிட்டார்பார்த்தவர்
அங்கிருந்தேதாழனும் அழுகிறதைக்காதுகேட்டு
என்தாதியரை-போய்வாருமென்று சொன்னேனேஐயாவே

தாதியவள்பார்த்து தார்குழலாளோடிவந்து
ஆரோதெரியாது அரசர்படையென்றவர்போல்
காணுகுதுஎன் தாயே கடுகெனவேபோகவேணும்
என்றதுசொல்லவே யேறினேன்தண்டிகைமேல்
அப்போதுபோயிறங்கி அவளைநான்பார்த்தேனப்பா
என்-மார்பின்சரப்பளியை வாங்கியேநான்போட்டேன்
தாதியரைக்கட்டுமென்று தண்டிகைமேல்வந்துவிட்டேன்
கட்டியேதாதியருஞ் சடுதியேயோடிவந்தாள்
அப்போ-மார்பின்சரப்பளியை வாங்கிவரச்சொன்னேனையா
தாதியவள்போய் சரப்பளியைக்கேட்டாக்கால்
தருகிறதில்லையென்றார் தனஞ்சயனப்போது
தாதியவள்வந்து தருவதில்லையென்றாளப்பா
அப்போதரண்மனைக்கு வந்துவிட்டேனப்பாநான்
கொலுமுகச்சாவடியில் கொம்பனையுந்தானிருந்தேன்
அன்னவடிவெடுத்து வந்தார்கொலுமுகத்தில்
அவர்-ஆடலும்பாடலும் அதிசயத்தைத்தான்பார்த்து
அவர்-கூவுகிறவோசைகளும் குயிலென்றுநானிருந்தேன்
நான்-அன்னமெனறுசொல்லி அணைத்துப்பிடித்துவந்து
தாதியரைத்தானழைத்து தையலவள்கைகொடுத்தேன்
கூண்டிலடையுமென்று கொற்றவனைச்சொன்னேனையா
அப்போது-அன்னவுருமாறி அர்ச்சுனனானாரையா
மன்னவனார்ச்சுனனும் மதிலைச்சூழ்ந்தாரே
மணமாலைசூட்டினார் மன்னவனைத்தம்பியென்றாள்
என்பத்தான்புத்திரனை பார்வேந்தர்கண்மானே
குருநாட்டையாளுகின்ற கொற்றவனார்தருமதுரை
வெற்றிமதயானை வீமதுரைராசர்
நாமக்கொடியுடைய நகுலனவன்றனையும்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவராசனையும்
இவரைப்பெற்றெடுத்த அம்மாவேகுந்தியம்மாள்
மதுரைநாடாளுகிற மாதுநல்லாளல்லியரும்
பாஞ்சால்நாயகியாள் பத்தினியாள்தேவியரும்
மாயவர்தங்கை மங்கைசுபத்திரையும்
விசயனார்தேவி மெல்லியர்கன்யாவரையும்
என்கண்குளிரப்பார்க்க வந்துதேகண்மணியே
இல்லாமற்போனால் யிவர்களையறியேனையா
என்றவள்சொல்ல என்றவருந்தான்கேட்டு
பொங்கிமனங்குளிர்ந்து பொற்கொடிமாரெல்லோரும்

பவளக்கொடியாள் புலந்திரனுக்கு பவளத்தேர்கொடுத்தது.

பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பவளத்தேரொன்று பாலனுக்குச்சொப்பனிட்டு

மெத்தவினோதமாய் வெகுவாயலங்கரித்து
மைங்கர்புலந்திறற்கு வேண்டியதுதான் கொடுத்தாள்
பல்லாக்கேர்மேலே பாலகனையேற்றிவந்து
திருஷ்டிகழித்தாளே தேன்மொழியாளப்போது
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
மாமியார்குந்தியம்மாள் மயிலணைக்கப்போது
பாதஞ்சரணமென்று பணிந்தாளே தேன்மொழியும்
மந்தாரக்குந்தியம்மாள் மருமகளைத்தானெடுத்து
வாழ்த்திவிடைகொடுத்து மங்கையருமப்போது
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
என்றுஞ்சிரஞ்சீவியாய் எந்நாளும்வாழ்ந்திருப்பார்
அப்போது-பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
பாருலகுக்கு மருக்குப் பாதஞ்சரணமென்றாள்
சாஷ்டாங்கமாகத் தையலருந்தான்பணிந்தாள்
வாழ்த்திவிடைகொடுத்தார் வீமதுரைராசாவும்
வெற்றிமதயானை வீமதுரைராசருக்கு
நகுலசகாதேவ நாமமுடிமன்னருக்கு
மைத்துனர்களிருவருக்கும் மாதுசரணமென்றாள்
ஏன்பத்தாவின்தேவிமா செல்லவர்க்குஞ்சரணமென்றாள்
தருமாபுரியாளுந் தனஞ்சயனப்போது
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாட்கு
வேண்டியவுடுப்புகளும் வேணதுயிலாடைகளும்
பொன்னாலலங்கரித்த பொற்பவளக்கண்டிகையும்
சந்தோஷமாகத் தையலர்க்குத்தான்கொடுத்தார்
என்னாளுஞ்சுகமாயிருந்தரசாளுமென்றார்
அப்போவிடைகொடுத்தார் ஐயருமங்கிருந்தார்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
விசயரந்த அர்ச்சுனரை மெல்லியருந்தான்பார்த்து
குருநாடுசீமைக்கு கொற்றவரேபோரீரே
பதினாறுதன்வருடம் பாவிசிறையிருந்தேன்
ஒன்றுமறியாமல் உத்தமியுநானிருந்தேன்
கோடானகோடியுண்டு கொம்பனையைகேட்டவர்கள்
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதில்லையையா
ஆரையுந்தீண்டேனென்று அருஞ்சிறைநானிருந்தேன்
எடுத்துப்பார்த்தவர்கள் ஏனென்றுகேட்டதில்லை
ஆருமில்லைவையகத்தில் அர்ச்சுனரேயென்றுசொல்லி
மணமாலையிட்டீரே மாயவர்தன்னருளால்
பதினாறுநாளையிலே பத்தாவேவளர்த்தையும்
செய்யாதகோலமெல்லாஞ் செய்துவிட்டீரர்ச்சுனரே
குருநாடுசீமைக்கு கொற்றவரேபோரீரோ

என்றுசொல்லிகன்னியரு மேங்கியழுகிறாள்
பொங்கியழுதுமே பொற்கொடியாளப்போது
மயங்கியேதானழுதாள் மயிலணையாளப்போது
அவளைப்-பார்த்தாருச்சுனரும் பாமுடியாளை
மயங்கியழுகிறதை மன்னவருந்தான்பார்த்து
பொங்கியழுகிறதை போர்விசயன்தானறிந்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
மாணிக்கத்துப்பட்டியால் மாதினி[illegible]ன்துடைத்து
நீ-அழவேண்டியகாரியமேன் அன்னப்பசுங்கிளியே
குருநாடுசீமைக்குக் கொற்றவனார்தம்முடனே
நானோடிறவாய் நாயகமேநான்போயி
அங்கேயெல்லோருஞ்சேர்ந்து இருக்குமந்தவேளையிலே
நானும்வருவேன் நாயகமேயென்றுசொல்லி
நான்-தங்குவேனோபூமியிலே தரிப்பேனோ அங்கேநான்
என்-சோதிமணிவிளக்கே துய்யவிளம்பிறையே
தேனேமணிவிளக்கே தெள்ளுமணியாளே
உன்னைப்பிரிந்துநான் யிருப்பேனோபூமியிலே
கடுகிவருகிறண்டி என்கூடமுகிநாயகமே
நான்-ஓடிவருவேண்டி ஒருநொடிக்குள்ளாக
காலால்நடவாமல் சாற்றுயவருவேண்டி
என்றதுசொல்லவே இளங்கொடிக்கு அர்ச்சுனனும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
அப்போதுஏதுசொல்வள் அன்னபசுங்கிளியும்
நான்-தங்கியிருப்பேனோ தரிப்பேனோபூமியிலே
நான்-என்னசெய்வேன்வாள்விசயா என்றழுதுக்கொண்டிருந்தாள்
இந்தக்கருத்துக்கோ என்னைவந்துமாலையிட்டீர்
இப்படியென்றிருந்தால் இணங்கேனமன்னவனே
எனக்கென்னகெதியாச்சு யென்றேயழுதுக்கொண்டு
ஈஸ்வரரேபார்வதியே யெனக்கென்னவிதிவிதித்தாய்
அண்டமுலகளந்த ஆயர்பெருமாளே
எல்லாருங்கூடியே யிருந்தீரேஎங்களுக்கு
இந்தகருமத்துக் கினியென்னசெய்வேனையா
என்றுசொல்லிமாது யிளங்கொடியாள் தானழுவே
காண்டீபனர்ச்சுனனும் காளையவனப்போது
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளும்
தங்கமுடிதரித்த தனஞ்சயனாயகமே
நான்-இங்கேயிருப்பேண்டி யிளங்கொடிநாயகமே
எனக்கும்பெரியவர் இயலானவீமரவர்
அவருக்குமூத்தவர் அழகானதருமலிங்கம்
இவர்கள்-போகட்டேன்றுநாமிருந்தால் பேச்சுக்கிடமல்லவா

பொறுக்கமுடி கூடாது புத்தியுள்ள நாயகமே
அடி-அதனாலே கண்ணே அலைமோறலாக
போய்வாரேன்பெண்ணே என்றானிளவரசன்
அப்போதுமாது அருங்கிளியுமே துரைப்பாள்
கடுகவருவேனென்று கட்டழகாயெந்தனக்கு
எனக்கொருநிச்சயங்கள் செய்துகொடுமென்றாள்
இல்லாமற்போனாலே இனிநம்பேனென்றுசொன்னாள்
காண்டீபனருச்சுனனுங் காளையவனேதுசொல்வார்
தர்மர்மேலாணையிட்டு தையலர்க்குத்தான்கொடுத்தான்
இனியானால்நம்புவையோ ஏலப்பசுங்கிளியே
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடியாளும்
மனதுகுழைந்தாளே மாதுநல்லாள்கன்னியரும்
அர்ச்சுனனுமப்போது அதிகமனப்பூரித்து
மாதுகையில்விடைபெற்று மன்னனடக்கலுற்றான்
அங்கேவிடைபெற்று ஐவருந்தானடந்தார்
மதுரைதிசைநோக்கி வருகிறார்துரைகளெல்லாம்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் அல்லியுட-
பாளயத்தை யெழுப்பிவிடுதல்.

அண்டமுலகளந்த ஆயர்பெருமாளும்
மதுரைத்துரைச்சி மகாசேனையுள்ளதெல்லாம்
கதண்டுகுளவிகள் கொட்டிமடிந்தவரை
சேனைபரிவாரம் சேனைகளுள்ளதெல்லாம்
யானைகுதிரைகளை அத்தண்டசேனையெல்லாம்
தட்டியெழுப்பிவிட்டார் தனஞ்செயனெம்பெருமாள்
தூங்கிவிழித்தாற்போல் துரைமார்கள்தானெழுந்தார்

தருமர்முதலியயாவரும் அவரவர்களிடஞ்செல்லுதல்.

எழுப்பிவிட்டமாயவனு ரேகினானப்போது
தருமபுரியாளும் தருமதுரையெல்லோரும்
குந்தியம்மாள்தன்னுடனே கொற்றவருந்தேவியரும்
எல்லவருங்கூடியே ஏகரித்துத்தானடந்தார்
அல்லிநல்லாள்பாளையத்தில் வந்தார்களப்போது
செத்துமடிந்ததொரு சேனைகளெல்லவரும்
எப்போதும்போல யிருக்கவேகண்டார்கள்
மதுரைத்துரைச்சி மனங்குளிர்ந்தாளப்போது
பாளையங்களுள்ளதெல்லாம் பயணங்களாச்சுதப்பா
ஆனைகுதிரைகளும் ஆள்பெரியசேனைகளும்

சேனைபவுந்துரகளும் சேனைகளெல்லவரும்
கொடிகள்கொடிச்சிலை குடைகளுஞ்சூழ்ந்துவர
யானைகுதிரையின்மேல் அடிபடுதுடங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்து ஓசைகிளம்புகுத
எக்காளஞ்சின்னம் எழில்பெறவேதூதுலனும்
பூரிகைடமாரம் பூமியதிருதங்கே
அல்லிப்பெருமாளும் அழகுபுலந்திரனும்
பாஞ்சாலநாயகியாள் பத்தினியாள்துரோபதையும்
மந்தாரக்குந்தியம்மாள் மாமியாருந்தான்கூட
ஆனையம்பாரிமேல் அனைவோருந்தானடந்தார்
பார்க்கமுடிபோகவில்லை பைங்கொடியாள்ராணுவங்கள்
காடுசெடிகள் கடுந்தணலாகுதங்கே
கல்லுகளும்முள்ளுகளும் கடுகிபொடியாகுதங்கே
கருந்தூளுஞ்செந்தூளுங் கதிரோனைக்கப்புதங்கே
பானையம்போகிற அதிசயத்தைத்தான்பார்த்து
காண்டீபனருச்சுனனும் காளையவன்தானினைந்து
இப்படிக்குஅதிசயமாய் இவள்வரக்காரியமேன்
இது-நமக்காகவந்து நம்முயிரைக்கொல்லவல்லோ
மாயன்பெருமாளும் மகாதேவர்தருமத்தில்
ஆயன்பெருமாள் அருளாளர்கிருபையினல்
நாம்-தப்பிப்பிழைத்தோம் தார்வேந்தர்தருமத்தால்
பாராளுந்தருமதுரை பாக்கியத்தால்வந்தோம்
இளங்கொடியாள்மாதருக்கு எதிரொருவரில்லையே
தப்பாமல்தலையறுப்பாள் தாமமுடியாளும்
பொல்லாதஅல்லியவள் போருக்கும்வல்லவள்காண்
மைந்தன்மேலாணை மறந்தபாவியென்றுசொல்லி
சத்தியந்தப்பினர் தார்வேந்தரென்றுசொல்லி
கழுமரத்திலேற்றி கடுஞ்சிறையில்வைப்பாளே
என்றுமனதினுள்ளே எண்ணினனர்ச்சுனனும்
அப்போ-எல்லோருங்கூடியே ஏகரித்துத்தானடந்தார்
அந்த-மதுராபுரியில் வாழ்வரசிபட்டணத்தில்
போனர்களேவருமாய் பொற்கொடியாளரண்மனைக்கு
அர்ச்சுனனர்தேவிமார் எல்லோரும்போய்நுழைந்தார்
இந்தப்பாராளுந்தர்மருக்கு மற்றுமுள்ளமன்னவர்க்கும்
சிங்காசனங்கள் சோடித்தாளப்போது
குருநாட்டையாள்தருமர் கூடவேதானிருந்தார்
ஐவரையும்பெற்றெடுத்த ஆரணங்குகுந்தியம்மாள்
பாஞ்சாலிநாயகியாள் பத்தினிதுரோபதையும்
மற்றுமுதல்தேவியெல்லாம் வாருமென்றுதானழைத்தாள்
அவரவர்க்குஆசனங்கள் போட்டாளேயல்லியரும்
அப்போது-மூன்றுநாளங்கே முடிமன்னர்தாமிருந்தார்

விருந்தமுதுசெய்து மெத்தவுபசரித்தாள்
எல்லவர்க்கும்வெவ்வேறாய் ஈந்தாள்வெகுமானம்
வெகுமானம்பெற்று விடைபெற்றுதானடந்தார்
அப்போது-பாராளுந்தருமதுரை பாலகனைத்தானெடுத்து
கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
நான்-போய்வாரேன்கண்ணே பொன்னின்புலந்திரனே
என்றுசொல்லிதருமர் இருமென்றாப்போது
வெற்றிமதயானை வீமதுரைராசாவும்
என்-அப்பாபுலந்திரனே அல்லிமகனே
என்-கட்டிக்கரும்பே காளைபுலந்திரனே
போய்வாரேன்கண்ணே புலந்திரராசாவே
என்றுசொல்லிவீமர் இருமென்றாப்போது
நாமக்கொடியுடைய நகுலரவர்பார்த்து
தம்பிபுலந்திரனே தார்வேந்தர்தம்பியரே
குருநாடுசீமைக்குகொற்றவனேபோய்வாரேன்
என்றவர்சொல்லி இருமென்றாப்போது
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவன்தான்பார்த்து
தங்கமணியே தார்வேந்தர்புலந்திரனே
குருநாட்டுசீமைக்கு கொற்றவனேபோய்வாரேன்
என்றவர்சொல்லி இருமென்றாப்போது
மந்தாரக்குந்தியம்மாள் மயிலனையாளப்போது
புலந்திரனைத்தானெடுத்துப் பெருக்கமனமகிழ்ந்து
ஐவர்கலிதீர்த்த என்னப்பாபுலந்திரனே
குருநாட்டையாளுகிற கொற்றவர்கள்தன்னுடனே
நான்-போய்வாரேனென்று புலந்திரனைமுத்தமிட்டு
இருங்காணுமன்னவரே என்றுசொன்னாள்குந்தியம்மாள்
அர்ச்சுனனார்தேவிமார் எல்லாருமப்போது
அப்பாபுலந்திரனே அதிரூபசித்திரமே
நாங்கள்-யாவரும்போய்வாரோம் என்றார்களப்போது
என்றுசொன்னாரப்போது இயலானதேவிமார்கள்
காண்டீபனருச்சுனனுங் காளையவனப்போது
மைந்தன்புலந்திரனை மன்னவனுந்தான்பார்த்து
போய்வாரேனென்றான் போர்விசையராசாவும்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறுவான்
அண்ணாவேநீர்போனால் வாரதில்லையையாவே

போனால்வருவதில்லை என்றாள்புலந்திரனும்
ஆனாலழகுமன்னன் அர்ச்சுனனுங்கூறுவான்
இன்னாளும்போலே இனியிருக்கமாட்டேனப்பா
கடுகவருவேனப்பா காளைபுலந்திரனே
நம்புவேனோவென்று நவின்றான்புலந்திரனும்
நம்பியிருவென்று நாயகனுஞ்சொல்லினான்
அல்லியரைப்பார்த்து அர்ச்சுனனுமேதுசொல்வான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமே
குருநாடுசீமைக்குக் கொம்பனையேபோய்வாறேன்
அப்போதுஅல்லியரும் ஆரணங்குதானமயங்கி
கண்ணீர்சொரியவிட்டாள் கட்டழகிப்போது
வேண்டாங்காண்மாதே விசாரப்படவேண்டாம்
மெய்யாய்வருகிறேன் மெல்லியரேநம்பென்றான்
இந்நாளும்போலே இராதேநீயங்கேயென்று
போய்வாருமென்றுசொல்லி பொற்கொடியுந்தெண்டனிட்டாள்
மாதுவிடைகொடுக்க வாள்விஜயன்தானெழுந்து
தருமருவ்வீமரும் தானடந்தார்பொட்டெனவே
காடுசெடிதாண்டி கரியமலைதாண்டி
பொல்லாவனங்கடந்து போய்ச்சேர்ந்தார்குருநாடு
அவரவர்களாசனத்தில் அமர்ந்தார்கள்பஞ்சவர்கள்
இந்தக்கதைதன்னை இவ்வுலகில்கேட்டவர்கள்
கேட்டோர்கிளைதழைத்துக் கீர்த்தியுடன்வாழ்க
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றமும் முசியாமல்வாழ்ந்திருப்பார்

வஞ்சி விருத்தம்.

வாழிவாழிவானவர் வாழிவாழிமாமறை
வாழிவாழிமாதவர் வாழிவாழிவையமே.

பவளக்கொடிமாலை

முற்றிற்று.

Stare

